# கலைச்செல்வி






அரசினர் ஆசிரியர் கலாசாலை,
மட்டக்களப்பு.


University of Jaffna
370.73
ARA
250048(AR; MAIN)

நல்லதோர் வீணைசெய்தே — அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ — இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி சிவசக்தி — நிலச்
சுமையென வாழ்ந்திடப்புரிகுவையோ?

— **பாரதி**

370.73
ARA AR.
2007

# கலைச் செல்வி

**1982**

**அரசினர் ஆசிரியர் கலாசாலை**

**மட்டக்களப்பு.**

250048

**GOVT. TEACHERS' COLLEGE**

**BATTICALOA.**

250048

ARCHIVES

University of Jaffna
250048
Library

## கலாசாலை அதிபரின்

# ஆசிச்செய்தி

மீன்பாடும் தேனூடாம் மட்டுமாநகரில் மாட்சியுடனும், எழுச்சியுடனும் கலைமணம் பரப்பி நிற்கும் கலைக்கூடங்களில் ஒன்றான எமது ஆசிரிய கலாசாலையின் பாரம்பரியப் பொக்கிஷமாகத் திகழும் 'கலைச்செல்வி' யானது இவ்வாண்டும் மிகவும் சிறப்பாக வெளிவருவது கண்டு மட்டற்ற மகிழ்வடைகிறேன்.

1980ம் ஆண்டு மூன்று வருடப் பயிற்சியினைப் பெறும் நோக்காக இக்கலாசாலைக்கு அனுமதிக்கப்பட்டு இவ்வருடத்துடன் பூரண பயிற்சியினை நிறைவுசெய்து வெளியேறும் ஆசிரிய மாணவர்களின் ஒருங்கிணைந்த உற்சாகத்தாலும், அயராத உழைப்பாலும் இம்மலர் வெளிவருவது யாவரும் பெருமைப்படக்கூடியதொன்றாகும்.


வழக்கம்போல எல்லாவித சிறப்பம்சங்களும் பொருந்தியதாகவும், கலாசாலைப் பணிகளின் பிரதிபலிப்பாகவும் வெளிவரும் இம்மலர் சிறப்புடன் மலரவேண்டுமென ஆசிகூறுவதோடு, இதை அழகுற அச்சுவாகனமேற்றுவதற்குப் பல வழிகளிலும் முன்னின்று உழைத்த அனைவருக்கும் என் நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரசினர் ஆசிரிய கலாசாலை
மட்டக்களப்பு.
12–12–1982.

சி. புலந்திரன்
அதிபர்.

GOVT. TEACHERS' COLLEGE
BATTICALOA.
250048
ARCHIVES

நூலகம்
பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்



எங்கள் அதிபர்

திரு. சி. புலந்திரன்

B. A. Dip – in – Ed.

ARCHIVES



முன்னாள் அதிபர்


மேஜர் சு. தர்மலிங்கம்

B. A. Dip - in - Ed



பிரதி அதிபர்

ஜனாப். M. S. A. அசீஸ்



முன்னாள் பிரதி அதிபர்

திரு. A. சுந்தரலிங்கம்

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
LIBRARY
RECEIVED
1983-1-20
PERIODICALS DIVISION

# MESSAGE

It gives me very great pleasure indeed to send this message to this year's issue of your magazine, "KALAI CHELVI" as I did last year. Through a period of nearly four decades your institution has been in the vanguard of the educational, social, cultural and religious advancement of the Tamil community of the entire Eastern Province.

The responsibility that is cast upon the shoulders of the teachers who pass out of this institution is very great for it is they who have to mould future generations to live and work together as useful citizens of Mother Lanka so that, as the years go by, all our children, to whatever community they may belong, may live in peace and harmony as equal citizens of a united Sri Lanka.

I have to commed the laudable co-operative effort of the Principal, the Staff and the Teacher-Trainees of the Batticaloa Government Teachers' College for their untiring activity both in the academic field and in their multi-faceted co-curricular programme.

I would like to express the hope that all those who pass out of your institution will become well-balanced and well-equipped teachers living up to the traditional ideal of the "GURU"

I wish you all success in your endeavours.

*S. H. D. Sumanasekera*
Director of Education,
(Teachers' Colleges - Administration)

## கிழக்குப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் அவர்களின்

# ஆசியுரை

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையினால் வெளியிடப்படும் ''கலைச்செல்வி'' என்னும் ஆண்டு மலர் இந்த ஆண்டும் அழகாக மலர்ந்துள்ளது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். ஆசிரியராகப் பயிற்சி பெறும் மாணவர்களதும், விரிவுரையாளர்களதும் அரும்பெரும் ஆக்கப்பாடுகளினால் அலங்கரிக்கப்பட்டு அறிவூட்டும் சாதனமாக இம்மலர் விளங்குகிறது.

தங்களிடத்தில் அடங்கியுள்ள சிறப்பியல்புகளை வெளிப்படுத்துவதற்கும், மற்றவர்கள் இவ்வியல்புகளை அனுபவிப்பதுடன் தாங்களும் இதுபோன்ற ஆக்க வேலைகளைச் சிருட்டிக்கவும் இம்மலர் உதவுகிறது.

''கலைச் செல்வி''யை வெளியிடுவதில் அக்கறை காட்டும் ஆசிரியர் கலாசாலையினர்க்கும், இம்மலரை வெளியிடும் குழுவிற்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள் உரித்தாகுக!

மு. ஷரீப்
கல்விப் பணிப்பாளர்,
கிழக்குப் பிராந்தியம்.

கல்விப் பணிமனை,
மட்டக்களப்பு,
7 - 12 - 1982.

## நினைவு கூருகிறோம்



## திரு. S. S. இராசதுரை

(முன்னாள் விடுதி மேற்பார்வையாளர்)

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 1922 – 07 – 13 | 1981 – 07 – 19 |



மலர் ஆக்கக் குழு

# கலாசாலைப் பணியிலே...

அதிபர் :

திரு. சி. புலந்திரன் B. A. Dip-in-Ed.

பிரதி அதிபர் :

ஜனப். எம். எஸ். ஏ. அசீஸ் Dip-in-Art, Drawing Teachers' Cert.

இணைப்பு விரிவுரையாளர்கள் :

திரு. கே. குணரெட்ணம் M. Sc. Dip-in-Ed.
திரு. கே. கனகசூரியம் B. A. Dip-in-Ed., 1st Class Sp. Sc. Trained.
திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை B. A. Dip-in-Ed
திருமதி வ. நடராஜா B. Sc. Dip-in-Ed.
திரு. என். நடராசா M. A. (Tamil)

பகுதி நேர விரிவுரையாளர்கள் :

திரு. ஆர். ஈ. ஜே. ஏ. சேதுகாவலர் B. Sc. Dip-in Ed.
திரு. கே. சிவபாலன் B. A. Dip-in-Ed.
திரு. எல். எம். ஜோசப் B. A. Dip-in-Ed
திருமதி. எஸ். செல்வரெத்தினம் B. A. Dip-in-Ed.
திரு. வ. கனகசிங்கம் B. A. Dip-in-Ed.
திரு. வீ. சிவசுப்பிரமணியம் B. A. Tamil Trained
திரு. ஐ. சாரங்கபாணி B. A. Tamil Trained
திரு. கே. தவப்பிரகாசம் B. Sc. (Hons.)
திரு. கே. அரியரெட்ணம் B. Sc.
திரு. ரீ. சண்முகரெட்ணம் B. Sc.
திரு. எஸ். டபிள்யூ. சோமநாதர் B. A. (English)
திரு. எஸ். அன்ரியாஸ் Dip-in-Phy. Ed., Sp. Tr.
செல்வி. தே. சிவசுப்பிரமணியம் Maths Trained
செல்வி. எம். ஜே. தம்பிநாயகம் English Trained
திருமதி. ஈ. சிவநேசன் English Trained
திரு. எஸ். டி. தங்கத்துரை Evangelist
வண. பிதா சுவாமிநாதன்
திருமதி. வீ. யோகநாதன் Phy Trained
திருமதி. ஐ. சங்கரப்பிள்ளை Tamil Trained
திரு. எம். பிரசாத் Agri. Trained
திரு. எஸ். இராஜூமுதலியார் (சங்கீத பூசணம்)
செல்வி. ஜே. ஸ்ரீபன்
செல்வி. ஆர். நடராசா

விடுதி மேற்பார்வையாளர்கள் :

திரு. K. சிவலோகநாதன்
செல்வி. வி. ஜோ. ஜெ. சு. இராசையா

எழுதுவினைஞர் :

ஜனப். எம். ரி. எம். ஜவாஹிர் B. A.

## எமது காலத்தில் கலாசாலையில் பணியாற்றி நீங்கியோர்:

அதிபர்:

திரு. சு. தர்மலிங்கம் B. A. Dip-in-Ed.
திரு. கோ. கோணேசபிள்ளை B. Ed. (Hons.)

பிரதி அதிபர்:

திரு. ஏ. சுந்தரலிங்கம் Dip-in-Agri. 1st Class Tr. (Agri.)

இணைப்பு விரிவுரையாளர்கள்:

திரு. எம். செல்வராசா M. A. (Phil) Dip-in-Ed.
திரு. கே. அருள்நாயகம் B. A. Dip-in-Ed.

பகுதி நேர விரிவுரையாளர்கள்:

செல்வி R. T. பாக்கியம் B. Sc. Dip-in-Ed.
திரு. ஆர். பாலகிருஷ்ணன் B. Sc. Dip-in-Ed.
திரு. எம். சிவபாலபிள்ளை B. A. Dip-in-Ed.
திருமதி. க. கமலநாதன் B. A. Dip-in-Ed.
திரு. எஸ். நாகேந்திரம் B. A. Dip-in-Agri.
திரு. ரி. பொன்னம்பலம் B. Sc., Maths Trained
திரு. எம். பவளகாந்தன் B. Sc.
திருமதி. எஸ். பத்மநாதன் B. Sc.
திருமதி. எஸ். பவளகாந்தன் B. Sc.
திரு. ரி. ஜெகநாதன் B. Sc.
திரு. எஸ். பரம்சோதி B. Sc.
ஜனாப். எம். ஐ. எம். மீராலெவ்வை Eng. Trained
திரு. எஸ். சரவணபவான் Eng. Trained
திரு. பி. பிறைசூடி 1st Class Tamil Trained
செல்வி. வீ. சரவணமுத்து
திருமதி. ஜே. பி. ஜேசுதாசன் B. T. Dip-in-Phy. Ed.

விடுதி மேற்பார்வையாளர்:

காலஞ்சென்ற திரு. சி. சா. இராசதுரை

எழுதுவினைஞர்கள்:

திரு. வி. தட்சணாமூர்த்தி
திரு. ரி. பிரான்சிஸ்

# அரசினர் ஆசிரியர் கலாசாலை
# மட்டக்களப்பு

## மலர் ஆக்கக் குழு
## 1982

காப்பாளர் : திரு. சி. புலந்திரன் (அதிபர்)

ஆலோசகர்கள் : ஜனாப். எம். எஸ். ஏ. அசீஸ் (பிரதி அதிபர்)
திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை (விரிவுரையாளர்)
திரு. கே. குணரெட்ணம் (விரிவுரையாளர்)

இணை ஆசிரியர்கள் : திரு. மா. லோகநாதன்
திரு. கோ. திரவியராசா

துணை ஆசிரியர்கள் : திரு. மா. நடராசா
திரு. சீ. ஜோ. தேவ்ஆனந்

உறுப்பினர்கள் : திரு. ஒ. குலேந்திரன்
திரு. கு. வன்னியசிங்கம்
திரு. பொன். இரத்தினசிங்கம்
திருமதி. யோ. பரசுராமபிள்ளை
செல்வி. பெ. அழகம்மாள்
செல்வி. ஞா. சிறிமதிதேவி
செல்வி. ஸ்ரீதேவி இராசையா
திருமதி. சா. சூசைதாசன்
செல்வி. க. பூபாலபிள்ளை
செல்வி. வி. செல்வநாயகம்

# எங்கள் எண்ணங்கள்.........

''எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்'' — பாரதி

காலத்தை வென்ற கலை இலக்கியங்கள் ஞாலத்தில் என்றும் மறைவதில்லை. உள்ளத்தில் எழும் உயிருள்ள உயர் படைப்புக்கள் உலகத்தை வாழவைக்கின்றன.

இந்தவகையில் பல அம்சங்களையும் தாங்கி, மட்டக் களப்பு ஆசிரிய கலாசாலையின் வரலாற்றுப் பாரம்பரியத்தைத் தழுவி, அதிபர், பிரதி அதிபர், விரிவுரையாளர்கள், இறுதி ஆண்டுப் பயிற்சி ஆசிரியர்கள் ஆகியோரின் முற்று முழுதான ஆதரவுடன் ''கலைச் செல்வி''யை பவனிவர வைப்பதில் பெருமை அடைகின்றோம்.

எத்தனையோ சாதிக்க எண்ணிய எம்மை, காலத்தின் அளவும், இக்கட்டான சில இடர்பாடுகளும், பரீட்சையின் பதகளிப்பும் இடர்க் கற்களாகத் தடுத்துவிட்டன. இருந்தும் வெளியீட்டுக் குழு ஆலோசனைகளினதும், தோழமை உறுப் பினர்களினதும், உறங்காத ஒத்துழைப்பு ''கலைச் செல்வி'' பவனி வர அலங்காரப் பந்தல் அமைத்துக் கொடுத்திருக் கிறது.

எமக்கு ஆதரவு நல்கிய அனைத்து நல் இதயங்களுக் கும், கலைச் செல்வி தன்னகத்தே அணிந்துகொள்ள ஆக்க அணிகலன்கள் வழங்கிய அன்பு நெஞ்சங்களுக்கும். ஆசியுரை கள் வழங்கிய கல்விப் பணிப்பாளர்களுக்கும, அதிபர் அவர் களுக்கும், குறுகிய காலத்தில் சிறப்புற அச்சிட்டு உதவிய கத்தோலிக்க அச்சகத்தாருக்கும் நிரந்தர நன்றி பகர்கின் றோம்.

இணை ஆசிரியர்கள்

# A MESSAGE

to the

## Out - going Teacher Trainees

I was a teacher at Batticaloa long years ago In fact I taught here last in 1958. Returning home this year, one of the first things I heard was that among the twenty-four educational districts in the Island, Batticaloa has been found to be last in standard of education. This is sad news and we owe it to ourselves to do something about it. It is particularly the responsibility of those of you who are leaving this College as trained teachers to reflect on what can be done to remedy this situation.

Our first impulse is to think of the fuller covering of syllabuses, better methods of teaching and testing and so on in this connection. These certainly have their place. There are, however, more fundamental matters. The word "education" is said to come from the Latin words ex (out) and duco (I draw). This etymology is sometimes disputed but it will serve our present purpose. To educate is to draw out. Education is the drawing out of the child what is already in him in an embryonic or undeveloped form. But we should remember that what is in the child is very much conditioned by the environment around him. To put the matter simply, education is most successful in the midst of an educated community. This takes us straight to the question of what an educated community is. I should say that an educated community is one that has got its values right. If the people around a child think that money and the power and position that can now be bought with cash are the chief ends of life, then the child is growing up in an uneducated community. No one should belittle money. Few of us can do without it. Yet the pursuit of money often leads to the throwing away of every decent value. Honesty is the first casualty as bribery begins to be seen as a very efficient instrument for the acquisition of place and position. Honour loses its meaning and the pupil living in such a community soon realizes that education is a slow, labourious and pretty inefficient way of getting the prizes of life.

Even if the pupil decides that it is worth his while to secure a University degree he soon discovers that entrance to the University can be got in two ways; by acquiring a sound knowledge of his Advanced Level subjects or, what is much easier, cramming notes and answers to past questions. When the student is in the University the same two options are open to him for obtaining a University degree. From time to time there are startling revelations in the newspapers of the

absurd answers that University graduates have given at interviews for jobs, even to questions in their degree subjects. In these circumstances it is small wonder that many pupils in the schools do not care to learn.

There are other evils that have crept into our society. One is drink. There have always been people who cannot face up to life without the Dutch courage that drunkenness gives. But in the past those who got drunk generally took care not to be seen drunk in public. Today things are different. We have bipeds who think it no disgrace to sink to the level of quadrupeds in public. The virtues of punctuality and conscientious work for pay received have largely disappeared. People who are paid to do work spend their time in the Canteen, at the carrom board, or reading the newspapers. Late-coming and early leaving are the order of the day.

There is no point in labouring matters that everybody is aware of. But is there anything that can be done to remedy these evils which are so Augean and which have taken so strong a hold on our society? People have seen these evils, quailed at their magnitude and decided to do nothing. However, in the fight against social evils victorym is not always won by a single massive assault. Says Shakespeare, "How far that little candle throws his beams! So shines a good deed in a naughty world." I am convinced that even if a few teachers in each school enter the struggle to save our society, their examples, shining like a little candle in a naughty world, will catch on and ultimately the rot can be stemmed. In any case, if the effort is not made in the schools, where the young are trained, there is little hope of betterment for society.

What can you teachers do? I do not think anything heroic is demanded of you. In fact what you should do, though potent in its likely effects, can be stated in a few words. Prepare your lessons well, devoting more time to thinking about them than to the writing of formal notes of lessons. As you teach, let the pupils realize that you attach great importance to what you are doing. Go to school in time. Take as little leave as possible. Outside your school behave as a respectable law-abiding citizen. It is best not to drink. But if you must, do not drink in the presence of your pupils and never get drunk. Tell your pupils occasionally about the higher ideals of life.

Every good wish for you and for education, particularly in our District.

*R. E. J. A. Setukavalar*



அதிபருடன் விரிவுரையாளர்கள்



உதைப்பந்தாட்டக் குழுவினர்

# கல்வியில் சொல்லும் செயலும்

கோ. நோணோசபிள்ளை
விரிவுரையாளர்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

கல்வி வரலாற்றை நாம் நோக்கும்போது சோக்ரட்டீஸ் வாழ்ந்த காலம் தொடக்கம் இன்று வரை பல விடயங்கள் கல்வியில் கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் உலக ரீதியாக நோக்கும்போது சொல்லப் பட்டுள்ளனவும், செயலில் உள்ளவையும் பெருமளவு வேறுபட்டுள்ள தன்மையை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இவற்றுள் சிலவற்றை நாம் நோக்குவோம்.

தண்டனையால் மனிதனைத் திருத்த முடியாது. மனிதனை ஊக்குவிப்பதுமூலம் தான் அல்லது வெகுமதிமூலம்தான் அவனைக் கற்கத் தூண்டலாம் என்பது பல ஆய்வுகளினால் எடுத்துக்கூறப்பட்ட உண்மையாகும். ஆனால் நமது பாடசாலைகளை எடுத்து நோக்கும்போது எந்த அளவுக்கு இந்தக் கருத்து பிரதிபலிக்கிறது? தண்டனை கொடுப்பதை ஒரு முக்கிய கடமையாகக்கொண்ட பல ஆசிரியர்கள் நம் மத்தியில் பணியாற்றுகிறார்கள். இப்படியான தண்டனைமூலம் பல மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகிவிடுகிறார்கள். சில பாடங்களையும் வெறுக்கிறார்கள். ஆனால் ஆசிரிய உலகம் தண்டனையை விட்டு வெகுமதியளிப்பதை அல்லது ஊக்கப்படுத்துவதை முக்கியமான தாகக் கருதுவதாகத் தெரியவில்லை. அதே வேளையில் பல்கலைக்கழகங்களிலும், ஆசிரியர் கலாசாலைகளிலும், சேவைக்காலப் பயிற்சிகளிலும் நேர் ஊக்குவிப்பதன் முக்கியத்துவம் அழுத்தப்படுகிறது.

எதையும் திட்டமிட்டால்தான் அதனுடைய நோக்கம் நிறைவேறும். ஆகவே கல்வியில் கற்பிக்கும் பாடம் திட்டமிடப் படவேண்டும். ஏற்கனவே ஆயத்தம்செய்யப் படவேண்டும் என்று கூறப்படுகிறது. இக் கருத்து பல்கலைக்கழகங்களிலும் ஆசிரியர் கலாசாலைகளிலும், சேவைக்காலப் பயிற்சிகளிலும் எடுத்துரைக்கப்படுகிறது. ஆனால் எத்தனை ஆசிரியர்கள் நடைமுறையில் தங்கள் பாடங்களை ஆயத்தம் செய்கின்றார்கள், திட்டமிடுகிறார்கள் என்று நாம் வினவ வேண்டியுள்ளது. மேற்பார்வை செய்வோரின் திருப்திக்காக ஏதோ ஒரு வகையில் பாடக்குறிப்பு எழுதப்படுவதையும் நாம் காண்கிறோம், பாடக்குறிப்பினுடைய முக்கியத்துவத்தை – அதாவது பாட ஆயத்தத்தினுடைய முக்கியத்துவத்தை எல்லா ஆசிரியர்களும் உணர்கிறார்களா? என்பதை நாம் சிந்திக்கவேண்டியுள்ளது.

கற்றலில் முன்மாதிரி ஒரு முக்கிய அம்சமாகும். அதாவது மாணவர்கள் ஏதோ ஒன்றை முன்மாதிரியாகக்கொண்டு கற்கிறார்கள். எனவே கற்பிக்கும் ஆசிரியன் ஒரு சிறந்த முன்மாதிரியாக அமைதல்வேண்டும். அதாவது மாணவர்கள் இவரது முன்மாதிரியிலிருந்து பல விடயங்களைக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்று கூறப்படுகிறது. ஆனால் கற்பித்தலில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் எந்த அளவிற்கு முன்மாதிரியாக அமைந்துள்ளார்கள். பாடசாலைக்கு நேரத்திற்குச் செல்லுதல், மாணவர்களின் அறிவை வளர்ப்பதில் ஆர்வம் காட்டுதல், கனிவாகப் பேசுதல், தனது பிழையை ஒத்துக்கொள்ளுதல், பிறரில் காணும் சிறப்புத் தன்மையைக் கண்டு வியத்தல், தனது அறிவை விருத்திசெய்தல் ஆகிய அம்சங்

களில் ஆசிரியர்கள் எந்த அளவிற்கு முன் மாதிரியர்க விளங்குகின்றூர்கள்?

''பிழைவிடுவது மனித சுபாவம் மன்னிப்பது தெய்வத்தன்மை'' என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டோம். ஆனால் கல்வி உலகிலே எத்தனை ஆசிரியர்கள் தமது பிழையை ஏற்றுக்கொள்கிறுர்கள். அதாவது ஒரு மாணவன் பிழைகள் விடின் அல்லது கற்றலிலே முன்னேற்றம் காட்டாவிடின் இதற்கு ஆசிரியர்களும் காரணம் என்று எத்தனைபேர் எண்ணுகிறுர்கள். அதே வேளை சகலதுக்கும் மாணவரிலேயே பிழைகளைப் போடுகின்ற எத்தனை ஆசிரியர்கள் இருக்கிறுர்கள்? என்றெல்லாம் நாம் வினவ வேண்டியிருக்கிறது.

அன்புதான் உலகத்தை ஆட்கொள்ளக் கூடியது என்பதை நாம் ஏற்றுக்கொண்டோம். ஆனால் இந்த அன்பை பாடசாலைகளில் எந்த அளவிற்கு நாம் காண்கிறேம். எதற்கும் அஞ்சி அஞ்சிச் செல்லும் மாணவர்கள், எதையும் குற்றக் கண்ணேடு நோக்குகின்ற ஆசிரியர்கள் நமது பாடசாலைகளை நிரப்புகின்றனர்போலத் தெரிகின்றது.

அன்புக்கு பாடசாலையில் இடமளிக்கப்பட்டால் பாடசாலைச் சுவாத்தியம் இன்பம் கொடுப்பதாக அமையலாம்.

இவைகளைக்கொண்டு நோக்கும்போது கல்வியிலே ஆண்டாண்டு காலமாக எத்தனையோ முக்கிய விடயங்கள் கூறப்பட்டு வந்திருக்கின்றன. மனித சமுதாயமும் இவைகளையெல்லாம் ஏற்றுக்கொண்டுள்ளது ஆனால் நடைமுறையில் இவை செயல்படாத காரணத்தினாலேயே நாம் பல சிக்கல்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

பாடசாலைகளில் கட்டொழுங்கு இல்லாமை, மனிதனை மனிதன் நம்பாமை, மனிதனை மனிதன் நேசியாமை, ஒரு மனிதன் மற்றவனை வாழவிடாமை ஆகியனவெல்லாம் எடுத்துக்கூறப்பட்ட உயரிய கருத்துக்களை நாம் நடைமுறைப்படுத்தாத காரணத்தினால் ஏற்பட்டவைதான். எனவே ஒவ்வொரு ஆசிரியனும் தம்மால் இயன்ற வரையில் சொல்லைச் செயலாக்கினால், இந்த உலகம் இன்றையைப் பார்க்கிலும் நாளை சற்றுச் சிறப்பாக அமையமாட்டாதா?

---

## அஞ்சாதீர்

காற்றும் இடைவெளியும் எதற்கும் அஞ்சுவதில்லை; மெலிவுறுவதில்லை. பெருவீரம் எதற்கும் அஞ்சுவதில்லை; மெலிவுறுவதில்லை. சாவும் அமுதத்தன்மையும் எதற்கும் அஞ்சுவதில்லை; மெலிவுறுவதில்லை. கடந்தகாலமும் எதிர்காலமும் எதற்கும் அஞ்சுவதில்லை; மெலிவுறுவதில்லை. இவைபோலவே நீங்களும் எதற்கும் அஞ்சாதீர்; மெலிவுறுதீர்; துணிவே வாழ்க்கை.

— அதர்வ வேதம்.

## கடினமானது

தன்னை அறிந்துகொள்வதே வாழ்க்கையில் கடினமானது.

— வேல்ஸ்.

# நெறிப்படுத்தும் ஆசிரியன்

அமுதமொழி பொழியும் அருமைமிகு மாணவர்கள்
ஆனந்த மெமக்கூட்டும் அன்பான பாலகர்கள்
நாளை நமதுலகின் நலன்பேணும் மேதையர்கள்
நாமும் அதையுணர்ந்து நல்ல பணி செய்திடுவோம்.

மதிமுக மலர்ச்சி கண்டால் வெண்மதியுமே நாணிடுமே - அவர்
மதிகண்டால் ஆசிரிய மனமெல்லாம் களித்திடுமே
விதியென்று அவர் குறையை விட்டிடவே வேண்டாம் யாம்
மேலதிக கவனிப்பால் மேல் அவரை உயர்த்திடுவோம்.

சாதிமத பேதமில்லை சமத்துவத்தை உணர்த்திடுவோம்
வேதனைசெய் வார்த்தைகளை வீணென்றொதிக்கிடுவோம்
போதனை செய்வதற்கே பிறந்து விட்டோமென வுணர்ந்து
சாதனையைப் போதனையால் சாதித்து வளமளிப்போம்.

வஞ்சனையால் வரும்பழியை வாய்விட் டெடுத்துரைப்போம்
வெஞ்சினத்தை அறுப்பதுவே வீரர் திறமையென்போம்
நஞ்சுநிறை வார்த்தைகள் நாவிலெழா வகையுணர்த்தி
கொஞ்சும் மொழி பேசும் குழந்தைகளை உயர்த்திடுவோம்.

வறுமைதனை ஒழித்து வெறுமைதனை விரட்டிடவே
சிறுவரது உளத்தில் சிந்தனையைத் தூண்டிடுவோம்
பொறுமை கடைப்பிடித்து புவியிதனையே நிறைக்கும்
பெறுமதியே நன்குயர்ந்த பிறப்பினை யாம் படைத்திடுவோம்.

அருமையுடன் தருமநெறி அனைவருக்கும் புகட்டிடவே
பெருமையுடன் பதவிதனைப் பெற்றுவிட்டோம் யாமன்றே
கருத்துடனே கடமைகளைக் கண்ணியமாய் நிறைவேற்றி
காலமெல்லாம் எச்சேவை கனிந்திடவே வழிவகுப்போம்.

செல்வி ஞா. ஸ்ரீமதிதேவி
தமிழ் – இறுதியாண்டு.

# ஆசிரியரிடம் காணப்பட வேண்டிய சிறப்பான பண்புகள்

மாணவனுக்கு வழிகாட்டியாக விளங்கும் ஆசிரியர் நல்ல ஆளுமையுடையவராயிருக்கவேண்டும். பொறுமை, அடக்கம், நேர்மை, நல்லொழுக்கம், நன்னடத்தை உறுதியான மனவெழுச்சி என்பன உடையவராக இருக்கவேண்டும். அவரையே மாணவர் பின்பற்றி அவரின் பண்புகளையே மாணவர் கைக்கொள்வார்கள் என்பதை உணர்ந்து செயல்படுபவராக இருக்கவேண்டும்.

தமது தொழிலிலும், பாடத்திலும், கற்பித்தலிலும் மாணவரிலும் விருப்புடையவராயிருக்கவேண்டும். கற்பிக்கும் பாடத்தில் சிறந்த தேர்ச்சியும் நாட்டமுடையவராயிருக்கவேண்டும். இதனுல் எந்த பிரச்சனையையும் சுலபமாகத்தீர்க்கமுடியும். எந்தவொரு பிரச்சனையையும், வகுப்பிலுள்ள சிறந்த மாணவனிலும் பார்க்க விரைவாகச் செய்து முடிப்பவராகவுமிருக்கவேண்டும். கற்பிக்கும் பாடத்தில் ஆக்க மனப்பான்மையும், வேறு ஆசிரியர்களின் சிபார்சுகளையும், புத்திமதிகளையும் ஏற்று இன்னும் எவ்வாறு தமது வேலையைத் திருத்தமாகச் செய்யலாமென்று முயற்சிப்பவராகவுமிருக்கவேண்டும்.

வகுப்பறையில் ஆசிரியர் கற்பிக்கும் போது தொனி வேறுபாடு இருக்கவேண்டும். வசனம் சிறியதாக இருக்கவேண்டும். ஆசிரியரின் சொற்களஞ்சியம் அதிகமாயிருக்கவேண்டும். தெளிவாகப் பேசவேண்டும். பிள்ளைகளின் அபிப்பிராயங்களையும் அவர்கள் கேட்கும் வினுக்களையும் ஆர்வத்துடன் வரவேற்று ஆவன செய்யவேண்டும்.

மாணவரின் பெயர்கள், கவர்ச்சிகள், நாட்டங்கள், திறன்கள் அடைவுகள், அனுபவங்கள் எல்லாவற்றையும் தனிப்பட்ட ஒவ்வொருவரினதும் மரபுநிலை, சூழ்நிலை என்பவற்றையும் அறிந்திருத்தல் வேண்டும்.

பாடத்தைக் கற்பிக்குமுன் அதனை ஆயத்தம் செய்யவேண்டும். புதிய யுக்திகளையும், முறைகளையும், மாணவர்களுடைய ரசனைக்குத் தக்கதாகவும் காலத்திற்கு ஏற்றதாகவும் பயன்படுத்தவேண்டும். எளிய முறைகள், சாதனங்களால் எவ்வளவு சிக்கலான பிரச்சனைகளையும், மாணவருக்கு விளக்கவேண்டும். ஆசிரியர் எவ்வளவு அறுவு நிரம்பியவராகவிருந்தாலும், மாணவரின் அறிவுக்குத்தக்கதாக அவர்களுடன் அவர்கள் நிலைக்கு இறங்கிவந்து கற்பிக்கக் கூடியவராயிருக்கவேண்டும். பாகுபாடின்றித் தலைமைத்துவத்தைச் சகல மாணவருக்கும் பரவலாக்கிப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும். சிறந்த தலைவராக, நடுநிலைமை வகிப்பவராக, நீதிபதியாக விளங்கவேண்டும். கற்பித்தல் மாத்திரம் அவர் தொழில் என எண்ணுமல் மாணவருக்கு மனவெழுக்கச் சீராக்கத்தை ஏற்படுத்துபவராகவும் இருக்கவேண்டும். மாணவரில் மிருந்த விருப்புடையவராக இருக்கவேண்டும்.

மரபுநிலை வாதியாக இருக்கக்கூடாது. அஃது ஒரு மாணவன் சிறப்பாகக் கற்கக்கூடிய பண்பு முழுவதுமே மரபு நிலையைச் சார்ந்தது என்வெண்ணிக் கற்பிக்க எதுவித முயற்சியும் எடுக்காமலிருக்கக்கூடாது. மரபு நிலை மூலம் மாணவர் பெற்ற நற்பண்புகளை வளர்க்கக்கூடியதான சூழ்நிலையை அமைத்துக் கொடுக்கவேண்டும்.

விவேகமான மாணவருக்குக் கடினமான பயிற்சிகள் கொடுத்து அவர்களுக்கு இடையிடையே கிடைக்கும் நேரத்தைப் பிரயோசனமான மாணவர்களிடம் கொடுத்துக்

கற்கும் சாதனங்களைச் செய்யலாம். தாம் கற்கும் பாடத்திற்குரிய கற்கும் சாதனங்களைத் தாங்களே செய்ய ஊக்குவிக்கலாம்.

வசதியான பாடசாலைகளில் பாட அலகு கற்பித்து முடிந்ததும், உடனே அதற்குரிய கற்பித்தல் சாதனங்களை அவ்விடத்தைவிட்டு நீக்காது தொடர்ந்தும் அச்சாதனங்களை வகுப்பறையிலேயே வைக்கலாம். இதனால் வேறு பாட அலகை மாணவர்கள் கற்றாலும் பழைய பாடத்தை மறக்காமலிருப்பர் பாடத்தைக் கற்பிக்கத் தொடங்குமுன் நல்லதோர் அறிமுகம் கொடுக்கவேண்டும். மாணவரிடம் வினாக்களை வினவும்போது தெளிவாக வினவவேண்டும். பாடத்தைக் கற்பித்து முடிந்தபின் ஒரு தொகுப்புரை வழங்கவேண்டும்.

பாடத்தைத் தொடங்கி முடியும்வரை மாணவரின் ஊக்கல் மாறாமலிருக்கவேண்டும். தவறும் பிள்ளைகளுக்கு வசைபாடக் கூடாது. மனம் புண்படும்படியான தண்டனை கொடுக்கக்கூடாது. இடைக்கிடையே மாணவர்க்கு ஏற்படும் தேக்கநிலையை உடனே கண்டு அதைத்தாண்ட உதவுபவராயிருக்க வேண்டும். ஆசிரியர் தொடர்ந்து ஓரிடத்தில் நின்றோ அல்லது இருந்தோ ஒரே தொனியிலோ விளக்கமற்ற முறையிலோ கற்பிக்கக்கூடாது.

இவ்வாறான பண்புகளைக்கொண்ட ஆசிரியரிடம் கற்கும் மாணவன் சிறந்தவனாக, நல்ல ஆளுமையுள்ளவனாக இருப்பான் என்பதில் ஐயமில்லை.

**கோ. திரவியராசா**
ஆரம்பக்கல்வி - விடுகையாண்டு.

---

**வீரம் எது?**

வீரம் என்பது உடல் வலிமையைப் பொறுத்ததன்று;
உள்ளத்தின் உறுதியையே பொறுத்ததாகும்.

— மாண்டெய்ன்.

**பொறுமை**

அவனுடைய கோபாவேசத்தை என்னுடைய பொறுமையால் எதிர்ப்பேன். அவனுடைய கொடுமையை எனது சாந்தத்தால் பொறுத்துக்கொள்வேன்.

— மகாகவி ஷேக்ஸ்பியர்.

**மனமே காரணம்**

நன்மை என்றும் தீமை என்றும் தனியே இல்லை. அவ்விதம் ஆக்குவது நமது மனமே.

— மகாகவி ஷேக்ஸ்பியர்.

# கற்பித்தல் ஒரு கலை
# TEACHING IS AN ART

திரு. க. கனகசூரியம்
B. A. Dip-in-Ed. Merit (Cey.)
1st Class Sp. Sc. Trined
விரிவுரையாளர்.

"மனிதனிடம் மறைந்துள்ள பூரணத் துவத்தை வெளிப்படுத்துவதே கல்வி" என்பது சுவாமி விவேகானந்தர் அவர்களின் கூற்று.

"வாழப்பிறந்தவன் மனிதன். வாழ வைப்பது கல்வி" என்பதே டால்ஸ்ட்டாய் அவர்களின் விளக்கமாகும்.

அநுபவமே கல்வி என்பது பல அறிஞர்களின் ஆணித்தரமான கருத்துக்களாகும்.

கல்வி என்பது கற்றலாகும். கற்றலின் இறுதிநோக்கம் அறிவு பெறுதலாகும். இத் தகைய ஆழ்ந்த, அகன்ற அறிவினை மாணவர்களுக்கு அளிப்பது அறிவு நோக்கத்தின் படி ஆசிரியரின் பணியாக அமைகிறது.

கற்பித்தல் என்பது அடிப்படையில் மாணவர்களை கற்கச்செய்தலாகும். (Causing to Learn) ஆகவே கற்றலுக்கான பெரும் பொறுப்பு மாணவரிடையே உள்ளது. கற்றலுக்கேற்ற சூழ்நிலை (Learning Situation) அமைத்துக்கற்றல் நிகழ ஒரு தூண்டுகோலாக ஆசிரியர் அமையவேண்டும். நவீன கல்விக் கோட்பாட்டின்படி கல்விச் செயல் முறைகளில் மாணவர்களுக்கு முதன்மையளிக்கப்படுகிறது. மாணவர்களின் தேவைகளையும், ஆர்வங்களையும், கவர்ச்சிகளையும் நன்குணர்ந்து தொழிற்பட்டால் ஆசிரியர் தனது கற்பித்தல்கலையில் சிறப்பான நிரந்தர வெற்றிபெற முடியும்.

கற்றல் என்பது அறிவு, திறன், மனப்பான்மைகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளலாகும். புதிய சூழலுக்கேற்ப ஒருவர் பொருத்தம் காணமுயலும்போது கற்றல் நிகழ்கிறது. எனவே ஒருவரது நடத்தையில் ஏற்படும் நிரந்தரமான மாற்றங்களே கற்றலாகும். ஒரு முக்கிய பிரச்சினை நிலைக்கு தன்னைச் சீராக்கிக்கொள்வதற்கு தொடர்ந்து எடுக்கும் முயற்சியினுல் கற்பவனின் நடத்தையில் ஏற்படும் மாற்றங்களே கற்றலாகும் எனவும் கூறப்படுகிறது. எனவே கற்றலைப்பற்றிய நவீன விளக்கத்திற்கு மேற் கூறப்பட்ட கருத்துக்கள் மையமாக அமைகின்றன.

"Teaching is Inseparable from Learning"
By A. D. C. Peterson
(University of Oxpord)

கற்பித்தலைக்கற்றலிலிருந்து பிரிக்கமுடியாது. என்பதே பிட்டர்சன் என்பாரின் கருத்தாகும். கற்பித்தலும், கற்றலும் ஒருங்கிணையும் போதுதான் கல்வியின் இலக்குகளும் நோக்கங்களும் நிறைவு பெறுகின்றன. கற்பித்தல், கற்றல் ஆகிய இரண்டும் இணைந்த கல்விச் செயல்முறையின் அடிப்படைப் பண்புகளை ஆசிரியரும் மாணவரும் பூர்த்திசெய்யும்போது கற்பித்தலும் கற்றலும் நிறைவேறுகிறது. கற்பித்தலும், கற்றலும் எவ்வாறு பிரிக்கமுடியாத ஒன்றிணைந்த கல்விச் செயற்பாடுகளோ அமதபோன்று கற்பிக்கும் ஆசிரியரும் கற்கும் மாணவர்களும் ஒன்றிணைந்து செயற்படுகிறுர்கள்.

கற்பித்தலைப்பற்றி பேராசிரியர் ஏ. டி. சி. பீட்டர்சன் பின்வருமாறு கூறுகிறார். ''கற்பித்தற்கலை அல்லது கற்பித்தற் தொழில் நுட்பம் என்பது உத்தமமான ஒரு மனிதச் செயற்பாடாகவும், உண்மை நிலையில் செயற்படக்கூடியதாகவும், ஒரு வகைத் தொடர்பை ஏற்படுத்தக்கூடியதாகவும் அமையவேண்டும்'' எனக்கூறுகிறார்.

**"Teaching as an art" or Technology :– is a Genuine Human Activity, some thing which really happens, and it must be a from of Communications"**

அறிவுள்ளவர்கள் எல்லோரும் சிறந்த ஆற்றலுள்ள ஆசிரியர்களாகச் செயற்பட முடியாது என்பது கல்விமான்களின் சீரிய கருத்தாகும். சிறந்த கற்பித்தற் பண்புகள் இயற்கையாகவே ஆற்றல்மிக்க ஆசிரியர்களிடம் காணப்படுகின்றனவா? அல்லது பயிற்சி, முயற்சி, அநுபவம் ஆகியவற்றின் விளைவாகப் பெறப்படுகின்றனவா? என்பது பற்றி கல்விமான்களிடையே கருத்துவேறுபாடுகள் நிலவுகின்றன. ''Teachers are born not made'' ''ஆசிரியர் ஆசிரியராகவே பிறக்கிறார். அவர் உருவாக்கப்படுவதில்லை'' எனும் கருத்து கல்வி மான்களிடையே நிலவிவந்துள்ளபோதிலும் இன்று மாணவரின் திறமைக்கும், தெரிவுகளுக்கும் ஏற்றவகையில் ஆசிரியன் தனது கற்பித்தல் முறைகளை அமைத்துக்கொடுக்கவேண்டிய நிலையில் உள்ளான். பொதுவாக ஆசிரியப்பணிக்குத் தேவையான பல முக்கிய பண்புகளை பயிற்சி, முயற்சி, ஆராய்ச்சி, அநுபவம் போன்றவைகள் மூலம் பெறமுடியும் என்பதை ஆராய்ச்சிகள் வலியுறுத்துகின்றன.

கல்வியின் நோக்கங்களைக் கருத்தினில் கொள்ளாக் கற்பித்தற் செயல்முறைகள் பயனற்றமுயற்சிகளாகவே காணப்படும். கல்வியினூடு மாணவர் பெறும் பல அநுபவங்களினூல் மாணவர் தமது நடத்தை முறைகளைச் சிறப்பாக மாற்றி அமைத்தலோடு சூழ்நிலையுடன் சிறந்த பொருத்தப்பாட்டினைப் பெறவும் ஆசிரியர் அறிவுரைகள் (Counselling) பகிர்ந்து, வழிகாட்ட (Guidance) வேண்டியுள்ளார்.

ஆசிரியர் கற்பித்தலின்மூலம் ஒரு சிறந்த கற்றற் சூழ்நிலையை உருவாக்கவேண்டும். செய்திகளையும், திறன்களையும் பரிமாற்றம் செய்பவராக இருத்தல்வேண்டும். மாணவர் மத்தியில் ஆக்க ஊக்கத்தை வளர்ப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

ஒரு ஆசிரியர் கற்பித்தலை மேற்கொள்ளும்போது ஏன் கற்பிக்கிறோம்? எதனை எப்போது கற்பிக்கவேண்டும்? எவ்வாறு கற்பிக்கவேண்டும்? என்பனபோன்ற வினாக்களுக்கு விடை காணமுயலும்போது கல்வியின் நோக்கங்களும் கற்பித்தலும் இணைந்து செயற்படுகின்றன.

கல்வியானது அறிவுநோக்கம், தொழில் நோக்கம், இசைவுநோக்கம், அறநெறி நோக்கம், சமூகநோக்கம், தனித்துவநோக்கம், ஓய்வுநோக்கம் போன்றவைகளை அடிப்படையாகக்கொண்டதாகும். மேற்கூறிய நோக்கங்களை மாணவர் மத்தியில் செயல் முறைப்படுத்துவதே ஆசிரியரின் முக்கிய கடமையாகும்.

ஆசிரியர் கற்பித்தலின்போது நன்றாகக் கற்பிப்பதுபோல் தோன்றலாம். ஆனால் மாணவர்கள் கற்றார்களா? என்பதுதான் பிரச்சினையான விடையமாகும். ஆசிரியர் கற்பிக்கும்போது தம்மிடமிள்ள சிறந்த அறிவைத் தகுந்தமுறையில் எளிய நடையில் மாணவர்க்கு விளக்கும்போது தான் கற்பித்தல் வெற்றி பெறுகிறது. கற்பித்தல் என்பது பாடப்பொருளை மட்டும் புகட்டுவதல்ல. கற்றவை வாழ்க்கையில் பயனடையும்படி செய்வதுமேயாகும்.

வகுப்பறையில் கற்பிக்கும்போது நல்லவற்றை ஊக்குவித்து தீயவற்றைத் தவிர்ப்பதற்கு வெகுமதியையும், தண்டனையையும் பயன்படுத்தலாம். பாட அடைவுகளை அதிகரிக்கும் நோக்குடன் ஆசிரியர் மாணவர் மத்தியில் போட்டிகளை மேற்கொள்ளும்போது மனமுறிவோ, தோல்வியின் தாக்

கமோ, ஒழுக்கச்சீர்கேடுகளோ ஏற்படாது பார்த்துக்கொள்ளவேண்டும். மாணவர்களே ஆசிரியர் ஆற்றலை மதிப்பிடும் சிறந்த மதிப்பீட்டாளர்கள் என்பதை உணர்ந்து முன்மாதிரியாக நடந்துகொள்ளவேண்டும்.

கற்பித்தற்கலை ஆசிரியர்க்கு ஆசிரியர் பாடத்திற்குப்பாடம், வகுப்புக்கு வகுப்பு வேறுபட்டுக்காணப்படுவதால் பொதுமைப் பாடுடைய சிறந்த கற்பித்தல்முறை என்று ஒன்றில்லை என்றும் ஆனால் ஆசிரியர்கள் பல தரப்பட்ட கற்பித்தல் நுணுக்கங்களைச் சாதுரியமாகக் கையாண்டு அவற்றுள் எவை மாணவரின் ஆர்வத்தைத் தூண்டுகின்றனவோ அவற்றையே சிறந்த கற்பித்தல் முறையாகப் பயன்படுத்தலாம். ''ஆடத் தெரியாதவர் அரங்கு பிழை'' என்று கூறுவதுபோல் பாடத்துறையில் போதிய பாண்டித்தியமும், தன்னம்பிக்கையையும் இல்லாத ஆசிரியர்கள் பாடசாலைகளையும், மாணவர்களையும் குறைகூறுவதும், குற்றம் காண்பதும் வழமை. குற்றங்களை எப்போதும் ஆக்கபூர்வமான முறையில அணுகுவதுடன் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதனால் கற்றலில் வெற்றிபெறமுடியும். கற்பித்தல் கலையில் நிறைவுகாண விரும்பும் ஆசிரியர்கள் தியாகமனப்பான்மை, சிறந்த ஆளுமை, பொறுமை, நல்லொழுக்கம், பிறர் நலம் பேணல், நேர்மை, பேச்சுத்தெளிவு, ஆக்கச் சிந்தனை, தூய்மை, நடுநிலை, மாணவர் திறன் பற்றிய அறிவு போன்ற பண்புகளை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

பாட ஆயத்தம், பாடக்குறிப்பு, தனி வேறுபாடுகளுக்கேற்ப கற்பித்தல், வகுப்பு நிர்வாகம், மாணவர் கட்டொழுங்கு போன்றவற்றை சிறந்த முறையில் மேற்கொள்ளவேண்டும். மாணவர்களுக்கு கொடுக்கப்படும் பயிற்சிகள், ஒப்படைகள் செயற்திட்டங்கள் மாணவர்களுக்குத் தெளிவாக இருக்கச் செய்வதுடன் அவற்றை மதிப்பீடுசெய்து வெகுமதிகள் அளிக்கவேண்டும்.

கற்பிக்கும்போது கரும்பலகையில் எழுத்துக்கள் தெளிவாகவும், உறுப்பாகவும் அமைவதுடன் எழுதியவற்றை எல்லா மாணவர்களும் பார்க்கும்வண்ணம் ஆசிரியர் நிலைகொள்ளுதலும் வேண்டும். குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் பொருத்தமான நிறவெண்கட்டிகள், தரவு அட்டவணைகள், விளக்கப்படங்கள், மாதிரிகள், பரிசோதனைகள் என்பவற்றையும் பயன்படுத்தல்வேண்டும். மாணவர் முயற்சிக்கு முக்கியத்துவம் அளித்தல் வேண்டும்.

அளவுடன் தொடர்புபடுத்தி அமைத்து கவர்ச்சியான முறையிலே கற்பித்தலும் துணைக்கருவிகளையும், கட்புல செவிப்புலச் சாதனங்களையும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தலும் வேண்டும்.

காலத்துக்குக்காலம் கல்விக்கோட்பாடுகளும் கற்பித்தல் முறைகளும் மாற்றமடைந்து வருகின்றன. மாறுபடும் சூழ்நிலைக்கேற்ப ஆசிரியர்கள் உட்சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகள், கல்விச் செயலமர்வுகள், புத்தூக்க வகுப்புக்கள் என்பவற்றில் கலந்துகொள்ளவேண்டும். கல்விச் சஞ்சிகைகள், கல்வி இதழ்கள், கல்வித்திணைக்கள வெயியீடுகள், ஆசிரியர் பரிவர்த்தனைத்திட்டம் போன்ற கற்பித்தல் ஊக்கச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது ஆசிரியர்கள் கற்பித்தல் தொழிலை ஒரு சிறந்த கலையாக மேற்கொள்ளமுடியும் என்பதே கல்விமான்களின் கருத்தாகும்.

---

## உண்மைச் சீர்திருத்தவாதி

உலகத்திலேயே மிகச் சிறந்த சீர்திருத்தவாதி யார் தெரியுமா?
தன்னைச் சீர்திருத்திக்கொள்பவனே.

— பெர்னார்ட்ஷா.

# பாரதி படைத்த பாஞ்சாலி சபதம்

பாரதநாடு சிறந்த நல் அறிஞர்கள் வாழ்ந்த பழம்பெரும் நாடு. இந்நாடு இந்திய மண்ணிற்கு பெரும்புகழைத் தேடித்தந்தது. இந்தியதேசம் ஆங்கிலேயருக்கு அடிமைப் பட்டுக்கிடந்த காலத்திலேதான் எட்டய புரத்தில் சுப்பிரமணிய பாரதியார் தோன் றினர். இவர் பாரதி என்றும், மகாகவி என்றும் வரகவி என்றும் மக்களால் அழைக் கப்பட்டு வந்தார்.

எளியபதங்கள், எளியநடை, எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம், சாதாரண பொதுமக்கள் விரும்பும் மெட்டு என்ப வற்றை உள்ளடக்கி சுதந்திரப் பாடல் களைப் பாடி மக்களை விடுதலைப்பாதைக்கு அழைத்துவந்தவர் பாரதியார். மக்கள் மத் தியில் சுதந்திர தாகத்தை ஊட்டி இந்திய சுதந்திரந்துற்கு வழி அமைத்தவர் இவரா வார். இலக்கியக் கழகத்திலே மிக இலகு வாக விளங்கக்கூடிய கவிதைகளை இயற்றி ஒரு புது மரபையே பாரதி தோற்றுவித் தார். இதனுல் அவர் நினைவாக இன்று நூற்றுண்டு விழாக் கொண்டாடும் அள விற்கு எம்மையே கவர்ந்துவிட்டவராவார். முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளார் கூட பாரதியை ஒரு மகாகவி என்று போற்றி அவரது கவிதைகளை மேடைதோறும் எடுத் துக் கூறி பொருள் பொதிந்த கனிரசத்தைச் சுவைத்தார் என்ருல் பாரதியின் பெரு மதிப்பு ஒருபடி உயர்ந்தது என்று தான் கூறவேண்டும்.

ஒருபொழுது பாரதநாடு பெண்களை ஆடவர்க்கு அடிமையாகக் கொண்டிருந்தது. இக்கொடுமை நீக்கவேண்டுமென்று துடி யாய்த் துடித்த பாரதியார் ஒரு புதுமைப் பெண்ணின் வடிவத்தைப் படைத்துக் காட்டி ஞர். இவ்வாறெல்லாம் புகழ் பெற்ற பாரதி கி. பி. 1912இல் பாஞ்சாலி சபதமெனும் காவியத்தைப் படைத்தளித்தார். பாரதி யின் பாஞ்சாலி சபதம் வியாசப் பாரதக் கதையினை அடியொற்றி எழுந்ததெனினும் தாம் வாழ்ந்த காலத்திற்கு ஏற்றவகையில் காலதேச வர்த்தமானம் என்பவற்றிற்குப் பொருத்தமாக சிலநிகழ்ச்சிகளை கதைப் போக்கிலே நுழைத்துக் கதாபாத்திரங்கள் வாயிலாக புதுமைக் கருத்துக்களைப் புகுத்தி பாஞ்சாலி சபதத்தையே ஒரு புதுமைப் படைப்பாகத் திகழவைத்தார். இந்நூலிலே பாண்டவர் சூதாடல், நாடுநகரிழந்து திரௌபதியையிழத்தல், துச்சாதனன் திரௌபதியை அவைக்கு இழுத்துவருதல், அரசர் முன்னிலையில் அவள் சீலையைக்களை தல், அத்தருணம் திரௌபதி கண்ணனைத் தியானித்தல், திரௌபதியின் சபதம் இன்னேரென்ன பல பாரதக்கதை நிகழ்ச்சி கள் இடம்பெறுகின்றன.

தான் வழிபட்ட தெய்வமாகிய சக்தி யினை அன்னை பராசக்தி, பாரத அன்னை, மானிடப்பெண் என்ற மூன்று நிலைகளிலே நின்று பாடி மகிழ்ந்த பாரதி அம்மூன்று அம்சங்களையும் மீண்டும் ஒருமுறை பாஞ்சாலி சபதத்திலே பாஞ்சாலியின் சபதம்மூலம் மனதிற்குக் கொண்டுவந்து மகிழ்கின்ருர். இதில் வருகின்ற கதாபாத்திரங்கள் ஒவ் வொன்றினூடாகவும் உணர்ச்சி நிலையை, மனப்பான்மையை வடித்துக்காட்டுகிருர். சுதந்திரதாகம் மேலிட்டவராய் தூரத்தே ஒளிவிடும் சூரியதேவனை வேண்டிப் பாஞ்சாலி செய்யும் சபதம்போல் சபதம் செய்து இந் திய அன்னையின் அடிமைத்தளையை நீக்க உறுதிகொண்டு உழைத்ததோடு தனது கொள்கையை ஒவ்வொரு இந்திய மகனும் கடைப்பிடிக்கவேண்டுமென்ற தனது பேரா வலையும் வெளிப்படுத்தியுள்ளார். ''தருமத் தின் வாழ்வதனைச் சூது கௌவும், தருமம் மறுபடியும் வெல்லும் எனும் இயற்கை; மருமத்தை நம்மாலே உலகம் கற்கும், வழி தேடி விதியிந்தச் செய்கை செய்தான்:

தருமத்தை மென்மேலும் காண்போம், இன்று கட்டுண்டோம். பொறுத்திருப் போம் காலம்மாறும், தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்'' என்று அர்ச்சுனன் என்ற கதாபாத்திரத்தின் வாயிலாக பாரதி யார் தருமத்தை எடுத்துக்கூறியுள்ளார்.

பாஞ்சாலி சபதத்திலே எண்ணற்ற கருத்துக்கள் பொதிந்துகிடக்கின்றன. மீண் டும், மீண்டும் அதனைப்படித்து இன்புற வேண்டும். பெண்குலத்தை அடிமைசெய்ப வனை பாரதியார் பேடி என்று காறி உமிழ் கிறார். வீமன் என்ற கதாபாத்திரத்தின் வாயிலாகத் தருமனைச் சபிக்கின்றபோது பாரதியின் உணர்ச்சி ஆவேசம் அனைத்தும் அப்படியே கொப்பளிக்கின்றன. தமிழகத் தின் பண்டைய செல்வங்களைத் தனது கொடிய அலைக்கரங்களால் அழித்துவிட்ட கடலைப்பார்த்து சிலப்பதிகாரத்திலே இளங்கோ அடிகள் கொடுங்கடல் என்று பழித்துக் கூறியதைப்போல் பாஞ்சாலி துயிலுரியப்படும் நிகழ்ச்சியால் ஆத்திரம் கொண்ட பாரதியார் தனது ஆத்திரத்தைத் தீர்ப்பதுபோல் பாஞ்சாலியின் துயிலினை உரிந்த துச்சாதனனை ''மாடு நிகர்த்த துச்சாதனன்'' என்றுகூறி தனது கோபத் தினையும் வெறுப் ணர்ச்சியையும் தீர்த்துக் கொள்கிறார்.

ஆடைகுலைவுற்று நிற்கிறாள் - அவள்
ஆவென்றழுது துடிக்கிறாள் - வெறும்
மாடு நிகர்த்த துச்சாதனன் - அவள்
மைகுழல் பற்றி இழுக்கிறான்.

இந்த அடிகளின்மூலம் காவியப் பாவை யை நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகின்றார். இத்தகைய சிறந்த காட்சி கள் கற்பனை வளங்கள் என்பவற்றைத் தமது காவியத்தின் மூலம் எல்லோரும் இலகுவில் படித்து விளங்கத்தக்கவாறு பாஞ்சாலி சபதத்தினை யாத்து அளித்தவர் தான் பாரதியார்.

தமிழ் மொழிக்கு அழியாத உயிரும், ஒளியும் கொடுத்ததோடு இனிப்பிறந்து காவியங்கள் செய்யப்போகிற வரகவிகளுக் கும் கைகொடுத்தவர் பாரதியார். வரகவி களுக்கு உயிரூட்டும் வள்ளல்களுக்கு பாஞ் சாலி சபதத்தையே பாதகாணிக்கையாகச் செலுத்துகிறேன் என்று பாஞ்சாலி சபதம் முதற்பதிப்பில் சமர்ப்பணம் செய்திருக்கிறார்.

துச்சாதனன் பாஞ்சாலியின் மெய் தொட்டு இழுப்பதிலிருந்தே பாரதியின் உள்ளக்குமுறல்கள் வெளிவரத் தொடங்கு கின்றன. கதாபாத்திரங்கள் செய்யும் ஒவ் வொரு சம்பவங்கள்மூலமும் கதைப்போக்கி லிருந்து சிறிதும் நழுவாது உள்ளத் துணர்வை எடுத்துக்காட்டுகிறார். பாரத நாடு வளம்பெற்று வாழவேண்டுமென்ற உணர்ச்சித்துடிப்பு, தேசாபிமான உணர்ச்சி கள் என்பவற்றை பாரதியிடம் நாம் காண லாம். அர்ச்சுனபுரச்சிறப்பு வர்ணனையிலே தாம் விரும்பும் பாரதநாட்டின் வளம் நிறைந்த களத்தினை கற்பனைசெய்து காண் கிறார். உதிஸ்டிரன் செய்த ராஜகிரிய யாகச்சிறப்பு பாஞ்சாலி சபதத்தில் அழகா கச் சித்தரிக்கப்படுகின்றது. இயற்கையை ரசித்து அவற்றின்மூலம் உணர்ச்சியைப் பிழிந்து கவிதையாக்கித் தரும்கலை பாரதிக்கே கைவந்ததாகும். நாஸ்திக உலகில் வாழும் நமக்கு ஆண்டவன் பால் அகலாத பக்தியை ஊட்ட, வளர்க்க வழிசெய்துவைக்கிறார் இவர்.

''கண்ணபிரான் அருளால் - தம்பி
கழற்றிடக் கழற்றிட துணி புதிதாய்
வண்ணப் பொற்சேலைகளாம் - அவை
வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தனவே.

என்று பாடிக் குதூகலிக்குறார். வளர்ந் தன என்ற சொல்லினை மூன்றுமுறை கூறு வதிலிருந்தே இறைவனின் அருள் எல்லை யற்றது என்று எடுத்துக்காட்டுகிறார்.

பாரதியார் தமது கற்பனையில் கண் டெடுத்த சத்தியம், அறப்பண்புநிறைந்த புனித சமுதாயமென்ற பாஞ்சாலி சபதத் தின் மூலம் காணவிளைகிறார். பாஞ்சாலி சபதத்திலே ஆழ்ந்த பொருள், சிறந்த உவமைநிறைந்த உருவங்கள் அமைத்து நிற்

கின்றன. கதாபாத்திரங்களின் குணநலன்கள் நன்கு விமர்சிக்கப்படுகின்றன. பாஞ்சாலிசபதவாயிலாகப் பாரதியார் ஓர் சிறந்த உரையாசிரியர் என்பதையும் அறிய முடிகின்றது.

''பாட்டுக்கொரு புலவன் பாரதியடா'' என்று பாரிலுள்ளோர் பலரும் பாடிப் புகழ்ந்திருக்கும் அளவிற்குப் பாரதி படைத்த பாஞ்சாலிசபதமே நிலைக்களனாய் அமைந்திருக்கின்றது. எனவே நாமும் பாஞ்சாலி சபதத்தை பாங்குறப்படித்து பண்பாடெய்து வளமுடன் வாழ வழிசெய்வோமாக.

செ. சந்திரமோகனா
கணிதநெறி
(இறுதியாண்டு)

---

## தனியே இரு

மூடனுடைய நட்பைப் பார்க்கிலும் ஒருவன் தனியே வசிப்பது நலம் ஆசைகளைக் குறைத்துக்கொண்டு யானைகளின் காட்டில் யானை சுயேச்சையாகத் திரிவதுபோல், அவன் தனியே செல்வானாக; பாவகருமம் எதையும் செய்யாதிருப்பானாக.

— புத்தர்

## மூன்று செல்வங்கள்

என்னிடம் மூன்று செல்வங்கள் உள்ளன; அவை அன்பு, சிக்கனம், அடக்கம் என்பன. அன்புடையவன் அச்சமில்லாதவன். சிக்கனமுடையவன் வண்மையாக இருக்கமுடியும். அடக்கமுடையவன் தலைவனாக ஆகமுடியும்.

— தாவோமதம் (சீதன)

## அன்பெனும் அக்கினி

அன்பாகிய அக்கினியில் எல்வளவு கடினமான மனமும் இளகியே தீரும்.

— காந்தியடிகள்.

# பட்ட மரம் தளிர்க்க...

திமிலைத்துமிலன்

காலை இளம்பருதி கண்விழிக்கும் வேளையிலே
சோலை இளம்குயிலைத் தூதுவிட்ட பூங்காற்று
வேலையிலே மோதி விளைவயலில் பந்தாடி
வாலைக் குமரியரின் மடித்துகிலைத் தொட்டிழுத்து
மாலை வரைமேவி மட்டுநகர் வாவியிலே
பாலைப் பொழிநிலவில் பாடிவரு மீனிசையில்
காலைத் தளர்த்திக் கண்ணுறங்கும் கீழ்த்திசையின்
மூலையொன்றில் தோன்றி முளைத்தவன்யான் கேளுங்கள்.

காதல் என்ற தீயைக் கடைந்து இருவருண்ட
சாதலினால் நம்மைச் சமைத்தான் பிரமனவன்
ஆதலினால் இந்த அவனியிலே வந்துழன்று
சாதனைகள் ஏதோ சமைக்கத் துடிக்கின்றோம்
வேதனைகள் ஒன்றாக விழும் உதைகள் ஒன்றிரண்டா?
போதனைகள் செய்வோர் புறமுதுகில் குத்திவிட்டு
ஆதரவு காட்டும் அரும்கருணை தாம்குறையா?
பாதை இருட்டெனிலும் பகல்படைப்போம் வாருங்கள்.

கொக்கரித்த கோழிக்குரலினிலே முட்டையிட்ட
வக்கரிப்பைக்கேட்டு மடுவிலுள்ள ஆமையொன்று
மிக்க அமைதியொடுவெளிவந்து நின்றபடி
சிக்கனமாகச் சிரிப்பொன்று நல்கியது.
தக்காளித் கன்னத் தளிரொன்று புத்தகத்தை
பக்கம் புரட்டிப் பார்த்தபடி வெற்றிகண்ட
எக்களிப்பால் ஆமை இளிக்கிறதோ என்கிறது.
துக்கத்தை நீக்கிச் சுடர்கொழுத்த வாருங்கள்.

கருங்காலிப் பொல்லைக் கையில்வைகத்துக் கொண்டிருக்கும்
கருங்காலி ஒன்று காட்டெருமை பாய்ந்துவர
குரங்கோடு காஞ்சுரங்காய்க் கொப்பினிலே ஏறியது.
மருங்கொடிய நெல்சுமந்து வந்தகொடி ஒன்றதன்மேல்
கருங்குரங்குபாயக் காட்டெருமை மோதிவிழ
நெருங்கி மரத்தோடு கெஞ்சமுழுத்திக் கண்மூடி
கருங்காலி செய்ததவக் காட்சிபெரு வீரமெனில்
இருங்கனலைமூட்டி இடர்கொழுத்த வாருங்கள்.

வானத்தைப் பார்த்து வாய்திறந்த வட்டையிலே
கூனற் கலப்பைக் கொழுமுனையால் நெல்விதைத்து
ஏனத் தெயிற்றுநிலா இரண்டு நிறைந்தபின்பும்
வானத்துளியின் வரவுபொய்த்துப் போனதனால்
கானக்குயிலின் கதைபழகும் நல்லவளைத்
தீனக் குழந்தைகளைத் தீய்க்கும் கொடும்பசியை
காணத்தாங்காது கடுமலரி வித்தையுண்டு
போன உழவன் புதைகுழிக்கு வாருங்கள்.

காகம் கரையக் கரிகுருவி கூச்சலிட
மேகம் வியர்த்து வெளிவந்த வெந்துளியில்
தேகம் நனைந்து சிறுகுடிலிலேமுடங்கி
சோகம்படரத் தூக்கமின்றியே கிடந்து
ஆகம் குலுங்க அடிக்கடியே மாய்ந்திருமும்
பாவக் குரம்பையொன்றைப் பார்ப்பதற்குச் சம்மதமா?
ஆவலா? இந்த அகல்விளக்கை ஏற்றுங்கள்.

கட்டித்தயிரும் கரும்பும் இளநீரும்
கொட்டிப்பிசைந்து குடங்குடமாய்த் தேனூற்றி
வெட்டித்தள்ளென்று விரும்புபவர்க் கீந்துவந்த
மட்டக் களப்பதனின் வாரியெலாம் 'லாரி' களில்
எட்டி நகர்ந்து எங்கெங்கோ போய்மறைய
வட்டைமுழுக்க வழிந்தோடும் வேர்வையினை
கொட்டி உழைத்தோன் கொடும்பசியால் வாடுகிறான்,
பட்டமரம்தளிர்க்கப் பாலிருந்தால் ஊற்றுங்கள்.

மழைக்கா விருட்டில் மரவள்ளிச் சேனையிலே
உழைக்காது ஊதியத்தை ஒருநொடியில் கொள்பவர்கள்
குழைக்காகக் காதைக் குருதிவரப் பிய்த்தெடுப்போர்
முளைக்காத நெல்லை முதல்விதைக்காய் விற்பவர்கள்
சளைக்காதே பொய்யில் சாவுவரை வாழ்பவர்கள்
அழைக்காது நல்விருந்தாயாகிக் குழிபறிப்போர்,
விளைக்கின்ற இந்த வினைகளுக்குக் காரணமாய்
தழைக்கும் இருளைத் தகர்த்தெறிய வாருங்கள்.

அடிமையிருள் மடமையிருள் அஞ்ஞானப் பொய்மையிருள்
மிடிமையிருள் குடிமையிருள் விடியாப் பொறாமையிருள்
துடியிடையார் கொள்ளும் தொலையாச் சந்தேகவிருள்
வடிவுடையார் கண்ணால் மயக்கின்ற காமவிருள்
விடியமுதல் கள்ளுண்டு வெறியாட்ட மாடுமிருள்
படிமிசையே ஆட்டமிடும் பாழிகாரச் சாதியிருள்
முடிவில்லா தெங்கெங்கோ மூளுமிருளித்தனையும்
அடியோடு தீய அகல்விளக்கை ஏந்துங்கள்

மாயையினால் இங்கு வந்துதித்த மானிடர் நாம்
காமம் வெகுளி கணக்கில்லாப் பொய்மயக்கு,
ஆமை - பொறாமை அறியாமை எத்தனையோ
தீமை கொடுமை தெரியாமை எத்தனையோ
ஊமை களுக் கண்டால் உண்மையினை யாரறிவார்?
தாய்மையொன்றே சேயின் தாகத்தை நன்கறியும்
ஆகையினால் இந்த அவனியெல்லாம் சுட்டெரிக்கும்
தீயை அகல்விளக்கில் சிறைப்பிடிப்போம் வாருங்கள்.

ஆய கலைகள் ஆறுபத்து நான்கினையும்
தாயாகி நின்று தருகின்ற வாணியினை
நேய மிகுந்திறைஞ்சி நிற்கின்ற வேளையிலே
காயம் மதர்க்கவரு கார்த்திகைதாள் பூக்கிறது
தூய வேலொன்று சுடராகி நிற்கிறது
மாயம் அகல்கிறது மனம்தெளிவு கொள்கிறது.
தேயம் சிறக்க, சிறுமையெல்லாம் தூசாகத்
தீயை அகல்விளக்கில் சிறைப்பிடிப்போம் வாருங்கள்.

## ...பாலிருந்தால் ஊற்றுங்கள்!

# தோல்வியில் தோய்ந்த மனங்கள் துவளாமலிருக்க......

திருமதி வசந்தா நடராசன்
B. Sc. Dip. - in - Ed.

பாடசாலைச் சூழலில் எட்டாம் வகுப்பு மாணவன் ஒருவன் வாசிப்பு சரியாகச் செய்யாததால் வகுப்பைவிட்டு வெளியேற்றப்படுகிறுன். அவன் கண்கள் அவமானத்தாலும் வெறுப்பு கோபம் போன்ற உணர்வுகளாலும் பனிக்கின்றன. குனிந்த தலையைத் தூக்காமலே தரையைப்பார்த்தபடி தன் தோல்வியை எண்ணி எண்ணி மாய்கிறுன். ஐந்தாம் வகுப்பு மாணவியொருத்தி பின்னக் கணக்கைச் சமாளிக்கமுடியாமல் ஆசிரியையிடம் நிதமும் அடிவாங்கி அழுதழுது தனது தோல்வியில் கணக்குக் கொப்பியின் தாளைக் கிழித்து எறிந்துவிட்டு இனிப்பாடசாலைக்கு வ்ராமலிருக்க என்ன காரணத்தைத் தன் பெற்ருேருக்குக் கூறலாம் என யோசிக்கின்ருள். இந்தமனங்கள் துவண்டுபோவதை நாமும் கண்கூடாக நாளாந்தம் பார்க்கின்ருேம். கவலையில் தோய்ந்த இந்தமனங்கள் துவளாமலிருக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் என்ன?

பாடசாலைகளில் பின் தங்கிய (Slow Learners) அல்லது சாதாரண கற்பித்தலுக்கு ஈடுகொடுக்க முடியாதவர்கள் தமது படிப்பினை குறையிலேயே நிற்பாட்டிவிட்டு பெரியவர்களாக வளர்ந்ததும் வேலையுமில்லாமல் அலைந்துபோகிருர்கள். எட்டாம் தரத்திலேயே 50% மாணவர் இப்படி பாடசாலையினின்று விலகிக்கொள்கின்றனர். இதனுல் இப்படியான பிள்ளைகளை எங்ஙனம் இனம் கண்டுகொள்வது? எப்படி பாடங்களை இவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பது? இவர்களுடைய எளிய பிரச்சனைகளை எப்படித் தீர்ப்பது? இவையெல்லாவற்றிக்கும் மேலாக இந்தப்பிள்ளைகளை எப்படி வழிகாட்டுவது? என எல்லோருக்கும் ஒரு அடிப்படையான விஷய அறிவு அவசியமானது. மேலும் சமுதாயத்தில் ஒவ்வொரு பிரஜையும் இதில் பங்கெடுப்பது கடவுளுக்கு அவர்கள் செய்யும் இறைவழிபாட்டில் ஒன்று எனக் கருத வேண்டும்.

பின்தங்கிய மாணவர் எனப்படுபவர் மனேவளர்ச்சி குன்றியவர்களில் ஒருபகுதி. சதாரணமாக வலதுகுறைந்தவர்கள் என சமூகத்தினுல் கருதப்படும்பவர் கூன், குருடு, முடம் எனக்கூறப்படுபவராவர். இவர்களில் உள்ள இயலாமை வெளிப்படையாக எமக்குத் தெரிவதனுல் நாம் அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுகிருேம். ஆனுல் மனேவளர்ச்சி குன்றியவர்களில் ஏனைய பிள்ளைகளைப்போல வெளித்தோற்றம் இருப்பதனுல் எமது எதிர்பார்ப்புக்கள் அவர்களிடம் ஏனையபிள்ளைகளிடம் எதிர்பார்ப்பது போன்றே இருக்கிறது. அதனுல் பின்தங்கியோர் அவ்வளவிற்கு இடுகொடுக்க முடியாமல் பிறமுறையில் செல்வதற்கு ஏதுவாகிறது, அல்லது நமது எதிர்பார்ப்புக்களைத் தவிர்ப்பதற்காக பாடசாலைகது வராமல் விடுகின்றனர். மனேவளர்ச்சி குன்றிய பிள்ளைகளில் மிகமேல்படியில் அதாவது நுண்மதிஈவு 75 தொடக்கம் 85 வரையில் உள்ளவர்களே பின்தங்கிய மாணவராவர். கல்வியைத் தடையின்றி கற்கக்கூடிய மாணவர்கள் நுண்மதிஈவு 85 தொடங்கி 120 வரை உள்ளவர்கள். எனவே சாசரி 10 கால வயதுள்ள ஒரு மாணவன் நுண்மதிஈவு 80 உடையவனுயின் அதேகால வயதுள்ள

ஒரு சாதாரண மாணவனைப்போலல்லாது முன்குறிப்பிட்டவர் ஏறக்குறைய 8 வயதுப் பிள்ளையின் மனோவளர்ச்சியையே காட்டுவர். அதைவிட நுண்மதிஈவு 50 தொடங்கி 70 வரை உள்ளவனாயின் காலவயது 10 ஆக இருப்பினும் அப்பின் தங்கிய மாணவன் மனோவளர்ச்சியில் 5 தொடங்கி 7½ வயது வரை உள்ளவனாவான். எனவே இம்மாதிரிப் பிள்ளைகளைக் கற்பிக்கும்போகது ஏனைய கால வயது 10 உடையோரைக் கற்பிப்பதுபோல கற்பித்தால் பலன் இருக்காது. விசேட கற்பித்தல் முறையிற் சில வழிகளை நாம் கடைப்பிடித்தல் அவசியமாகும்.

இத்தகைய மாணவர் நன்றாக வாசனை முதலிய பாடங்களைச் செய்வதிற்கு கால வயது 14 ஏன் 15, 16 கூட ஆகலாம். தேவைக்கேற்ப சில எளிய கூட்டல் கழித்தல்களை மட்டுமே இவர்கள் எளிதாக சமாளிப்பர். சூழல் பாடத்தைச்சேர்ந்த வரவாற்றுப் பகுதிகளை இவர்கள் படிப்பதற்காக ஆர்வம்காட்டினாலும் அவைகளை ஞாபகத்தில் வைத்திருப்பது கஷ்டம் புவியியல் பகுதிகள் விளங்கினாலும் அவர்களுக்கு நில அளவுப் பிரமாணங்கள் விளங்காது. விஞ்ஞான பாடத்தில் ஆர்வம் குறைவாக இருக்கும். வரைதல், சங்கீதம், கைவேலை, உடற்பயிற்சி முதலிய பாடங்கள் நமது உதவியுடன் நன்றாக இவர்கள் செய்யமுடியும். இவைகளில் விருப்பமாக இருப்பர். ஓரளவுக்கு இவர்கள் வரைதல், சங்கீதம், தையல், உடற்பயிற்சி முதலியவைகளில் நியமங்களை நெருங்கமுடியும். இதனால் இம் மாணவருக்கு தச்சுவேலை, நெசவு, மீன்பிடி முதலிய ஆக்கவேலைகள், சேனைப்பயிர்ச் செய்கை, விவசாயம் கோழிவளர்ப்பு, மீன் வளர்ப்பு (நன்னீர்), புத்தகம் கட்டுதல் (பைன்டிங்) மலர்த் தோட்டவேலை, கடைவேலை முதலியவைகளை இலகுவாகப் பழக்கி சமுதாயத்தில் ஒரு வேண்டிய அங்கத்தவராக மாற்றலாம். இதுவே ஏனையோரின் கடமையுமாகும்.

இப்பிள்ளைகளை எவ்வளவு நேரத்தோடு அதாவது கீழ்வகுப்பிலேயே தரம்பிரித்து அறிகிறோமோ, அவர்களை மாற்றியெடுப்பது இலகுவாகவும் அதிக பயனுள்ளதுமாக காணப்படுர்கிறது. எனவே தரம் பிரிப்பது எப்படி? சாதாரணமாக வைத்தியர்கள் குழந்தை நிலையிலேயே கண்டுபிடிப்பர். சில வேளைகளில் தாய்மார் தமது மற்றைய குழந்தைகளில் காணாத அசாதாரண நிலைகளை வளர்ச்சிப் போக்குகளில் கண்டு வைத்தியரிடம் கூறும்பொழுது இவற்றைக் கண்டு கொள்வர், அல்லது அவதானமான ஆசிரியர்கள் தமது ஆரம்பப் பாடசாலை நிலைகளில் தம்மால் இம்மாணுக்கரைத் திருத்த முடியாது என இனம்கண்டு கூறுவர். இந் நிலையில் அவர்களை ஏசிப்பேசி வகுப்பிலிருந்து ஒதுக்காமல் ஒரு விசேட பயிற்சி பெற்ற ஆசிரியரின் துணையுடன் பெற்றோர் முயன்று திருத்திக்கொள்வது நன்று. அப்படியல்லாமல் அம்மாணவர் இடைநிலைக் கல்விவரை எந்தவித உதவியுமின்றி வகுப்பேற்றப்பட்டுவிட்டால் பிரச்சனை இன்னும் கொஞ்சம் பெரிதாகிவிடும். ஏனெனில் மாணவருக்கு வெளியே தென்படாத மன வேதனை, இயலாமை, வெறுப்பு, தனிமைப் படுத்தல் முதலிய உளத்தாக்கங்களில் ஊறி அவர்கள் கற்றலை கடினமானவொரு வேலையாக்கும். இந்நிலையிலாவது விசேட கற்பித்தலைப் (Special Education) பயன்படுத்தினால் 8ம் வகுப்பு நிலையுடன் அம்மாணவரின் விருப்பு, திறன், குடும்பச்சூழல் முதலியவைகளை வைத்து ஒரு நல்ல எதிர்காலத்திற்கு வழிப்படுத்தலாம். விசேட கற்பித்தலைப் பயின்ற ஆசிரியர்களே இம்மாணவரை இலகுவாக எந்த வகுப்பிலும் கண்டுபிடித்து, திறன் ஆராய்ந்து, இயலாமைகளை சீர்தூக்கி பயனுள்ள வழிகாட்டல் ஒன்றினைச் செய்து சமூகத்திற்கு உதவமுடியும். இதனைப் பயிற்சிக்கலாசாலையிலும் ஒரு பாடமாக கற்பித்தல் சமூகத்திற்குப் பெரு நன்மைபயக்கும். இதனால் இம்மாணவர் சிறந்த ஆளுமையுடைய பிரசைகளாக உருவெடுப்பார்கள். புறவயமான தீர்மானங்கள் இவர்களுக்குச் சிறந்தவை.

தோல்வியில் தோய்ந்து நனைந்து ஆசிரியர்களாலும் சகமாணவர்களாலும் பட்டம் சூட்டப்பட்டுப் புறக்கணிக்கப்படும் இப்

பின்தங்கிய மாணவர் உண்மையிலேயே பரிதாபத்துக்குரியவர்கள். இவர்களின் இய லாமை வெளியேதெரியாததால் சமூகம், பெரியவர்கள், ஏன் சிலவேளைகளில் தம் எண்ணங்கள் சரிவராத ஆதங்கத்தில் குமைந்த பெற்ருேர், சகோதரர்கூட இவர் களைத் தக்களையறியாமலே தமது ஏச்சுப் பேச்சு, அடிகளால் துன்புறுத்தி அப்பிள்ளை களைப் பாவியக்குற்றவாளிகளாக்கின்றனர். எனவே இவர்களை வெற்றிப்பாதையிலிட்டுச் செல்லும் வழிவகை ஒவ்வொரு பிரஜைக் கும் தெரிந்திருக்கவேண்டும். முதலாவதாக கூடிய அளவு படிப்பினை அவர்களிடம் எதிர் பார்ப்பதை நிறுத்திக்கொள்ளவேண்டும். பயன்தராத நினைவுகளையும் செயல்களையும் அவர்களுக்கு சுமத்துதல் அபாயகரமானது. அவர்களுக்கு எது இலகு? என்ன வேலை எளி தாகச் செய்யலாம்? என்ன வேலை விருப் பம்? எனபதை அறிந்துகொள்ளவேண்டும். அதேநேரத்தில் அவர்களுக்கு எந்தவேலை மிகக்கடினம்? எந்தவேலை சிறிதுகடினம்? எந்தவேலையில் வெறுப்பு? என்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும். விருப்பமான சிலவற்றைத் தெரிந்தெடுக்கவேண்டும். அவற்றைப் படிப்படியாக இலகுவாக அவர் கள் பழகவேண்டியவைகளைப் பலமுறை களில் செய்துகாட்டல் முறையில் கற்றுக் கொடுக்கலாம். இதற்குக் கவர்ச்சியூட்ட பட அட்டைகள், மாதிரிகளைச்செய்து பாவிக் கலாம். கற்றுக்கொடுப்பவைகளை அவர்கள் எளிதாக மறக்கக்கூடும் என்பதை மனதி லிருத்தி திரும்பத்திரும்ப விளக்குதல் அவசி யம். அவர்கள் சிறு சாதனைகளையும் நன்கு மீளவலியுறுத்துதல்பண்ணவேண்டும். இதற் கெல்லாம் ஆசிரியர்களுக்கு இரக்கமும், அன்பும், கோபப்படாத சுபாபமும், பொறுமையும் உதவிசெய்யும்.

இதைத்தவிர விசேட கற்பித்தலில் உடல் இயக்கம், புலனியக்கம், மொழித் திறன், சமூகத்திறன் முதலியபகுதிகளில் விரிவாக நாளாந்தம் சிலபயிற்சிகளைச் செய்துகொண்டேபோவதால் தோல்வியில் உழலும் அவர்கள் மனம் சிலகாரியங்களை நினைத்துச் செய்யப் பழகிக்கொள்ளும். பிறகு அதுவே சாதாரண வாழ்க்கைமுறை யாக வந்துவிடும். இதேவேளைகளில் அப்பின் தங்கிய மாணவருடைய தேவைகள் ஏனை யோரைப்போலவே காணப்படும் என்பதை மற்றவர்கள் ஞாபகத்தில்வைத்துச் செய லாற்றுதல் வேண்டும். உடற்த்தேவை, உளத்தேவை, சமூகத்தேவை என்பன மற் றப் பிள்ளைகளுக்கு வழங்குவதையே குறைக் காமல் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். சிலவேளைகளில் வீட்டுச் சூழலில் அல்லது பாடசாலைச் சூழலில் உள்ள புறக்கணிப்பு இவர்களுக்குத் தாக்கக் காரணிகளாகும்.

மாணவர் பின்தங்கியோராகக் கல்வி யில் காணப்படுவது அவர்கள் குற்றமல்ல. பிறப்புக்குமுன் சில நிறமூர்த்தக் காரணி கள் பரம்பரை வழியில் இவற்றின் காரண மாகலாம். சிலவேளைகளில் தாயின் வயிற் றில் உள்ள சிசு நிலையிலேயே தொற்றுக்கள், இரசாயனத் தாக்கங்கள், உணவு போஷாக் கின்மை, குருதி ஒவ்வாமை, ஓமோன் கோளாறு முதலியவை காரணிகளாகலாம். அல்லது பிறப்பின்போது ஒட்சிசன் குறை வால் நீலக்குழந்தைகளாக அல்லது மூளை யில் காயம், அல்லது குறைப்பிரசவம் முதலியவை காரணமாகலாம். ஏன் பிறந்த பின் கூட வைரசுத் தொற்றுக்கள், இரசா யனக் காரணிகள், மண்டையில் அடிகள், பெற்ருேரிலிருந்து பிரிவு முதலியவை பின் தங்கிய மாணவரை சமுதாயத்திற்கு அள் ளித் தரலாம், இவைகளைத்தவிர 59% கார ணிகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அவை இம்மாணவரைப் படைத்த இறை வனுக்கு மட்டுமே தெரியும். ஆனல் இத் தகைய மாணவரைப் பெற்ற பெற்ருரும் ஆசிரியரும் சரியாக, நிதானமாக, அன்பாக, அறிவுபூர்வமாக பூரணத்துவம் எய்த கடவுள் வழிவகுத்துள்ளார் என்பதை மற வாமல் செயல்பட்டால் தோல்வியில் தோய்ந்த எத்தனையோ மனங்கள் துவளா மல் துளிர்த்துக்கொள்ளும். அதன் பயன் சமூகத்துக்கு பெருமளவில் உண்டு.

# தமிழ் மொழியும் அதன் பயன்பாடுகளும்

உலகில் காலத்துக்குக்காலம் பல மொழிகள் தோன்றி வழங்கி மக்களைவிட்டு மறைந்தொழிந்து விடுகின்றன. ஆனல் சில மொழிகள் இவ்வாறில்லாது, நிலைத்தாலும் சில பேச்சுவழக்கு இழந்து, இலக்கியமொழியாக மட்டும் விளங்குகின்றன. ஆனல் மொழிகளுக்கிடையே, மிகப்பழங்காலத்தில் தோன்றி செல்வாக்குடன் வளர்க்கப்பட்டும், பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய், இயக்கியவளமும், கருத்துச் செறிவும் கொண்டு என்றும் இளமைப்பொழிவுடன் விளங்குவது தமிழ் மொழியே ஆகும்.

மக்கள் முதன்முதலில் தோன்றிய நிலப்பரப்பு ''லெமூரியா'' என அழைக்கப்படும். குமரிக்கண்டமாகும். இந்தக்கண்டத்தில் முதன்முதல் மக்கள் இருந்தனர் எனவும், அவர்கள் பேசிய மொழியே உலக முதல் மொழி என நாம் கொண்டால், பழந்தமிழரே முதலில் தோன்றிய மக்கள் எனவும், அவர்களின் மொழியாகிய தமிழே முதல்மொழி என்ற சிறப்பையும் பெறுகிறது.

தமிழ் மொழியைத் திராவிட மொழிக் குடும்பத்தில் ஒன்று எனக்கூறுவர். திராவிட மொழிக் குடும்பத்தில், தொன்மைச்சிறப்பும், தெளிவான அடிப்படையமைப்பும் உடைய தமிழ்மொழி பேசும் இனத்தை வடமொழி ஆசிரியர்கள் திராவிடர் என அழைக்கின்றனர். தமிழ், திராவிடம் என்பன வேறுபட்ட இருவடிவங்கள்போல் காணப்பட்டாலும் ஒன்றினது திரிபே மற்றையது என மொழி ஆராய்ச்சியாளர் ''கால்டுவல்'' எடுத்துக்காட்டுகிறுர்.

[திராவிடம் > திரவிடம் > திரமிடம் > திரமிளம் > த்ரமிளோ > தமிளோ > தமிழ்]

தமிழர்கள்; வாணிபம், விவசாயம், கைத்தொழில் என்பவற்றில் நிகரற்றவர்கள். ஆனல் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை அவர்கள் உயர்த்தப்பாடுபட்ட அளவுக்கு, அவர்கள் தமிழ்மொழியை வளர்க்கத்தவறிவிட்டனர். அப்படி அவர்கள் வளர்ந்திருப்பார்களேயானல், உலகச் செம்மொழி தமிழ், என்ற நிலையில் இருந்து, உலகப் பெருமொழிகளுள் ஒன்ருகக் கருதப்படும் நிலையும் பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒரு மொழியை வளர்ப்பதில் தாயாக இருப்பது அம்மொழியின் இலக்கியங்களாகும். இலக்கியம் என்பது அம்மொழி பேசும் சமூகத்தைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணுடியாகும். தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் அதன் இலக்கியமானது, சங்க காலம்தொட்டு தற்காலம்வரை, அவ்வக் கால சமுதாய வாழ்வைப் பிரதிபலித்து, காலத்தோடும், சமூகத்தோடும் இசைவாகி வளர்ந்து வருகிறது. தற்காலத்தின் இலக்கியங்கள் புதுமை பெற்றிருப்பதோடு, தமிழ் மொழியின் எதிர்கால வளர்ச்சிக்கு ஏணிப்படிகளாய் அமைந்துவிட்டது அதன் மற்ெருரு சிறப்பாகும்.

மொழியானது, சமூகத்தில் தான் வளர்ச்சிபெறும், மொழியானது அங்கு இல்லாவிடில் மக்கள் சமூகமாக இயங்கவே முடியாது. எனவே ஒன்றுபட்ட பொது வாழ்க்கைக்கு மொழி இன்றியமையாததாகும். அன்ருட வாழ்வில் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளவும், உறவாடவும் மொழியானது கருவியாக அமைந்துள்ளது.

எண்ணங்களைப் பேச்சு மூலமும், எழுத்து மூலமாகவும், வெளியிடவும், கொள்கைகள், சமயங்கள், பொருளாதார ஏற்றத்தாழ்வு

கள், குலங்கள், நிலைகள், தொழில்கள் ஆகிய வற்றால் வேற்றுமையுற்ற பல பிரிவினரும், தாம் பேசும் தாய்மொழியால் ஒன்றுபடுவதைக் காணும்போது தாய்மொழியின் பேராற்றலை எப்படிக்கூறுவது?

மொழியின் மூலமாகத்தான் நமது எண்ணங்கள், கருத்துக்கள், உணர்ச்சிகள் முதலியவற்றைத் தெரிவிக்கின்றோம். பேச்சு, எழுத்து மூலம் பிறரது கருத்தை அறிய முடிகிறது. ஒரு நல்ல குடிமகனுக்குத் தெளிவான சிந்தனை, தெளிவான எழுத்து, தெளிவான பேச்சு ஆகியன தேவைப்படுகின்றன. இவைகளை எம் சமூகத்திற்கு வழங்கி, எமது தமிழ் மக்களை, அறிவாற்றலில் சிறந்து விளங்கச்செய்யும் சாதனம் எமதினிய தமிழ் மொழியேயாகும்.

கற்றறிந்த புலவர்கள் மூலம் தான் மொழியின் இலக்கியங்கள் வளர்க்கமுடியும் என்றகாலம் மாறி, தற்போது சாதாரண பாமரமக்கள் மனத்தின்மீதும், இலக்கிய வானம் கவிந்து, அவர்கள் சுவைத்து அநுபவிக்கக்கூடிய முறையில் கவிதை மழை மொழியவேண்டும் என்ற கருத்து மெல்ல எழுந்து தற்போது வெற்றியும் பெற்றுள்ளது. இத்துறையில் முதன்முதலில் வழிகோழியவர் மகாகவி பாரதியாகும். அவரது அடிச்சுவட்டில் பாமர மக்களும் உய்த்துணரும் வகையில் கதைகள், புதினங்கள், நாடகங்கள் போன்ற புதிய மறுமலர்ச்சி இலக்கிய வகைகள் தோன்றி தமிழுக்கு அரண் செய்கின்றன.

இந்தியத் திரைப்படத்துறை பெருமளவு தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கம் கொடுத்து வருகின்றன. எழுத்தறிவற்ற பாமரமக்களின் கருத்துலகத்தை இவை சிறிது வளர்த்தே வருகின்றன,

''இரசிக்கத் தெரியாது'' என்று கூறும் மனிதன் எவனும் உலகில் இல்லை. எனவே தமிழ்மொழியின் இலக்கிய நயத்தினைக் கண்டு இன்புற மொழியானது பெரிதும் பயன்படுகிறது. தமிழ் மொழியில் எண்ணற்ற இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. இவை எமது மூதாதையரின் அறிவுக் கருவூலங்களாகும். இளமையிலிருந்தே மாணவர்களை இலக்கியநயம் காண மொழியானது பெரிதும் வழிகாட்டுகிறது. இதனால் இலக்கியச் சுவையில் திளைத்த ஒருவர் —

'இருந்தமிழே உன்னால் இருந்தேன்; இமையேன்
விருந்து அமிழ்தம், என்னுனும் வேண்டேன்' — என்றார்.

அடுத்து, தமிழ் மொழியானது மனிதனிடத்திலே கற்பனையாற்றலையும், முருகுணர்ச்சியையும் வளர்க்கின்றது. இலக்கியத்தின் கருவூலம் கற்பனை ஆற்றலாகும். இது கவிதை, சிறுகதை போன்றவற்றின் படைப்பிற்கு இன்றியமையாதனவாகும்.

முருகுணர்ச்சி என்பது, அழகுள்ளவைகளை துய்க்கும் ஒருவகை ஆற்றலாகும். இலக்கிய ஆசிரியன், புலன்களாலும், கற்பனை ஆற்றலாலும் கண்டவற்றையே, அவன் படைத்த இலக்கியங்களைப் படிக்கும்போது எம்மையும் காணச்செய்கிறான். பாரதியின் அடிச்சுவட்டில் வந்த பாரதிதாசனின் 'முழுமதியக்காட்சி' இதற்கு பறைசாற்றுகிறது.

நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலா என்று காட்டுகிறாய் ஒளி முகத்தைக்
கோல முழுதும் காட்டிவிட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ-வானச்
சோலையிலே பூத்த தனிப் பூவோ நீதான்
சொக்க வெள்ளிப் பாற்குடமோ?
அமுத ஊற்றோ?
காலைவந்த செம்பரிதிக் கடலில் மூழ்கிக்
கனல் மாறிக் குளிரடைந்த
ஒளிப்பிழம்போ!

கற்பனை ஆற்றலோடு, வழிவழிவரும் சமூக இயலையும் பண்பாட்டை அறியும் திறவு கோலாகவும் வாழ்க்கையை வளம் படுத்தி மனிதர்களுக்கு அறநெறிகளை ஊட்டுவதாயும் தமிழ்மொழி விளங்குகிறது.

மொழியை வளர்ப்பவர்கள் புலவர்கள் மட்டும்தான் என்றகாலம் மாறியதுபோல, தமிழ்மொழியை மாணவர்களுக்கு புகட்டுபவர்கள் தமிழ் முதல் மொழி ஆசிரியர்கள் என்ற நினைப்பில் இருந்துமாறி, தமிழ் மொழியைப் பேசுகின்ற, அம்மொழி மூலம் கல்வி புகட்டுகின்ற ஏனைய பாடத்துறை ஆசிரியர்களும், தாய்மொழி ஆசிரியர்களே என்ற எண்ணத்தோடு செயற்படின், செம்மொழி, பெருமொழி என அழைக்கப்படும் தமிழ்மொழி என்றும் பொலிவுடன் வளரும்.

வளர்க தமிழ்! பெறுக அதன் பயன்!

திரு செ. சிறீகிருஷ்ணராசா
தமிழ் முதல்மொழி ஆசிரியர்
(இறுதி வருடம் — 1982)

# மின் பாதுகாப்பு

மின்சாரம் மனிதவாழ்வில் முக்கிய இடத்தை வகிக்கிறது. மின்சாரத்தின் கவலையீனமான உபயோகம் அதிர்ச்சிக்குள்ளாக்கும்; விபத்தையும் ஏற்படுத்தலாம். மின்சாரம் இழைக்கும் தண்டனை பாரபட்சமற்றது. அது சிறிய தவறுகளுக்கும் பெரிய தவறுகளுக்கும் ஒரே தண்டனையே கொடுக்கிறது. மின்சார விதிமுறைகளைக்கூறிப் பாதுகாப்போடு வாழவழி கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மின் அதிர்ச்சி :-

ஷாக் [Shock] அல்லது அதிர்ச்சி என்பது என்ன? மூளை, இதயம், தசைநார்கள் நரம்பு ஆகியவற்றின் இயக்கம் உடலில் காணப்படும் 'உடல் மின்சாரத்தினால்' நடைபெறுகிறது என அறியப்படுகின்றது. இந்த உடல் மின்சாரத்தை வெளி மின்சாரம் தாக்கி ஏற்படுத்தும் மாற்றமே மின் அதிர்ச்சியாகும். வெளி மின்சாரத்தின் விளைவாக உடலில் பாயும் மின் ஒட்ட அளவைப் பொறுத்து அதிர்ச்சியின் தன்மை மாறுபடுகின்றது.

மின்னோட்டம் ''அம்பியர்'' என்ற அளவையில் அழவிடப்படுகின்றது. $\frac{1}{1000}$ அம்பியர் மின்னோட்டத்தை மில்லி அம்பியர் என்கிறோம். பலதிறப்பட்ட அளவான மின் ஓட்டத்தால் உடலில் தோன்றும் விளைவுகள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

| அளவு | விளைவு |
|---|---|
| a. ½ மில்லி அம்பியர் வரை —— | a. அறியமுடிவதில்லை. |
| b. ½ மி. அ. முதல் 2 மி. அ. வரை —— | b. அறியமுடிகிறது. |
| c. 2 மி. அ. முதல் 10 மி. அ. வரை —— | c. தசைநார் இழுத்துக்கொள்கிறது. |
| d 5 மி. அ. முதல் 25 மி. அ. வரை —— | d. தாள முடியாத வலி ஏற்படுகின்றது. |
| e. 50 மி. அ. முதல் 200 மி. அ. வரை —— | e. இதயம் தடைபடுகின்றது. |
| f. 100 மி. அ. முதல் —— | f. மூச்சு தடைபடுகிறது. |

25 மி. அ. வரையான மின்னோட்டம் பாயும் நிலையில் மின்கம்பியைக் கையில் உதறித் தள்ளிவிடலாம். அதற்குமேல் கையின் இயக்கம் தடைப்பட்டுத் தசைகள் இறுகுவதால் மின்கம்பியை உதறிவிட முடிவதில்லை.

## ''ஓம்'' விதி :-

உடல் வழியாகப்பாயும் மின்சார ஒட்ட அளவைக்கணக்கிட்டு நம் தலைவிதியை முடிவு செய்வது இந்த 'ஓம்' விதி ஆகும். நீர் ஓட்டத்தை மின் ஓட்டத்திற்கு உவமையாக கூறலாம். குழாயின் அளவு, தடை, தண்ணீர் அழுத்தம் ஆகியவற்றிற்கு ஏற்ப நீரோட்டம் மாறுபடும். அதேபோல் மின்னோட்டமும் மின்கம்பியின் அளவு, மின் தடை, மின்னழுத்தம் ஆகியவற்றிற்கு ஏற்ப மாறுபடும். ஓமின் விதியை சுருக்கமாக கூறினால்

$$\text{மின்னோட்டம் (A)} = \frac{\text{மின் அழுத்தம் (V)}}{\text{மின் தடை } (\Omega)}$$

A — அம்பியர்
V — வோல்ட்
Ω — ஓம்

நம் வீடுகளில் பயன்படுத்தப்படும் மின் இணைப்பு 220 வோல்ட் (220 V) மின்னழுத்தம் கொண்டது. இதற்கு குறைந்த மின்னழுத்தம் [Low Tension] என்று பெயர். தொழிற்சாலைகளில் மின்னழுத்தம் 415, 3300, 11,000, 33,000 வோல்ட் என்று பல அளவுகளில் இருக்கும் இவற்றுள் 415

வோல்ட் நடுத்தர மின்னழுத்தமாகும். மற்றவை உயர் மின்னழுத்தங்களாகும்.

'அதிக மின் அழுத்தம் ஆபத்தானது' என்ற அச்ச உணர்வு பொதுமக்களிடம் பரவலாக இருப்பதால் எல்லோரும் கவனமாக இருக்கின்றார்கள். அதே வேளையில் குறைந்த மின்னழுத்தம் ஆபத்தில்லை என்று கவலையீனமாக இருப்பதால் விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்றன. மின் அதிர்ச்சிக்கு மின் ஓட்ட அளவே முதன்மையான காரணம் மின்னழுத்தமல்ல என்ற அறியாமையே இதற்கு காரணமாகும். 10.000 V மின்னழுத்தம் உள்ள கருவிகளைக்கொண்ட தொலைக் காட்சிப் பெட்டியில் கைபட்டால் அதிர்ச்சி உண்டாகுமே ஒழிய, மூச்சோ, இதயமோ நிற்பதில்லை. ஏனெனில் தொலைக்காட்சிப் பெட்டியின் 10,000 V மின்சாரம் உடல் வழியாக ஒருசில மில்லி அம்பியர் மின் ஓட்டத்தை மட்டுமே ஏற்படுத்தும் திறனுடையது.

தொழிற்சாலையில் பயன்படுத்தப்படும் 10,000 வோல்ட் மின்சாரம் பல அம்பியர், ஆயிரம் அம்பியர் கூட மின்னோட்டம் பாயச் செய்யும் திறனுடையது. எனினும் பெரும்பாலான வேளைகளில் பலமான மின்சக்தி மின்கருவியைத் தொட்டவுன் ஆளைத்தூக்கி தொலைவில் எறிந்துவிடும்.

உடம்பின் மின் தடையை நாம் அறிந்து கொண்டால், உடலில் பாயும் மின்னோட்டத்தைக் கணக்கிடமுடியும். அதிர்ச்சியின் தன்மையையும் அறியலாம். மனிதனின் உடல் மின்தடை உடலைப் பொறுத்து 1000 ஓம் முதல் 600.000 ஓம் வரை மாறுபடுவதுண்டு. இடைப்பட்ட அளவாக 5000 ஓம் மின்தடை அமையலாம் எனக்கணக்கிடப்பட்டுள்ளது.

**மின் அதிர்ச்சி :-**

மின் அதிர்ச்சியின் தன்மையை அறிந்தவுடனே அச்சமாக இருக்கிறதா? இதயத் துடிப்பு நின்றுவிட்டதா? அச்சம் வேண்டாம். மின்சாரம் பாதுகாப்பானது. மின்சாரம் உலோகப்பொருட்களில் எளிதாகப் பாயும். உலோகமற்றதில் அவ்வளவாகப் பாயாது. அவையே காப்புறை அதாவது காலலிகளாகும். கம்பியை காவலியால் அகற்றிவிட்டால் மின்சாரம் நம்மைத் தாக்காது.

காவலிகளாவன இரப்பர், பட்டு, பருத்தி, பிளாஸ்டிக், மைக்கா, கட்டை, காகிதம் போன்றவைகளாகும். ஆனால் இவை ஈரமற்றதாய் இருக்கவேண்டும். அடிபட்டோ உடைபட்டோ இருக்கக்கூடாது. பாதுகாப்புக்கு முதல் கலசம் காவலியாகும். காவலிகளினால் நம்மைக் காப்பாற்றிக்கொள்ளலாம்.

வீடுகளில் மின்னடுப்பு, மின் அழுத்தி, ரேடியோ ஆகியவற்றில் காவலிகள் பழுதடைந்து கசிவு உண்டாகலாம். அதனைத் தொடுபவர் அதிர்ச்சியுறலாம்.

மேலை நாடுகளில் இங்ஙனம் இறப்போர் அதிகம். எனவே மின்கருவிகளை உயர்ந்த மரப்பலகைமீது நின்று தொடுவதே நன்று. தரையில் நின்று தொடக்கூடாது. இறப்பர் செருப்பு அணியலாம். எனவே காவலி பழுதடைந்திருப்பின் மின்சாரத்தால் இயங்கும் அக்கருவியை உடனே பழுதுபார்க்கவேண்டும்.

இரண்டாவது பாதுகாப்பு முறை 'ஏர்த்' (Earth) செய்தல், அதாவது தரையீடு செய்தல் எனப்படும் நில இணைப்பாகும். நில இணைப்புக்கு இணைத்த பொருளே பாதுகாப்பானது. மும்முளைச் செருகி (3 Pin Plug) இணைத்த பொருளை வாங்குவதால் தம்மை நாமே பாதுகாத்துக்கொள்கிறோம். இப்பொருள்களில் உலோகப்பகுதியை பச்சை நிறக்கம்பியால் இணைத்துச் 'செருகி' வழியாக தரைக்கு இணைத்து விடுகிறோம். மின்சாரப் பொருள்களில் பழுது ஏற்பட்டு, மின்சாரம் கசிந்தால், அது உடனே நில இணைப்பு வழியாக எளிதாக தரைக்குப் பாய்ந்துவிடும். அதோடு நில இணைப்பின் குறைந்த மின் தடையால் அதிக மின்னோட்டம் ஏற்பட்டு பியூஸ் (fuse) என்னும் 'உருகி' உருகி மின் ஓட்டத்தைக் துண்டிக்கும்.

மூன்ருவது பாதுகாப்பு 'உருகி'களாகும். வீடுகளில் 'உருகி' உருகிவிட்டால் மீண்டும் அதே அளவு 'உருகியே' போடவேண்டும். அதிக அளவான 'உருகி' பயன்படுத்தப்பட்டால் அது உருகாது. உருகாத உருகி மின் ஒட்டத்தை துண்டிக்காமல் மின் சாதனத்தைத் தொட்டவரைத்தாக்கி மனம் உருகச்செய்துவிடும்.

## முதலுதவி :-

மின்சாரம் நல்லதொரு பணியாள். ஆனல் பாதுகாப்பு விதிகளை மீறிஞல் அவன் கொடியவனுகிவிடுகின்ருன். அதிர்ச்சி அடைந்தவருக்கு மூச்சு நிற்கும். இதயம் தடைப்படும். மின்சாரத்தை நிறுத்தியவுடன் தடைப்பட்ட இதயம் மீண்டும் தானுக இயக்கத்தொடங்கும். ஆகவே மின் அதிர்ச்சி பெற்றவரை மிகமிக விரைவாக மின்சாரத்திலிருந்து விடுவிக்கவேண்டும். சுவிச்சை (ஆளியை) நிறுத்தலாம். காவலி பலத்த கட்டை, காகிதம், துணி ஆகிய வற்ருல் தாக்குண்டவரை இழுக்கலாம். ஆனல் வெறுங்கைகளால் தொடக்கூடாது.

தடைப்பட்ட இதயம் தானுகத் துடிப்பதுபோல தடைப்பட்ட இயற்கை மூச்சு மீண்டும் தானுகத் திரும்பாது. எனவே செயற்கை மூச்சுவரச்செய்யும் முதலுதவியை மேற்கொள்ள வேண்டும்.

அதிர்ச்சி அடைந்தவரைக் காற்ருேட்டமான ஆனல் வெதுவெதுப்பான சூழ்நிலையில் வைத்தல்வேண்டும். தொண்டையில் அடைப்பு ஏதாவது இருந்தால் எடுத்துவிடவேண்டும். உடைகளைக் கூடியமட்டும் களைந்துவிடவேண்டும். தன் நினைவு வரும் வரை பருக எதையும் கொடுக்கக்கூடாது. பாதிக்கப்பட்டவரை மல்லாக்கப்படுக்க வைக்கவும். தலையை பின்புறமாக சாய்க்கவும். அவரது வாயில், உங்களது வாயை வைத்து ஊதவும். மூக்குவழியாக காற்று திரும்பிவராதபடி மூக்கை மூடவும், ஊதிய காற்ருல் மார்பு உயரும். தொண்டை அடைப்பு இருந்தால் குறட்டை ஒலிகேட்கும். நிமிடத்திற்கு 10 முதல் 20 வரை இப்படிச்செய்யலாம். குழந்தையாக இருப்பின் குறைவாக, மெதுவாகச் செய்யவும். மருத்துவர் வரும்வரை முதலுதவி தேவை. பலமணி நேரம் ஆயினும் முதலுதவி தொடர்ந்து அளிக்கப்படவேண்டும்.

இத்தகைய முதலுதவியால் நிறைய நன்மை இருப்பதால் எல்லோரும் இதனை அறிந்து வைத்திருத்தல் நலம்.

**செல்வி. கலா. கந்தையா**
விஞ்ஞான நெறி
(இறுதியாண்டு)

---

**மனம்**

எல்லா முயற்சிகளுக்கும் முன்னேடியாய் இருப்பது மனம்,
உணரும் திறன் அனைத்திலும் மிக மிக உயர்ந்தது மனம்,
சொந்தக் கருத்துக்கள் அனைத்தும் உதிக்கும் இட்மும் மனமே.

— புத்தர்

# ஓ! மை டார்லிங்

என்னிரண்டு விழிகளிலே ஒன்றேயாகி
ஏழையெனைக் கவர்ந்துவிட்ட இதயராணி
உன்னிரண்டு இதழ்களை நான் சுவைத்ததாலே
ஊரறிய உன்னுடைய தாசனுனேன்
பன்னிரண்டு ஆண்டுகளாய்ப் பயின்றதாலே
பாவையுனை மறக்கவொணுப் பக்தனுனேன்
கண்ணிரண்டை இழந்தே நான் நின்றபோதும் – உன்
காதல் நினைவோடே என் காலம் போகும்.

சிறுபொழுது ஓய்வெனக்குக் கிடைத்துவிட்டால்,
சீக்கிரமாய் வந்திடுவேன் உன்னைத்தேடி
ஒரு பொழுதும் நானறியா வித்தைதன்னை
ஓதிடுவாய் நீயெனக்கு ஒவ்வொன்றுக
மறுபொழுது உன்மடியில் மகிழ்ந்திருந்து
மாசிலா உன் அன்பை மனதால் பார்ப்பேன்
சிறுபொழுது உனைவிட்டுப் பிரிவதென்றுல்
சீ! எனக்கு மனமில்லை என்ன செய்வேன்.

கருத்தறியாச் சிலருக்கு உன்னைக் கண்டால்
கசக்கிறதாம் வேம்பாக கழலுகின்றுர்
மருத்துவத்தில் இதற்காங்கோர் வகையுமில்லை
மகிமைதனை அறியாது மயங்குகின்றுர்
பருத்துயர்ந்த உன்னுடைய பண்புதன்னைப்
பயிற்றுவித்த பாவலர்கள் செய்தகோலம்
உருத்தெரியாதாக்கிவிட்டார் ஐயோ! பாவம்
உண்மையிலே இவர்கள் உனை உணராதாரே.

நாதியற்ற சிலர் உன்னைச் சிக்கலாக்கி
நம் முன்னே வைப்பார்கள் தீர்க்கச் சொல்லி
சாதி, வகை எனப்பிரித்து ஒவ்வொன்றுகச்
சரிசெய்வேன் விடைகாண்பேன் அதனுல் எந்தன்
பேதலித்து நின்ற மனம் பின்னர் ஆங்கோர்
பெருஞ்சுமையை இறக்கிவிட்ட நிலையைக் காணும்
காதலித்து என்னிதயம் கவர்ந்துவிட்ட
கணிதமெனும் கற்கண்டே! ஓ! மை டார்லிங்.

— மா. நடராசா
கணிதநெறி - இறுதியாண்டு.

# கல்விப் பயிற்சியும் மனித வாழ்க்கையும்

திரு. ந. நடராசா M. A.
விரிவுரையாளர்.

மானிட வாழ்விலே மிகவும் பிரயோசனமான ஒரு சம்பாத்தியம், கல்விச் சம்பாத்தியம். செல்வமானது காலம், இடம் முதலியவற்றால் அழிந்தொழியும் தன்மை வாய்ந்தது. நீர், நெருப்பு முதலியவற்றாலும், காலத்தாலும் அழிவுபடாத தன்மை வாய்ந்தது கல்வியென்பது நாமனைவரும் அறிந்ததோருண்மை. அநேக துன்பங்கள் நிறைந்த மனித வாழ்விலே, இன்பம் தரத்தக்கதும், ஆசைவைக்கத்தக்கதும், உலகத் துன்பங்களைக் கணப்பொழுதிலே மறக்கச்செய்வதும் கல்வியே ஆகும். ''பணம் பாதாளம் மட்டும் பாயும்'' என்பது என்னவோ உண்மைதான். ஆனால் கல்வி பதினன்கு பிறப்புக்கும் தொடர்ந்து வருமென்பது நமது ஆன்றோர் வாக்கு. இறந்த காலத்திலும், நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் நடைபெறும் உண்மைகளை எமக்கு முன்கூட்டியே அறிவிக்கும் சக்தி கல்விக்கு உண்டு. கல்வி தூய்மையானது உண்மையைத் தேடுவதற்கு இவ்வுலகிலே வழிகாட்டுவது. தூய்மைக்கு இலக்கணமான வெண்மை நிறம் கல்வியோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளமை மிகவும் பொருத்தமானது. கல்விக்கிறைவி சரஸ்வதியும் மாசற்ற வெள்ளை நிறமாகத் துலங்குகிறாள். அவளது நாயகன் பிரமதேவனும், முக்காலத்தையும் பரலோக வாழ்க்கையையும் இருந்தபடியே உய்த்துணரும் ஆற்றல் வாய்ந்தவரென்பர் ஞானியர்.

மிகப்பழைய காலத்திலிருந்தே அழகுடைய பொருளாகக் கல்வி போற்றப்பட்டுள்ளது. அழகு, நன்மை, உண்மையாகிய அழிவுபடாத மூன்று விழுமியங்களுள் அழகு முதலில் வைத்து எண்ணத்தக்கது. ''குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும், மஞ்சள் அழகும் அழகல்ல. நெஞ்சத்து நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையாற் கல்வி யழகேயழகு'' என்றனர் முதியோர். நடுநிலை நெறி நிற்கச்செய்வதும், நல்வழிப்படுத்துவதும், உண்மை அழகுடையதும் கல்வியே. 'அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்' என்னும் வழி விருப்பத்தைத்தருவதும், கல்வியேயாகும் என்பதும் பெறப்படுகின்றது. ''கல்லாளெருவன் குணநலம் பேசுதல், நெல்லினுட் பிறந்த பதராகும்மே'' என்ற அதிவீரராம பாண்டியனரின் வாக்கினால், கல்வியில்லாதவர் சமுதாயத்துக்குப் பயனற்றவர் என்பது புலனாகிறது.

கல்விப் பயிற்சி இரண்டு வகையாகிறது. அவை உடற்பயிற்சி, உளப்பயிற்சி என்பன. இவ்விரு பயிற்சிகளும் இணைந்ததே முழுமையான பயிற்சியாகும். பூரணமானதொரு மனிதனை ஆக்கவேண்டுமாயிருந்தால், நாம் இக்கல்விப் பயிற்சி இரண்டினையும், சமமாகவே கொடுத்தல் வேண்டுமென்பது பெறப்படுகிறது. புராதன 'ஸ்பாட்டா' நகர அரசில் வாழ்ந்த அறிஞரான 'லிக்கர்கஸ்' என்னும் பெரியார், தமது மாணவர்களுக்கு இவ்விரு பயிற்சிகள் மூலமாகக் கல்வியைக் கொடுத்தனரென அறிகிறோம். கிரேக்கதேச தத்துவ அறிஞர் 'பிளேத்தோ', உடற்பயிற்சி, உளப்பயிற்சி, இசைப்பயிற்சி ஆகியவற்றைக் கல்விக்கான பயிற்சியாகக் கூறுகின்றார்.

'உள்ளத்துறுதி உடலுறுதிக்கண்ணது' என்னும் கருத்தமைந்த கிரேக்கப் பழமொழி, உடல் உளப் பயிற்சிகள் ஒன்றிலொன்று

தங்கியுள்ளதனைக் காட்டுகின்றன. ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் ஆண்டுகளுக்கு வாழ்ந்து, திருமந்திரம் பாடியவர் எனச் சிறப்பிக்கப்பட்ட திருமூலநாயனர் தமது திருமந்திரத்திலே,

''உடம்பாரழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே''

எனக்கூறியிருப்பதனை நாம் கவனமாக நோக்குதல்வேண்டும். இங்கு உளப்பயிற்சிக்குஉடற்பயிற்சி இன்றியமையாததென்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்த இருபதாம் நூற்றுண்டிலே, பாடசாலையிற் கல்வி பயிலும் மாணவர்க்கு உடற்பயிற்சி இன்றியமையாததென்பது ஆய்வுகளின் மூலம் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. உடலுறுதியுள்ள பிள்ளை, கல்வியிலும் ஊக்கமுள்ளதாக வளர்கின்றது. நல்ல உறுதியான உளமும், உடலுமுள்ளவனே சமயங்கள் கூறும் உண்மைகளை உள்ளவாறறிவதற்குத் தகுதியுடையவன் என்ற வேதாந்தகேசரி விவேகானந்தர் கூற்றும் இதன் உண்மையை வெளிப்படுத்துகின்றது. இராமகிருஷ்ண சங்கப் பாடசாலைகளிலே, யோகாசனப் பயிற்சி வழக்கமாகக் கொடுபடுவதன் இரகசியம் இதுவேயாகும். இலங்கைப் பாடசாலைகளிலும் உ ற்பயிற்சிக்காக யோகாசனக்கலை, மேலைத்தேச கீழைத்தேச உடற்பயிற்சிகள் என்பன பயிற்றப்பட்டுவருவது கல்வியிலே கூடிய பயனைப் பெறுவதற்கேயாகும்.

இனி, பாடங்களாலமைந்த கல்வியை உளப்பயிற்சியென நாம் கூறலாம். உளப்பயிற்சிக்காக அமைந்த பாடக்கல்வியை எண், எழுத்து என இரண்டாக வகுப்பர். இவ்விரண்டின் தன்மைகளையும் பிழையற உணர்தலே கல்விப் பயிற்சிக்குரிய நெறியாகும்.

''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'' என்றனர் ஔவையார்
''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு'' என்றனர் பொய்யா மொழியார் திருவள்ளுவர்.

இவ்விருவரும் எண்ணை முதலிலும், எழுத்தை அதனையடுத்தும் கூறியுள்ளமை நோக்கத்தக்கது. திருமூலநாயனர் தமது திருமந்திரத்திலே 'எண்ணறிந்தோர் எழுத்தறிந்தோரே' எனக்கூறியிருப்பது, நாம் எதனை நன்கு கற்றல்வேண்டுமென்பதற்கு விடை தருகின்றது. சாசுவதமான உண்மையை அறிந்த திருமூலர், மாறுபடாத உண்மைகளை நமக்குணர்த்துகின்ற கணித நூலையே மனிதன் முதலில் படித்தல்வேண்டும் என்பதனை நமக்குணர்த்துகின்றார். எண் உணர்ந்தவர் எழுத்தின் ஆழத்தினை உணர்ந்தவர். 'கணிதம் ஒரு மொழி அது எல்லா மொழிகளுக்கும் திறவுகோல் போன்றது' என்று பிளேத்தோ அறிஞன் கூறும் வார்த்தைகளில் அளப்பரிய உண்மை பொதிந்துள்ளது. மொழியினைச் செம்மையாகக் கற்க விழையும் ஒருத்தர், கணித நூல் நுணுக்கங்களை நன்கு அறிந்து வைத்திருத்தல் பெரும்பயன் தருவதாகும். அதுவே மொழிமூலம் அமையும் கல்விக்குப் பெரும் வளர்ச்சியினைத் தருவதும் ஆகும். ஆகவே ஔவை மூதாட்டி கூறிய இரண்டு கண்களில், வலக்கண் எண்ணாகவும், இடக்கண் மொழியாகவும் இருக்கக் காண்கின்றோம். 'கற்றோர் முகத்திரண்டு கண்ணுடையர்' என்று வள்ளுவர் கூறியது எவ்வளவு பொருத்தம்.

'கல்லாதது உலகளவு, கற்றது கைம் மண்ணளவு' எனக்கூறினர் முதியோர். கைம்மண்ணளவு கற்பதும் கடினமான காரியமே. ஆகவே கல்வியை எவ்வளவு கற்றல் வேண்டும் என உணர்தல் அவசியம். கல்வியெனும் பல்கடற் பிழைத்தும் என்ற முதியோர் வாக்குப்போல், பல கடல்களையும் நீந்திக்கடப்பதற்கு இவ்வுலகில் எத்தனை பேரால் முடியும்? ஆகவே எல்லாம் சொல்லும் வள்ளுவரிடம் செல்வோம். அவர் கூறுகிறார் :—

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''

வள்ளுவரது குறளுக்கு உரைகேட்டு விளங்க, பரிமேலழகரை நாடுகிறோம். அவரோ, - 'கல்வியோ கரையற்றது; கற்பவரோ சிலவாழ்நாள் பல்பிணிச்சிற்றறிவின் மாந்தர்; ஆதலின் கற்கப்படும் நூல்கள் இவை யெனவும், அவற்றைக் கற்குமாறு இதுவெனவும், கற்றுவல்லார்வாய்க் கேட்டுணர்ந்து கொள்ளுவதே கற்றற்குரிய நெறியாகும்' - என்கிறார். பரிமேலழகர் கூறும் கருத்துரையை நாம் உளம்கொண்டு நோக்குதல் வேண்டும். மனிதர் நோய் பிணியுடைய சிற்றறிவினர். ஆதலால் குறுகிய வாழ்க்கையினையுடையவர் அக்குறுகிய வாழ்நாளிடையே கல்வியென்னும் பெரும் விழுமியத் தாற் பெரும் பயன்பெற வேண்டுமாயிருந்தால், வாழ்க்கைக்குத் தேவையான நூல்களை மட்டும் தெரிவுசெய்து, கற்றவர் சொற்படி கற்று, அதன்வழி நிற்றல் வேண்டுமென்பது வெளிப்படையாகின்றது. அதுவே உயிருக்கு ஊதியம் தருவது. அத்தகைய கல்வி இம்மை மறுமைப்பயன்களை அனுபவிக்க வழிகாட்டுவது.

---

**கடவுளின் கவனம்:**

உன்னிடம் எத்தனை பதக்கங்கள், பட்டங்கள், நற்சான்றிதழ்கள் இருக்கின்றன என்று கடவுள் கவனிப்பதில்லை. எத்தனை தியாகம், தொண்டு, தழும்புகள் உள்ளன என்றுதான் கவனிக்கிறார்.

— எல்பாட் ஹப்பார்ட்

**கடமை:**

எந்தக் காரியத்தைச் செய்ய முன்னால் வெறுக்கிறோமோ, செய்யும் போது அலுக்கிறோமோ, செய்தபின் அதைப்பற்றியே ஓயாமல் பேசுகிறோமோ, அதற்குப் பெயர்தான் கடமை.

— சான்றோர்

**மனம்:**

மனம் தடுத்தற்கரியது. மிக மிக நுண்மையானது. விரிவுடையது. விரும்பியபடியெல்லாம் திரிவது. அத்தகைய மனத்தை அடக்குதல் நன்று. அடங்கிய மனம், ஆனந்தம் பெற வாய்ப்பு அளிக்கும்.

— புத்தர்

# விவாகரத்தும் சட்டமும்

திருமணம் செய்யக்கூடாது என்று கூறும் சட்டம் எந்தநாட்டிலும் இருப்பதாக தெரியவில்லை. அதேபோலத் திருமணம் செய்துதான் ஆகவேண்டும் என்று கூறும் சட்டமும் கிடையாது. ஆனால் திருமணம் செய்துவிட்டால் அத்திருமணத்தை நீக்கும் உரிமை மக்களுக்கில்லை. அங்கே அரசு தலையிடுகின்றது. உம்மிட்டப்படி நீர் திருமணநீக்கம் பெறமுடியாது. சட்டத்திலே விதிக்கப்பட்டுள்ள முறையில்தான் திருமணநீக்கம் பெறமுடியும்.

திருமணவாழ்க்கையில் இருந்து விலகும் முறைகளில் விவாகரத்தும் ஒன்றாகும். இலங்கையில் திருமணம் சம்பந்தமான விடையங்களை கண்டியர் திருமணமும் திருமணநீக்கமும் என்ற சட்டம் (Kandian Marriage and Divorce Act) முஸ்லிம் திருமணமும் திருமணநீக்கமும் என்ற சட்டம் (Muslim Marriage and Divorce Act) பொதுத் திருமணக் கட்டளைச் சட்டம் (General Marriage Ordinonce) என்பன ஆளுகின்றன. கண்டியத் திருமணமும் திருமணநீக்கமும் என்ற சட்டம் கண்டியச் சிங்களவர்கட்கும், முஸ்லிம் திருமணமும் திருமணநீக்கமும் சட்டம் முஸ்லிம்கட்கும், பொதுத் திருமணக்கட்டளைச் சட்டம் ஏனைய சமூகத்தவர்கட்கும் ஏற்புடையது. கண்டியச் சிங்களவர்கள் விரும்பினால் பொதுத் திருமணக்கட்டளைச் சட்டத்தின்கீழ் திருமணம் செய்துகொள்ளலாம்.

விவாகரத்துப்பெற ஒவ்வொரு சட்டமும் வெவ்வேறு காரணங்களை குறிப்பிடுகின்றன. கண்டியத் திருமணமும் திருமணநீக்கும் சட்டமும், முஸ்லிம் சட்டமும் திருமண முறிவுக் கொள்கையை (Breakdown Theory) அடிப்படையாகவைத்து விவாகரத்தை வழங்குகின்றன. கண்டியச் சட்டத்தின் கீழ் கணவன் மனைவி இருவரும் விவாகரத்துக்கு சம்மதித்தால் அல்லது குறித்த ஒருகாலத்துக்குப் பிரிந்திருந்தால் திருமண நீக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம். முஸ்லிம் சட்டத்தில் கணவன் 3 முறை தலாது கூறுவதன்மூலம் விவாகரத்தை பெற்றுக்கொள்ளலாம்.

பொதுத் திருமணச் சட்டம் திருமணத் தவறு கொள்கையை (Matrimonial Fault Theory) ஐ அடிப்படையாகவைத்தே விவாகரத்தை வழங்குகின்றது. பொதுத் திருமணக்கட்டளைச்சட்டம் பிரிவு 19 திருமணநீக்கம் பின்வரும் காரணங்களின் அடிப்படையிலேயே வழங்கப்படலாம் எனக் கூறுகிறது. அவையாவன.

1. திருமணத்தின் பின்னரான பிறர்துணைப் புணர்ச்சி (Adultery Subsequent Marriage)
2. வன்மஉறவறுத்தல் (Malicious desertion)
3. திருமணத்தின்போதுள்ள மாற்ற முடியாத மலட்டுத்தன்மை (Incurable impotency at the time of Marriage)

பொதுத் திருமணக்கட்டளைச் சட்டம் கூறும் காரணிகளை ஆராய்வோம்.

பிறர்துணைப் புணர்ச்சி (Adultery)

ஒரு துணைவருக்கும் அவரது கணவர் அல்லது மனைவியல்லாத வேறொருநபருக்குமிடையே ஏற்படும் உறவே பிறர்துணைப் புணர்ச்சி எனப்படும். வேறுநாடுகளில் வேறு வகையான உறவுக்கும் பிறதுணைப் புணர்ச்சி விரிவுபடுத்தப்பட்டுள்ளது. எமது சட்டத்தில் இதுகாரணமாக இல்லாவிடினும் மாசற்ற துணைவர் இந்நடத்தையில் ஈடுபட்ட துணைவருக்கு எதிராக அமைவான வன்ம உறுவறுத்தலுக்கு (Constructive Malicious desertion) வழக்கிடலாம். பிறர்துணைப் புணர்ச்சியைக்காட்டி விவாகரத்துப் பெறுவதற்கு ஒருமுறை பிறர்துணைப்

370·73
ARA
AR

புணர்ச்சியில் ஈடுபட்டார் எனக் காட்டினுலே போதும்.

பிறர்துணைப் புணர்ச்சியை அடிப்படையாகக்கொண்டு விவாகரத்துப் பெறுவதற்குரிய வழக்கில் மனைவியுடன் பிறர்துணைப் புணர்ச்சியில் ஈடுபட்ட ஆணையும் உடன் எதிராளியாக (Co-defendand) போடவேண்டும் என குடியியல் நடபடிக்கக்கோவை (Civil Proceduce Code) பிரிவு 598 கூறுகின்றது. உடன் எதிராளியை வழக்கில் சேர்ப்பதன்மூலம் மாசற்ற துணைவர் அவரிடமிருந்து நட்டஈடு கோரலாம். விவாகரத்து வழங்கிடாமலும் உடன் எதிராளியிடமிருந்து நட்டஈடு பெறலாம். ஆனுல் பின்வரும் சந்தர்ப்பங்களில் உடன் எதிராளியை விவாகரத்து வழங்கில் குறிப்பிடத் தேவையில்லை

1. பெண் விபசாரத்தில் (Prostitution) ஈடுபட்டிருந்தால்.
2. பெண்ணுடன் பிறர்துணைப் புணர்ச்சியில் ஈடுபட்ட ஆள் இறந்திருந்தால்
3. பெண்ணுடன் பிறர்துணைப் புணர்ச்சியில் ஈடுபட்ட ஆணைக் கண்டுபிடிக்க முடியாதிருந்தால்.

இப்போது ஆணைப்போல் பெண்ணையும் உடன் எதிராளியாக வழக்கிட்டு நட்டஈடு பெறலாமென புதிய குடியியல் நடப்டிக் கோவை பிரிவு 599 (A) கூறுகிறது. ஆகவே இப்போது ஆண் பெண் வேறுபாடின்றி துணையுடன் பிறர்துணைப் புணர்ச்சியில் ஈடுபட்டவரிடம் இருந்து நட்டஈடு கோரலாம்.

பிறர்துணைப் புணர்ச்சிக் குற்றத்தில் ஈடுபட்ட துணைவர் அக்குற்றத்தை ஏற்றுக் கொள்ளல் பிறர்துணைப்புணர்ச்சியைக்காட்டுவதற்கு ஏறகக்கூடிய சான்ருகுமா என்பது சந்தேகத்துக்குரியது. இதன் உண்மைத் தன்மையில் நீதிமன்றம் திருப்தியுற்ருல் ஒழிய அது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஏனெனில் தம்பதிகள் சூழ்ச்சிசெய்து 3ம் நபரிடம் இருந்து நட்டஈடு கோரும் நோக்கத்துடன் ஒருவர் மற்றவரை பிறர்துணைப் புணர்ச்சியில் ஈடுபடத் தூண்டியிருக்கலாம் என்பதனுலேயே. வெறும் கடிதங்களும் பிறர்துணைப் புணர்ச்சியை நிருபிக்க முடியாது இருவரும் அடுத்தடுத்த அறையிலோ அல்லது ஒரேயறையிலோ இருந்ததாகக் காட்டி பிறர்துணைப் புணர்ச்சியை நிறுவ முடியாது. பிறர்துணைப் புணர்ச்சி மறைவாக நடப்பதால் அதைச் சூழ்நிலைச்சான்ருலே நிருபிக்கமுடியும். சூழ்நிலைச்சான்று என்பது பிறர்துணைப் புணர்ச்சி என்ற குற்றம் நியாயமாக நடைபெற்றிருக்கலாம் என ஊகிக்கக்கூடிய சூழ்நிலையாகும். (உ + ம்) இருதாரக்குற்றதிற்கு அல்லது கற்பளிப்புக்கு தண்டனை பெற்றிருத்தல், நெறிமுறையற்ற பிள்ளைக்கு பராமரிப்புப் பணம் கட்டும்படி கட்டளையிட்டிருத்தல் அல்லது மேகநோய் பெற்றிருந்தல் போன்றவையாகும்.

வன்ம உறவறுத்தல் (Malicious deseriion)

பொதுத்திருமணக் கட்டளைச்சட்டம் கூறும் அடுத்த காரணம் வன்ம உறவறுத்தலாகும். வன்ம உறவறுத்தல் எனும் திருமணக்கடப்பாட்டை உடைக்கும் செயல் எப்படியிருக்கவேண்டும் என்பதைப் பற்றி தனிவிளக்கம் தரப்படவில்லை. நீதிமன்றங்கள் ஒவ்வொரு வழக்கின் நிகழ்வுகட்கு ஏற்ப தீர்ந்துள்ளன. நியாயமான காரணம் எதுவுமின்றி திருமண அந்தஸ்த்துக்கு முடிவு ஏற்படுத்தும் எண்ணத்துடன் எருதுணை மற்றத் துணையை விட்டுப்பிரிதல் வன்ம உறவறுத்தல் என்பதுடன் அவ்வாறு கைவிட்டுச் செல்பவரே இதற்கு காரணமாவார் என்று கருதப்படும். அ-து வன்ம உறவறுத்தல் என்பது இரு அம்சங்களை அடக்கியுள்ளது.

1. உடலளவில் பிரிந்திருத்தல் (Physical seperation)
2. பிரிந்திருக்கவேண்டும் என்ற எண்ணம்.

இவ்விரு அம்சங்களில் ஒன்றுமட்டும் நிருபிக்கப்படின் (உ + ம்) பிரியவேண்டுமென்ற எண்ணம் இன்றி ஆனுல் பௌதிக அடிப்படையில் பிரிந்திருப்பின் அது உறவறுத்தல் ஆகமாட்டாது. தற்காலக் சட்டத்



250048
ARCHIVES

தில் விரிவாக்கப்பட்ட வியாக்கியானப்படி துணைவர்கள் இருவரும் ஒரேகூரையின்கீழ் வசித்தபொழுதும் வன்ம உறவறுத்தல் என்ற அம்சத்தை நிருபிக்கலாம் என்றும் வெவ்வேறு வீடுகளில் தனித்தனியாக வசித்தல் போன்று நிருபிக்கலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே வன்ம உறவறுத்தல் என்பதன் கருத்தாவது இருவருக்கும் பொதுவான திருமணவாழ்வை கைவிடுவதேயொழிய இருவருக்கும் பொதுவான திருமண இல்லத்தை கைவிடுவதல்ல.

தற்காலச் சட்டத்தில் வன்ம உறவறுத்தல் என்பது அமைவான வன்ம உறவறுத்தலையும் (Constructive Malicious descrlion) உள்ளடக்கும். அ-து அமைவான வன்ம உறவறுத்தல் என்பது திருமண வாழ்க்கையை முடிவுக்குக்கொண்டுவர விரும்பும் ஒரு நண்பர் சில செயல்களைச் செய்வதன்மூலம் மாசற்ற மற்றத்துணைவரை வீட்டைவிட்டு வெளியேறச்செய்வதாகும். இச்சந்தர்ப்பத்தில் உண்மையில் கைவிட்டுச் சென்றவரன்றி மற்றவரே இக்குற்றத்திற்கு பொறுப்பாவார்.

கொடுமை, பராமரிக்கத் தவறுதல், நியாயமற்ற முறையில் பிறர்துணைப் புணர்ச்சியில் ஈடுபட்டிருப்பதாக ஒரு துணைவர் மற்றத்துணைவர்மீது குற்றம்சாட்டுதல் ஆகியனவும் அமைவான வன்ம உறவறுத்தலாக கருதப்படும். எனவே ஒரு துணைவரால் தாங்கமுடியாத நிலையை மற்றவர் உருவாக்கினல் இத்தகைய நிலையை உருவாக்கியவரே அமைவான வன்ம உறவறுத்தல் எனும் குற்றத்திற்கு பொறுப்பாவார்.

திருமண உரிமைகளை கொடுக்க மறுத்தல் வன்ம உறவறுத்தல் ஆகுமா என்ற விடயம் சம்பந்தமாக இலங்கையில் பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. நியாயமான காரணம் இருந்து உறவுகொள்ள மறுத்தல் வன்ம உறவறுத்தலாகாது. திருமண உறவுமுறையை முடிவுசெய்யும் நோக்குடன் உறவுகொள்ளமறுத்தல் மட்டுமே அமைவான வன்ம உறவறுத்தலை உணர்த்தும்.

பிரிந்திருக்கவேண்டும் என்ற எண்ணம் மீண்டும் திரும்பும் எண்ணமாக இருக்கக் கூடாது.

திருமணம் திருமணநீக்கம் சம்பந்தமாக இலங்கையில் அதுவும் ஒரே இனத்துள்கூட வெவ்வேறு சட்டங்கள் காணப்படுகின்றன, இவ்வாறு ஒரே நாட்டில் ஒரே இனத்துள் வித்தியாசமான சட்டங்களும் கொள்கையும் இருப்பது வருந்தத்தக்கது. ஒரு சீர்த்தன்மையில்லை என்ற காரணத்தால் யாவருக்கும் பொதுவான ஒரு சீர்த்தன்மையான சட்டத்தை அமைப்பதற்கு இருபது இருபத்திரண்டு வருடங்கட்குமுன்பு ஒரு ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அது சிறிது காலம் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தது. ஆனல் அக்குழு அமைக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. அத்துடன் அக்குழு பொதுத்திருமணக் கட்டளைச்சட்டம் விவகாரத்துக்கு கூறும் மூன்று காரணங்களைத்தவிர கொடூரம், கொலைக்கான தண்டனை பெறல், மாற்றமுடியாத சித்த சுவாதீனமற்ற நிலை போன்றவையும் விவாகரத்துக்கு காரணமாக ஏற்கப்படவேண்டும் எனக்கூறியது. இவைகூட ஏற்கப்படவில்லை.

பொதுத் திருமணக் கட்டளைச்சட்டம் திருமணத்தவறு அடிப்படையில் விவாகரத்து வழங்குவதும் விரும்பத்தக்கதல்ல. கணவன் மனைவியராய் வாழமுடியாது என்று கணவனும் மனைவியும் நன்ருக நம்புகிற பட்சத்தில் அவர்கள் விவாகரத்துப் பெற திருமணக் குற்றமொன்றை எதிர்பார்த்துக்கொண்டிருக்கவேண்டியிருக்கிறது. அவ்வாறு ஒரு குற்றமும் நிகழாதபட்சத்தில் விவாகரத்துப்பெற முடியாமல் வாழ்ந்தும் வாழாத நிலையில் தங்கள் வாழ்க்கையை சீரழிக்கவேண்டி ஏற்படுகிறது. கணவன் மனைவியர் பிரியவிரும்பியும் சட்டம் இடம் தராத காரணத்தால் கணவனே மனைவியோ பிறர்துணைப் புணர்ச்சி அல்லது வேறு தவறுகளைப்புரிய நேர்கின்றது. இது மணவினை சார்ந்த குற்றமாதலின் விவகரத்துக்கான காரணமாகவும் அமைகிறது. ஒருவரை ஒருவர் விரும்பாத கணவன் மனைவியர் இருவரும் அல்லது கணவன் அல்லது மனைவி



250043

இக்குற்றத்தைப்புரிந்து அதன்மூலம் திருமண நீக்கம் பெறும்வரை காத்திராமல் அவர்களிலிருவரும் சம்மதம் தெரிவிப்பதன் பேரில் அவர்களைப் பிரிவதற்கு விடுவதே நல்லது.

இப்போது எங்கள் சட்டமும் திருமண முறிவுத் தத்துவத்தை (Break down theory) தழுவியுள்ளது. புதிய குடியியல் நடபடிக் கோவையில் (Civil Procedure code) புதிய ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளது. சட்டப் பிரிவு பெற்று இரண்டு வருடங்கட்கு பின்பு தம்பதிகள் சேராதிருந்தால் விவாகரத்துப் பெறலாம் என குடியியல் நடபடிக்கோவை பிரிவு 608 (2) (a) கூறுகின்றது. அத்துடன் பிரிவு 608 (2) (b) சட்டப்படியன்றி இருவரும் சுயமாகப் பிரிந்திருந்து 7 வருடங்களின் பின்பு சேராதிருந்தாலும் விவாகரத்தைப் பெறலாம் என்கிறது. ஆகவே இப்போதுள்ள சட்டம் முன்னர் இருந்த சிக்கலை ஓரளவு தீர்த்துள்ளது.

விவாகரத்துப் பெறமுன்னர் பராமரிப்புப் பணம் (Maintanance) பெறலாம். விவாகரத்து வழங்கப்பட்டபின்னர் பெண்ணுக்கு பிரிவினைப் பணம் (Alimony) என ஒரு தொகை வழங்கப்படும். இப்பிரிவினைப் பணம் இடைக்காலப் பிரிவினைப் பணத்தையும் (Alimony Pendente) நிரந்தரப்பிரிவினைப் பணத்தையும் உள்ளடக்கும். இடைக்காலப் பிரிவினைப் பணம் வழக்கை நடாத்தவும் வழக்கு முடியும்வரை தன் செலவுக்கும் கோரும் பணமாகும். இதன்பின் நிரந்தரப் பிரிவினைப் பணம் ஒரேயடியாகவும் கட்டலாம், மாதாந்தப் பணமாகவும் கட்டலாம். தொகை பெண்ணின் அந்தஸ்தை பொறுத்து மாறும்.

இப்போதுள்ள குடியியல் நடபடிக் கோவையில் பிரிவு 614 ல் துணை (Spouse) என்றிருப்பதால் பெண்ணைப்போல் ஆணும் இடைக்காலப் பணஉரிமைப் பெற்றுள்ளார். விவாகரத்தின்பின் அவர்கள் மணம்முடியாத ஆண் பெண் என்ற நிலையிலேயே ஒவ்வொரு விடயத்திலும் சட்டத்தினல் கணிக்கப்படுவர்.

— அ. மகாலிங்கசிவம்
கணிதம் - இறுதியாண்டு.

---

**எது சுயநலம்?**

சுயநலம் என்பது ஒருவன் தன் விருப்பப்படி வாழ்வது அல்ல;
மற்றயரைத் தன் விருப்பப்படி வாழவைப்பதுதான்.

— ஆஸ்கார் ஒயில்ட்

**யார் வீரன்?**

உலகில் படைகொண்டு போர்வெல்வோனையே வீரன் என்கிறோம்.
பொறுமையோடு வறுமையைச் சகித்துக்கொண்டு மானத்தைக்
காப்பவனே மாவீரன்.

— சான்றோர்

# கதிர்வீச்சும் உணவு பாதுகாத்தலும்

தாவர உணவாயினும், விலங்குண வாயினும் அது நாள்கள் செல்ல கெட்டுப் போகும். அவ்வுணவுப் பொருள்களினுள் உயிர்வாழ்ந்து பல்கிப்பெருகும் நுண்ணிய உயிரங்கிகளே இதற்குக் காரணமாகும்.

உணவைத் தயாரித்த உடனேயே உட் கொள்வதால் உடலுக்குத் தேவையான உயிர்ச்சத்துக்களே கூடியளவு பெற்றுக் கொள்ள முடிகிறது. ஆனல் இது எந்நாளும் எல்லோருக்கும் சாத்தியமாவதில்லே. நடை முறைக்கு ஒவ்வாத ஒன்ருகும். இதனுல் உணவைப்பாதுகாக்க பின்வரும் முறை களேப் பயன்படுத்தலாம் :-

(அ) ஐதரசனேற்றல்.

(ஆ) காற்றுப்புகாத கலன்களில் அடைத்தல்.

(இ) உப்புப்பதனிடல்.

(ஈ) குறிப்பிட்ட உயர் வெப்பநிலேக்கு சூடேற்றி பின் திடீரென குளிர் வித்தல்.

அதிக குளிர்நிலேயில் உணவுப்பொருள் அழியும் இயக்கம் தடைபடுகிறது; பற்றீரி யாக்கள் செயலறுநிலே எய்துகின்றன. வீடு களில் நாம் நமது அன்ருடத்தேவைக்காக சேமித்துவைக்கப்படும் உணவாயினும், வேறு நீண்டநாள் பாவனேக்காகவுள்ள மீன், இறைச்சி, காய்கறிகள் போன்றவை உறை நிலேக்காப்பு வசதியுடன் பாதுகாத்தல் சிறந்தது.

உப்புச்சேர்த்தல் ஒரு முறை கறியுப் பானது உணவுப் பொருள்களிலுள்ள நீரை வெளியேற்றி பற்றீரியாக்களே செயலிழக்கச் செய்கின்றன. பழச்சாறுகளில் சோடியம் பென்சோலேட் எனும் பொருள்நிலே நிறுத்தி யாகப் பயன்படுகிறது.

இன்றைய நவீன விஞ்ஞான உலகில் கதிர்வீச்சு மனிதனேடு ஒன்றிவிட்டது என் பதனே அனேவரும் அறிவர். அணுஉலேகளும், அணுக்கருப்பிளவும், கதிரியக்கத்தின் ஊடுரு வும் ஆற்றலும், கதிரியக்கச் சிதறல்களின் நின்று கொள்ளும் கொடியபண்பும் கதிர் வீச்சுக்கே உரியனவாகும்.

கதிர்வீச்சை வழங்கும் ஐசோடோப்புக் கள் அணுஉலேகளில் கழிவுப் பொருள்களா கத் தோன்றுகின்றன. அவை மிக ஆழமான கிணறுகளில் அல்லது ஆழ்கடலில் புதைத்து வரப்படுகிறது. இல்லேயேல் அவை நிலப் பரப்பில வாழும் உயிரினங்களேயும், உயி ரற்ற பொருட்களேயும் உருக்குலேயச் செய்து விடுகின்றன. கதிர்வீச்சு இயற்கை வளங்களே சிதைத்து பயனற்ற கொடிய விளேவுகளே ஏற்படுத்தினுலும், இன்று அனேக வழிகளில் பயன்தருகிறது.

கதிர்வீச்சு மூன்று வகையான கதிர்களே உடையது. அவையாவன அல்பாக்கதிர் (α). காமாக்கதிர் (γ), பீற்ருக்கதிர் (β). இக் கதிர்கள் ஊடுருவும் பண்புடையவை. குறிப் பிட்ட உணவுப்பொருள் மீது கதிர்வீச்சைப் பாய்ச்சினுல் அதன் அளவைப்பொறுத்து நுண்ணியிர்கள் அழிக்கப்படும். ராட் (Rad) என்பது இதன் அளவையாகும்.

இக்கதிர்வீச்சு உயிரினங்களின் தன் மைக்கு ஏற்ப வேறுபடும். உதாரணமாக பாலூட்டிகளுக்கு குறைந்தளவு கதிர்வீச்சும், பூச்சியினங்களுக்கு சிறிது பெரிய அளவிலும் கதிர்வீச்சு அவசியம். கதிர்வீச்சு முறையி ஞல் உணவு மூலக்கூறுகளும் பாதிக்கப்படு கின்றனவா ? என்ற வினு நம்மில் எழலாம். வெப்பநிலேயும், கதிர்வீச்சின் அளவையும் கட்டுப்படுத்தி உணவுப்பொருளேக் கதிர்வீச் சின் பாதிப்பிலிருந்து பாதுகாக்கலாம்.

உணவைப் பாதுகாக்கும் ஏனைய முறைகளைவிட இக்கதிர்வீச்சு முறையினுல் பல நன்மைகள் உண்டு

(அ) கதிர்வீச்சுக்குள்ளான உணவுப் பொருள் மீண்டும் குளிர்பதன அமைப்பில் சேமித்து வைக்கத் தேவையில்லை.

(ஆ) கதிர்வீச்சினுல் உடன் விளை பொருள் உருவாவதில்லை. எனினும் α, p நிறையுரு கார்பனைல்கள் எனப்படும் பொருள்கள் விளைகின்றன. இவை பற்றீரியாக்கள் மீண்டும் உருவாகாமல் இருக்க உதவுகின்றன.

(இ) உருளைக்கிழங்கில் உள்ள சோலமைன் எனும் தாவர அல்கலைட் நஞ்சு (Toxin) எதிர்வீச்சினுல் நீக்கப்படுகிறது.

(ஈ) உயர்ரக புரதங்களை உகந்த அளவில் கொண்ட தாவரமான சோயா அவரையிலுள்ள ஒலிகோ சர்க்கரைடு ஒடுக்கப்படுகிறது. இதனுல் சிறுகுடலில் உண்டாக்கும் வாயுக்கள் குறைக்கப்படுகிறது.

கதிர்வீச்சினுல் உணவு பாதுகாக்கப்பட்டாலும் உணவிலுள்ள உயிர்ச்சததுக்களான B. C. என்பன அழிக்கப்படுகின்றன என்பது அறியப்படுகிறது. எனினும் ஏனைய முறைகளைவிட இம்முறையானது மனிதனின் ஆற்றல் செலவை மிச்சப்படுத்தக்கூடிய ஒரு முறையாக இருக்கிறது.

**செல்வி. அழகம்மாள் பெரியசாமி**
விஞ்ஞானநெறி
(இறுதி வருடம்)

---

## பெரியவன் ஆக எண்ணுதே!

பிறர் உன் கண்ணுக்குச் சிறியவர்களாகத் தெரியும் அளவுக்கு உன்னைப் பெரியவனுக எண்ணுதே.

— கன்ஃபூஷியஸ்

## அறிவுள்ளவன்

அறிவுள்ளவன் எவ்வளவு காலம் வாழவேண்டுமோ அவ்வளவு காலமே வாழ்கிருன். எவ்வளவு காலம் முடியுமோ அவ்வளவு காலம் வாழ நினைப்பதில்லை.

— மாந்தேன்

# கராட்டி என்பது வெறும் கைகளே

கராட்டி என்பதன் கருத்து வெறும் கைகள் என்பதாகும். இதனை வேறு வார்த்தையால் சொல்வதானால் வெறும் கைகளால் தன்னைப் பாதுகாத்து எதிரியைத்தாக்கும் ஒரு தற்பாதுகாப்புப் போர்முறையே கராட்டி (Karate) ஆகும்.

ஆறும் நூற்றாண்டில் 'சென் பௌத்த பிரிவின்' (Zen Buddism) ஸ்தாபகரான தர்மா என்னும் இந்தியர் சீனாவுக்குச்சென்று போதனைகளில் ஈடுபட்டார். இரவரது பயிற்சி நெறியைப் பின்பற்றியவர்கள் மிகவும் களைப்பு அடைந்ததனால் அவர்கள் உடல் வலுவை வளர்க்கும் ஒருமுறையை அவர் போதித்தார். இது படிப்படியாக வளர்ச்சியடைந்து கராட்டி முறையை எய்தியது. இதனை ஒரு பயிற்சியாக, தற்பாதுகாப்பு முறையாக, விளையாட்டாக மாற்றினார்கள். இதுவே நாளடைவில் விருத்தியடைந்து தற்போது கராட்டியாக விளங்குகிறது.

கராட்டியின் ஆரம்பத்தில் உடற்பயிற்சிகளும், சுவாசப்பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. இந்தப் பயிற்சியினால் தசைநார்கள் வலிமை பெறுவதுடன் மூளை விருத்தியும், குருதி சுத்தமாவதும் நடைபெறுகின்றது. உடற்பயிற்சியின் இடையில் ஆழமான சுவாசப்பயிற்சி நடைபெறுகின்றது இதனால் அதிகளவு வளி (ஒட்சிசன்) உள்ளெடுக்கப்பட்டு அதிகளவு காபனீரொட்சைட்டு வெளிவிடப்படுகின்றது. அடுத்ததாக இப்பயிற்சியில் எதிரியைத் தாக்குதலும், எதிரியின் தாக்குதலைத் தடுத்தலும் பயிற்றுவிக்கப்படுகின்றது. தாக்கும் முனை விடங்களாக கை விரல்களில் மொளிகள் (Knuckles), காலின் கணுக்கால் பகுதி (Ankles) என்பன கூடியளவு பயன்படுத்தப்படுகின்றன. இதைத் தவிர உடலின் ஏனைய பகுதிகளும் சந்தர்ப்பத்திற்கேற்ப பயன்படுத்தப்படலாம். விரல்களின் மொளிகள், கணுக்கால் பகுதி என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக, மொளிகளில் நிற்றல் (Knuckles stand), மணல் மூட்டை, மரப்பலகை போன்றவற்றில் தாக்குதல் போன்ற பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் மொளிகள் குமிழ் வடிவாக, கடினமாக இருப்பதை கராட்டி வீரர்களின் கைகளில் அவதானிக்கலாம். இதனால் கராட்டி வீரனின் தாக்குதல் ஆயுதத்தாக்குதல்களுக்கு ஒத்ததாக அமையும். இதனால் இக்கலை ''ஆயுதமின்றி ஆயுதத் தாக்குதல்'' (Weaponless weapon) என்றழைக்கப்படும். அத்துடன் துரிதமாகத் திரும்புதல், துரிதமாகச் செயற்படுதல் என்பன கராட்டியின் இன்றியமையாதனவாகும். கால்கள் உதைத்தலுக்குப் பயன்படுவதனால் இடுப்புகள், முழங்கால்கள் போன்ற எலும்பு மூட்டுக்களை உறுதிப்படுத்துவதற்கும் பயிற்சிகள் உண்டு.

கராட்டி வீரனின் ஒவ்வொரு தாக்குதலின்போதும் ''கிய'' (Kiai) அல்லது ''சே'' (Shay) என்றவாறு ஒரு பயங்கர ஓசை எழுப்பப்படுகின்றது. அப்போது வீரனின் ஆழமான வெளிச்சுவாசம் நடைபெறுகின்றது. இதனால் எதிரியை, முழுமூச்சுடன் உடலில் உள்ள சக்தி முழுவதையும் ஒன்று திரட்டி தாக்கவும், எதிரியைத் திகிலடையச் செய்யவும் முடிகிறது. அடுத்தபடியாக சில தாக்குதல் முறைகளும், அவற்றிற்குரிய தடுத்தல் முறைகளும் போதிக்கப்படுகின்றன. பின்னர் இம்முறைகளின் நுட்பங்களை வீரர்கள் அறிவதற்காக இருவீரர்களை மோதவிட்டு பயிற்சி அளிக்கப்படுகின்றது. இப்பயிற்சி (Sparing) ''ஸ்பாரிங்'' என்றழைக்கப்படும். இதனால் எதிரியின் ஒவ்வொரு சடுதியான தாக்கல்களுக்கும், சடுதியான தடுப்பு முறைகளைப் பயன்படுத்தல் பயிற்றுவிக்கப்படுகின்றது. இவ்வாறு ஸ்பாரிங் அளிக்கப்படும்போது வீரர்களிடம் மோதுவதற்கான துணிவு மனப்பான்மை ஏற்படுத்

தப்படுவதுடன் சடுதியாக உடல் தொழிற் படுவதற்கும் இது பயிற்சியாக அமைகிறது. அத்தோடு வீரனின் உள்ளுணர்வு (Instinct) வளர்ச்சி அடைகிறது. இவ்வுணர்வு வளர்ச்சியினுல் எதிரியின் சிறுசிறு உடல் அசைவுகளேக்கூட அவதானித்து அவருடைய தாக்கு தலேக்தடுக்க அல்லது அதிலிருந்து விலக முடிகிறது.

அடுத்து கராட்டியின் ஒரு முக்கிய பயிற்சியான 'காட்டா' (Kata) எனப்படும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இப்பயிற்சியின் போது வீரன் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டு எதிரியைத்தாக்கவும், தாக்கலிலிருந்து தடுக்கவும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இப்பயிற்சியின்மூலம் ஒரு கூட்டத்தினரின் மத்தியில் இருந்த ஒரு வீரன் தன்னேப் பாதுகாத்துக்கொள்வதற்கான திறன் வளர்க்கப்படுகின்றது. ஆரம்பத்தில் Heain - Shodan என்னும் காட்டாவில் ஆரம்பித்து பின்னர் Heain - Nidan, Heain - Shandan என்றவாறு தொடர்ந்து காட்டாப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. கராட்டிப் பயிற்சி இறுதியில் வயிற்றுக்குரிய சில பயிற்சிகள் அளிக்கப்படுகின்றது. (Stomach Exercises) இதனுல் வயிற்றுத்தசைகளும் சமிபாட்டு உறுப்புகளும் உறுதியாக்கப்படுகின்றன. இவ்வாறு உறுதியாக்கப்படுவதனுல், எதிரியினுல் வயிறு தாக்கப்படும்போது வயிறு பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படுகிறது. இதன் கடைசிப்பயிற்சியாக தியானம் (Meditation) அமைகிறது. தியானத்தின்போது புலனடக்கம் அளிக்கப்படுவதுடன் உடலுக்கு நல்ல ஓய்வு அளிக்கப்படுகின்றது. இறுதியாக கராட்டி வணக்கத்துடன் பயிற்சிகள் முடிவு பெறும். கராட்டி வீரர்கள் தம்மிடையே மோத ஆரம்பிக்கும்போதும், மோதல் முடிவடைந்தபின்பும் கராட்டி வணக்கம் செலுத்துதல் ஒரு சிறந்த முறையாகும். அத்துடன் ஒரு கராட்டி வீரர் தனது பயிற்சியில் ஈடுபட முன்பும், தனது கராட்டி ஆசிரியரைச் சந்திக்கும்போதும் கராட்டி வணக்கம் தெரிவிப்பதை நாம் அவதானிக்கலாம்.

கராட்டி பயிற்சிகளில் மாணவர்கள் தோற்றுவதற்கான பரீட்சை இலங்கை கராட்டி சங்கத்தினரால் பரீட்சிக்கப்படும். பரீட்சிக்கும்போது அடிப்படைத்திறன்கள் (Basic skills), ஸ்பாரிங் (Sparing), காட்டா (Kata) என்பன பரீட்சிக்கப்படும். இவற்றில் சித்தியடையும் படிகளுக்கேற்ப பட்டிகள் (Belts) வழங்கப்பட்டு தரப்படுத்தப்படும். இவை White, Yellow, Orange, green, Violet. Brown, Black ஆக அமையும். இவற்றுள் Violet, Brown, Black என்பவற்றுள் சில உபபடிகளும் உண்டு. இவ்வாறு பரீட்சிக்கப்படுவது Grading எனப்படும்.

கராட்டிப் பயிற்சியானது இலங்கையின் பல பாகங்களிலும் விளேயாட்டுத்துறை அமைச்சினுல் சிபார்சு செய்யப்பட்ட கிளேகள் அமைக்கப்பட்டு பயிற்றுவிக்கப்படுகின்றது. இங்கு ஜப்பானிய கராட்டி முறையான "Shotokai" என்னும் முறையே பரவலாக் கப்பட்டுள்ளது. கராட்டியின்போது பயன் படுத்தும் உடுப்பு Karate Kits என்று அழைக்கப்படும். பிறநாடுகளில் இருபாலாரும் கராட்டிப் பயிற்சியைப் பயில்கின்றனர். இதன் முக்கியநோக்கம் எமது புனிதமான வெற்றுக்கைகளால் எதிரியைத்தாக்கி தம்மைப் பாதுகாக்கும் தற்பாதுகாப்புக்கே ஆகும். கராட்டி வீரனின் உடலியல் (physical) நடத்தைகளேயும், உளவியல் (mental) நடத்தைகளேயும், கராட்டி கண்காட்சிகளேயும் பார்த்தால் கராட்டி பழக வேண்டும் என்ற ஆர்வமே மேலோங்கும்.

**க. சத்தியநாதன்**
**(Orange Belt)**
**கணித இறுதியாண்டு.**

# இலங்கையின் கல்வி அமைப்பு முறையும் அதன் விளைவுகளும்

இலங்கை என்னும் எமது தாய் நாடானது ஆரம்ப காலங்களில் இருந்தே அடிக்கடி அந்நியர் ஆட்சிக்கு உட்பட்டு வந்துள்ளதை எமது நாட்டு சரித்திர நூல்கள் கூறுகின்றன. குறிப்பாக போத்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோர் ஆட்சிக் காலத்தில் இருந்தே எமது நாட்டுக் கல்வித்துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டது எனலாம்.

சிறப்பாகக் கூறின் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அவர்களுக்கு சொந்தமான தேயிலை, இறப்பர் தோட்டங்களைப் பராமரிப்பதற்கும், அவற்றின் நிர்வாகத்தை சிறப்புற நடாத்துவதற்கும் கல்வி கற்றோர் தேவைப்பட்டனர். கற்றோர்களை பிரித்தானியாவில் இருந்து இங்கு கொண்டுவருவதும் அவர்களுக்கான வாழ்க்கை வசதிகளை இங்கு ஏற்படுத்திக் கொடுப்பதும் செலவு மிக்கதாகவும், சிரமமானதாகவும் காணப்பட்டது. இந்நிலையிலேயே ஆங்கிலேயரால் இலங்கையில் ஆங்கில மொழிமூலம் கல்வி கற்பதற்கான மிசன் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

மிசன் பாடசாலைகளில் கல்விகற்பதற்கு பணம் கட்டவேண்டியிருந்தது. இவ்வாறான சூழலில் வசதிபடைத்தோரது பிள்ளைகள் மட்டுமே படிக்கக்கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டன. திரு. ஜயம்பதி வணசிங்கா அவர்கள் கூறுவதுபோல், சமனான கல்வி கற்கும் வாய்ப்பு இலங்கை மக்களுக்கு அன்று கிடைக்கவில்லை. இந்நிலையில் வசதி படைத்தோரது பிள்ளைகள் கற்று வைத்தியர்களாகவும், வக்கில்களாகவும், நிர்வாகத்தர்களாகவும், ஆசிரியர்களாகவும், எழுதுவினைஞர்களாகவும், கணக்காளர்களாகவும் காணப்பட்டனர். வசதியற்ற ஏழைமக்கள் என்றும் உழைப்பாளி வர்க்கங்களாகவே காணப்பட்டனர். இதனால் இக்காலகட்டத்தில் இலங்கையின் சமுதாய அமைப்பில் படித்த அந்தஸ்துள்ள ஒரு வர்க்கத்தினரும் படிக்காத ஏழை உழைப்பாளிகள் ஒரு வர்க்கத்தினரும் காணப்பட்டனர்.

ஆங்கில மொழிமூலம் கல்வி கற்பிக்கப்பட்டபோது தாய்மொழி மூலம் கல்வி கற்றோர்க்கு சமூக, பொருளாதாரத் துறைகளில் முன்னேறுவதற்குரிய சகல வழிகளுமே அடைக்கப்பட்டிருந்தன. அதாவது தாய்மொழியில் கல்வி கற்றோர்க்கு சமூகத்தில் அந்தஸ்து இருக்கவில்லை, வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை. அத்தோடு ஆங்கில மொழியில் கல்விகற்று, கிறீஸ்தவ மதத்தை தழுவியவர்களுக்கு சகலவிதமான சமூக, பொருளாதார துறைகளில் முன்னேறுவதற்கான வாய்ப்புக்களும் வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறான ஒரு சூழ்நிலை காணப்பட்டபோதும் 1945ம் ஆண்டில் இருந்து இலங்கையில் கல்வி அமைப்புமுறையில் புதிய ஒரு திருப்பம் ஏற்பட்டது. அதாவது பாலர் பாடசாலைகள் முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக்கல்வி அளிக்கும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. இத்திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதில் இருந்து சகல மாணவர்களுக்கும் ஓரளவு சம சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது எனலாம். இக்கல்வி அமைப்பும் பழைய ஆங்கிலேயக்கல்வி அமைப்பு முறையைச் சார்ந்ததாகவே அமைந்தது.

கடந்த இரு தசாப்தங்களுக்கு முன்னர் இலங்கையின் கல்வி அமைப்பில் ஓர் மாறுதல் ஏற்பட்டது.

அதாவது இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் தமது தாய்மொழி மூலம் பாலர் பாடசாலைகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை கல்விகற்கலாம் எனவும், ஆங்கிலம் இரண்டாந்தர மொழியாகவும் ஆக்கப்பட்டது. இதனால் இலங்கை மாணவர்கள் அனைவரும் தாய்மொழி மூலம் கல்விகற்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

1970ம் ஆண்டு ஆட்சியை மேற்கொண்டவர்கள் இலங்கையின் கல்வி அமைப்பானது ஏட்டுப்படிப்பாகவே உள்ளது என்பதை உணர்ந்து அதை வன்மையாகக் கண்டித்தனர். இதனால் நடைமுறையில் இருந்துவந்த கல்விப் பொதுத்தராதர (சாதாரண, உயர்தர) பரீட்சைக்குப் பதிலாக புதிய தொழில் நுட்பத்திறன் வாய்ந்த தேசிய பொதுத்தராதர (N.C.G.E.)பரீட்சையை ஏற்படுத்தியமை இலங்கையின் கல்வியமைப்பில் ஏற்பட்ட ஓர் குறிப்பிடத்தக்க மாற்றம் எனலாம். இந்த N. C. G. E. கல்வித் திட்டமானது தொழில் முன்னிலைப் பாடங்களை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. ஒவ்வொரு மாணவனும் என்னென்ன துறைகளில் விவேகம் உடையவனாக காணப்படுகின்றானோ அந்தந்தத்துறைகளில் அவனைப் பயிற்றுவித்து நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்குடன் இத்தொழில் முன்னிலைக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று உலகிலேயே தொழில் நுட்பத்துறையின் முன்னணியில் திகழும் ஜப்பானில் இவ்வாறான தொழில் முன்னிலைக்கல்வியே காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில் முன்னிலைக்கல்வியானது எதிர்பார்த்த விளைவுகளை அடையமுன்னரே 1977ம் ஆண்டு ஆட்சியை கைப்பற்றிய இன்றைய அரசு அக்கல்விமுறையை நீக்கி மீண்டும் முன்னைய க. பொ. த. சாதாரண, உயர்தர பரீட்சைத்திட்டத்தை அமுல்படுத்தியது. இதனால் 1970 — 1977 வரை கல்வி கற்ற மாணவரிடையே பாடத்திட்டம் பற்றிய பல பிரச்சனைகள் எழுந்துள்ளன.

1970ம் ஆண்டு ஆட்சியாளர்கள் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையின் பெறுபேற்றை, தரப்படுத்தல் முறை என்னும் மாவட்ட அடிப்படை முறையின்கீழ் பல்கலைக்கழகத்தெரிவு இடம் பெற்றதால், திறமையுடைய ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இன்றுவரை இம்முறை மூலமே பல்கலைக்கழகத் தெரிவு இடம் பெறுவது தமிழ் சமூகத்திற்கு ஓர் பேரிழப்பாகும்.

இலங்கையின் கல்வியமைப்பு முறையானது நிர்வாக கல்வி அமைப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் எத்தனையோ இலட்சம் (பட்டதாரி, பட்டதாரி அல்லாதோர்) இளைஞர்கள் படித்து வேலையின்றி இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. தென்கிழக்காசியாவிலேயே கற்றோர் ரதுவிகிதாசாரம் இலங்கையில் அதிகம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் கல்வி அமைப்பில் இருந்து ஆங்கிலம் 2ம் தர மொழி ஆக்கப்பட்டதால் அனேகமான மாணவர்கள் ஆங்கிலம் கற்பதற்கு விரும்புவதில்லை. இந்நிலையில் தாய்மொழிமூலம் கல்விகற்கும் மாணவர்களுக்கு எழும் மிகமுக்கிய பிரச்சனை பாடம் சம்பந்தப்பட்ட நூல்கள் தாய்மொழியில் போதியளவு இன்மையாகும். ஆங்கிலம் புறக்கணிக்கப்பட்டதால் இன்று கற்கும் மாணவர்களில் அனேகர் போதிய பாடநூல் வசதிகள் இன்றிக் கஷ்டப்படுகின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் கல்வியமைப்பு முறை காலனித்துவமுறையை பின்பற்றியுள்ளதால் எண்ணற்றோர் வேலையற்றுக் காணப்படுகின்றனர். இதனால் அனேக ஆண்களும், பெண்களும் வெளிநாடுகளுக்கு இன்று வேலை தேடி அலையும் நிலையும், மூளைசாலிகளின் வெளியேற்றமும் காணப்படுகின்றது.

எனவே இலங்கையின் கல்வி அமைப்பு முறை தேசிய பொருளாதாரத்தை சிறப்புற இயக்குவதற்கு ஏற்ற முறையில் மாற்றியமைக்கப்படுமாயின் நாட்டின் வேலையில்லாப் பிரச்சனை குறையும், வருமானம் உயரும் வாழ்க்கைத்தரம் உயரும் என நாம் கூறிக்கொள்ளலாம்.

**செல்வி. பத்மலோசினி**
**பொன்னுத்துரை**
(விஞ்ஞானம்
இறுதியாண்டு)

# விளையாட்டும் அறிவு வளர்ச்சியும்

விளையாட்டென்ற பதம் பலவித உடலப்பியாசங்கள், விளையாட்டுகள், நீந்துதல், நடனம் முதலியவற்றைக் குறிக்கும். விளையாட்டு ஒரு மாணவனின் பூரண உளவிருத்திக்கும், உடல் வளர்ச்சிக்கும், அவசியம். சுத்தக்காற்று, சூரியவெளிச்சம், சுத்தசலம், உணவு, உறக்கம் போலவே விளையாட்டும் அவசியமானது.

விளையாட்டால் ஏற்படும் உடல் சம்பந்தமான நன்மைகளாவன: உணவு சீரணிக்கிறது, தசைநார்கள் வலுவடைகின்றன, உடம்பிலுள்ள கழிவுநீர் வியர்வையாக வெளியேறுகின்றது, உடலுக்கு ஒருவித பூரிப்பு உண்டாகிறது, உடல் வளர்ச்சியும் ஏற்படுகிறது.

விளையாட்டால் ஏற்படும் உளம் சம்பந்தமான நன்மைகள்; விளையாட்டுக்கள், தனிவிளையாட்டு, கூட்டு விளையாட்டு, கோஷ்டி விளையாட்டு என மூவகைப்படும். பிள்ளைகள் விளையாட்டில் பங்கு பற்றுகையில் யோசிக்கும்திறன், செயற்றிறன், ஒத்துழைப்புணர்ச்கி, வெற்றி தோல்வி பெறும்போதுண்டாகும் மனப்பான்மை, தூய்மை செய்யப்படுதல் உண்மை பேசப்பழகுதல், தம்மிலும் திறமையானவர்கள் இருக்கிறார்களென்றுணர்தல், விளையாட்டிலுள்ள விதிகளை அறிதல், சுயநலங்கருதாமல் சமூக நலத்தை மேலாக மதித்தல், ஓய்வு நேரத்தைத் தக்கமுறையில் செலவழிக்கப் பயிலுதல் போன்ற உளவிருத்திகள் ஏற்படுகின்றன. மேலும் ''வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்'' என்பதற்கொப்ப ஒரு மாணவனின் விளையாட்டிலிருந்து அவனுடைய விசேட திறமைகளை அறியலாம். விளையாட்டு மாணவரின் பிறப்புரிமை. ஆகவே மாணவர்களை வகுப்பிலோ, வீட்டிலே விளையாடாமல் இருக்கும்படி ஒரு ஆசிரியர் அல்லது பெற்றோர் கட்டளையிட்டால் அதற்குப்போதிய நியாயமிருக்கவேண்டும். அவர்கள் போதியளவு ஏதோ ஒரு தொழிலில் ஈடுபட்டவராயுமிருக்கவேண்டும். அல்லாவிடில் பாய்ந்துஓடும் நீரை மறித்து வரம்பு கட்டியதுபோலிருக்கும். கொஞ்ச நேரத்திற்குப்பின் வரம்பை உடைத்து வயலையழித்து, நீர் பாய்வதுபோல் மாணவருவருடைய சக்தியும் பாடசாலை ஒழுங்குகளை மீறி நடக்கவும் அவர்களைத் தூண்டும். மாணவர்கள் அசைவுப்பயிற்சி மூலம் அறிவைப் பெருக்குகிறார்கள். அப்பயிற்சிஅவர்களுடைய கற்பனையைத்தூண்டுகிறது. அறிவு, ஆராய்வு, அநுபவம் முதலியவற்றை அதிகரிக்கிறது. முயற்சி, துணிவுடமை ஆகிய பண்புகளும் விளையாட்டில் காணப்படுகின்றன.

மாணவர்களின் பொதுவான உளப்போக்குகளின் முன்னணியிலிருக்கும் இயல்பூக்கம் விளையாட்டே. இது மக்களுக்கும் விலங்குகளுக்கும் பொதுவாயுள்ளது. குட்டிகளும் குழந்தைகளும் ஓடியாடி விளையாடுகின்றன. இதை நன்குணர்ந்து போலும் பாரதியார்

''ஓடி விளையாடு பாப்பா — நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா'' என்று

பாடியிருக்கின்றார். விளையாட்டும், பாவனையுமே பாலர்களின் முக்கிய செயல்களாகும், விளையாட்டு பல உளப்போக்குகளையுடையதாகும். பின்பற்றல், போருக்கம், கட்டுக்கம், முதன்மையூக்கம், குழுவூக்கம் முதலியன தனித்தோ, ஒருமித்தோ தொழிற்படுகின்றன. பாலர்கள் விளையாட்டில் பாசாங்கு அல்லது பாவனை வெகுவாகக் காணப்படுகிறது. சிலசமயம் பாலர்கள், வண்டியோட்டியையோ, பூசாரியையோ, பொலிஸ்காரனையோ, தாதியையோ பின்பற்றுகிறார்கள். மற்றச்சமயங்களில் சிற்றில் கட்டியும், சிறு தேர்புனைந்தும் விளையாடுகிறார்கள். இராசா இராணிபோல் நடிக்கிறார்கள். விளையாட்டின் காரணங்களைப்பற்றி ஐந்து கொள்கை

கள் உள. அவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் அம்சத்தை வற்புறுத்துகின்றன.

வடிகால் கொள்கையின் பிரகாரம் பிள்ளைகள் விளையாடுகின்றனர், என்று ஆங்கில ஆராய்ச்சியாளராகிய கேபெட்ஸ் பென்சரும் ஜேர்மனியராகிய ஷில்லரும் அபிப்பிராயப்படுகின்றனர். விளையாட்டு ஓர் உயிரியின் குட்டிகளிடமுள்ள மிகுதிச்சக்தியின் வெளியீடென்று அவர்கள் கூறுவர். ஆனல் இச்சக்தி மாணவர் வளரவும் அவர்கள் உறுப்புகள் பூரண விருத்தியடையச் செய்யவும் உபயோகப்படுகின்றது.

விளையாட்டு மூலம் உயிரினங்கள் தங்களைத் தமது பிற்கால வாழ்க்கைக்கு ஆயத்தஞ்செய்து கொள்கின்றன. என்ற கொள்கையைக் ''காள்குறாஸ்'' என்பவர் எடுத்துக்கூறுகிறுர். பூனைக்குட்டி, நாய்க்குட்டி முதலியவை பிற்காலத்தில் தமக்கு வேண்டிய திறமைகளை, உதாரணமாக வேட்டையாடுதல், போர் செய்தல் போன்றவைகளை விளையாட்டு மூலமே பழகுகின்றன, என்பது அவர் அபிப்பிராயமாம்.

ஆதிகாலச் செயலுக்குத் திரும்புதல் என்றேர் கொள்கையுமுண்டு. அதை எடுத்துக் கூறுபவர் ''ஸ்ரான்ஸி கோல்'' என்னும் அமெரிக்க ஆராய்ச்சியாளரே. ஆயத்தக் கொள்கை எவ்வாறு முன்னேக்கிச் செல்கின்றதோ, அவ்வாறே இக்கொள்கை பின்னேக்கிச் செல்கின்றது. குழந்தையின் விளையாட்டுக்களின் மானிட சரித்திரத்தில் ஆதிகாலத்தில் மக்கள் செய்த செயல்களை மறுபடியும் செய்தல் தோன்றுகிறது.

மனவெழுச்சிக் கழிப்புக் கொள்கை ஒன்றுண்டென்று சிக்மண்ட்டிறேயிட் என்பவர் எடுத்துக்கூறுகிறுர். நமது வாழ்க்கையில் வெளியீடு கிடைக்காமல் ஒடுங்கிநிற்கும் மனவெழுச்சிகளும், உட்கருத்துக்களும் விளையாட்டு, நடித்தல் போன்ற தொழில்களில் விடுதலை பெற்றுக் கழிக்கப்பட்டு நமது உள்ளம் பரிசுத்தமடைகிறது என்பது அவரது அபிப்பிராயமாகும்.

''காள் குறாஸ்'' விளையாட்டைப் பற்றிக் கூறும் இன்னுமொரு கொள்கை. விளையாட்டு என்பது பெரியோர் செய்வதைப் பின்பற்றலென்பதே. விளையாட்டில் மற்றவரோடு நியாயமின்றி நடக்கும் மாணவன் தான் மற்றவரோடு எவ்வாறு நடத்தப்பட்டான், என்பதைக் காட்டுகிறுன். விளையாட்டில் தலைவனுக இருப்பவன் பொதுவாகப் பிற்காலத்தில் ஊராண்மைக் கழகத்தின் தலைவனுகவும் விளங்குகிறுன்.

திறவல்கார்யுத்தம், ஈற்றன் விளையாட்டு மைதானத்தில் தான் வெற்றியடையப்பட்டது, என்று சேர் உவின்ஸ்ரன் சேர்ச்சில் கூறுகிறுர்.

அ. சக்கரவர்த்தி
கணிதநெறி
(இறுதியாண்டு)

---

## செயலும் அதை முடிப்பதும்

நிச்சயமாக அறிவின் முதல் அடையாளம், செயலை ஆரம்பிக்காமல் இருப்பது; இரண்டாவது அடையாளம், ஆரம்பித்ததை கடைசிவரை செய்து முடிப்பது.

— பஞ்சதந்திரம்

# எங்கள் மாகாணம் கிழக்கு மாகாணம்

வாவியும் வராலும் துள்ளி வலம்புரி முழக்கஞ்செய்யும் கோலஞ்செய் கோண மாமலை எங்கு அமைந்துள்ளது? நித்திலம் கொழிக்கும் நீலத்திரை கடலிலே நீந்தி வரும் நாவாய்களைத் தன்னகத்தே அடக்கும் மாபெரும் துறைமுகமும் இயற்கையாய் அமைந்த இடம் எது? நீலநிற வாவி; அதன்மேல் பிரமாண்டமாய் விளங்கும் பாலம்; வாவியுள் வளைந்து வளைந்து குதிக்கும் மீன்கள்; அவை எழுப்பும் இன்னிசைக் கீதங்கள்; அருகே பாங்குடன் அமைந்து விளங்கும் நானிலங்கள் இவைகள் அனைத்தும் ஒருங்கே அமைந்து விளங்குவது எது? தாம அளவைக்கொண்ட வெந்நீர்க் கிணறுகளைத் தன்னகத்தே அமைத்துக்கொண்டது மாகிய இயற்கையன்னையின் எழில்மிகு வீற்றிடம் எது என்று இயம்பவேண்டியதில்லை. இலங்கைக் குழந்தை தன் பாரதத்தாயை வணங்க வளைத்துக் கொடுக்கும் முதுகெலும்புபோல் விளங்கும் கிழக்குமாகாணமே இச்சிறப்புப் பொருந்திய இடமாகும்.

இந்த மாகாணத்தின் இயற்கை அமைப்பை உற்றுப்பார்க்குமிடத்து இதன் அமைப்பை நோக்கித்தான் பண்டைத் தமிழன் நானிலத்தை வகுத்தானோவென்று ஐயம் ஏற்படுகின்றது. அத்தகைய அழகு வாய்ந்த வண்ணம் அமைந்துள்ளது. இம் மாகாண நிலப்பரப்பு ஆரம்பம் நெய்தல் நிலமாகக் காட்சியளிக்கும். நீலக் கடலின் திரைகள் நிரைநிரையாகக் கரையிலே மோதிவிழும். முத்தையும் சிப்பியையும் வாரிவாரிக் கரையிலே குவித்திடும். அலைகளிடையே வெள்ளியோடம்போல் ஆடி அசைந்து நீந்திவரும் ஓடங்கள்; இவற்றிலே உயிருக்கு ஊசலாடி உழைத்துவரும் உழைப்பாளி; அவனை விடுசேர் என்று அறைகூவுவதுபோல் குணதிசை நோக்கிச் செல்லும் பகலவன்; அவன் களைப்புத்தீர இன்னிசை பாடும் புள்ளினங்கள்; கரையிலே நிறைந்து விளங்கும் மனிதனின் மதிப்பாற் கண்ட ஊதியமான உயிரற்ற மச்சங்கள்; இவைகளையெல்லயம் கண்டுகளிக்கலாம் எம் கிழக்குமாகாணக் கரையினிலே.

இதை நீக்கி கண்களை அடுத்து மறு திசை நோக்கி மந்தமாருதம் வீசும் மருத நில மாண்பைக் காண்போம்.

''தண்டலை மயில்களாடத்
தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவினேங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினிகாட்டத்
தேம்பிளி மகரயாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்
வீற்றிருக்கும் மாதோ.''

என்னும் கம்பனின் கவிதை முற்றும் பொருந்தாவிடினும், ஓரளவு எங்கள் நாட்டு மருத நிலத்துக்குப் பொருத்தம் உடைத்து என்பது மிகையாகாது.

இரண்டாவது உலகமாகா யுத்தத்தில் அகிலமே பட்டினியால் மூழ்கியிருந்த கலாத்தில் பசியும் பிணியுமின்றி வசியும் வளனும் சுரக்க இன்பமாய் வாழ்ந்த மக்கள் எங்கள் நாட்டு மக்கள். கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம் பசும்புற்சோலைகள்; காய்களைத் தாங்கிநிற்க முடியாது தலைகுனிந்து நடனமிடும் நெற்கதிர் வயல்கள்; சேற்றிடையே பிறந்து மதுமணம் கமிழும் அல்லி மலர்கள்; இன்பரீங்காரமிட்டு மலர்களை வட்டமிடும் வண்டுகள்; பகலவனின் பொற்கிரணங்களால் பூரிப்படைந்து பொலியும் பொன்னெனமிளிரும் நெற்கதிர்களைக் கண்டு களிப்புறும் உழவர்கள்; வானளாவப் பறந்து திரியும் புள்ளினங்கள்; இவைகளையெல்லாம் கண்டுகளிக்கலாம் மருத நிலத்தில்.

இதற்கடுத்து அமைந்திருக்கும் வானளாவிய மரங்கள் குவிந்து பச்சை நிறமாய் விளங்கும் முல்லை நிலம். அதனருகே அமைந்திருக்கும் குறிஞ்சி நிலம். அங்கே கல்மலைகளிலிருந்து சுரக்கும் நீர் பூமாதேவியின் பால்போல் விளங்கும். உயரிடத்திலிருந்து வெள்ளியை உருக்கிவார்த்தாற் போன்று மலை நீர்வீழ்ச்சி தோன்றும். சிற்றாறுகள் இரண்டு வெவ்வேறு மலை உச்சிகளிலிருந்து ஓடிவந்து ஒன்றாகச்சேர்ந்து பூமாதேவியின் முத்துமாலைபோல் விளங்கும். இந்த நீரோடைகளை அருகே கொண்டதால் தழைத்துத் தம்மாலியன்றவரை பூக்களைப் பூத்திருக்கும் முல்லைநிலக் காட்சியானது, நன்மை பெற்றவன் சிரிப்பை ஞாபகமூட்டும். இக்கானகத்திடையே தங்கி வாழும் பறவைகளின் சப்தம் அலாதியானது. பயங்கரமுள்ள மிருகங்கள் இங்கில்லையென்று கூறுவதுபோல் மான்களின் துள்ளலும் காண்பதற்கு மனோரம்மியமாய் இலங்கும். இத்தனை அழகும் பாங்குடன் அமைந்து விளங்கும் எங்கள் மாகாணத்தில் நானிலத் தொழில்களும் அமைந்திருக்கும் என்பது இயம்புதல் வேண்டற்பாலது.

மாடமாளிகைகள் அதிகமின்றெனினும் மகிழ்ச்சியோடு கூடிவாழத்தகுந்த இல்லங்கள் இங்குண்டு. உணவுக்காக ஊரூராய் அலையாது தன்னுழைப்பால் கண்ட ஊதியத்தைக் கொண்டு, இயற்கைத் தாயின் எழில் நிலத்தில் காணும் உணவும் உண்டு. நம்நாட்டு உடைகளோடு பிறநாட்டு உடையாயிருந்தாலும் பெருமையோடு வாங்கி அதை உரிமையோடும் மகிமையோடும் அணியும் மாண்பு பெற்ற மக்கள் உண்டு. சமய குரவராற் புகழ்ந்தோதப் பெற்ற திருத்தலத்திலும் மாமாங்கத் திருநாள் கொண்டாடும் மகிமை பெற்ற கோவில் தலத்திலும், திருவிழாக்களைப் பெருவிழாக்களாகக் கொண்டாடும் தெய்வீக நம்பிக்கை பொருந்திய மக்கள் உளர். நம் நாட்டு மக்களுக்குண்டாகும் நோய்களை மாற்றும் பண்டைய சித்த வைத்திய முறைகளையும் மறவாது காப்பாற்றும் சிறந்த சித்தவைத்தியர்கள் உள்ளனர். செல்வம்கொழிக்கும், திருநிலமும், உழைக்கும் ஊழியரும், நிறைந்த செல்வமும், வறுமை குறைந்த வாழ்வுவாழும் மாந்தரும் உள்ளனர். இவற்றால் பொருளாதார மகிமையும், கற்றோர்கள் நிறைவும், கல்வியாலயங்கள் பொலிவுநிறைந்து விளங்கும் தன்மையும், பண்புநிறைந்த மனப்பான்மையாகியனவும், வந்தோரை வரவேற்று வாழவைக்கும் தன்மையும் விருந்தோம்பலின் சிறப்பும் நிறையக் காணக்கூடியனதாயிருப்பன எங்கள் தாய்நாட்டிலே. அருள், பொறுமை, ஈகை ஆகிய நற்குணம் நிறைந்த மாந்தரையும், வரவையும் செலவையும் கணக்கிடாதிருக்கும் தன்மை பொருந்திய மக்களையும் நம் மாகாணத்திலே காணலாம்.

நடுவு நிலைமைகொண்டு நோக்குமிடத்தும் நமது மாகாணத்தின் பெருமை நிலைக்க வேண்டுமென்ற பாசம் ஓங்குமிடத்தும் சில குறைகளைத் திருத்தவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது. நன் மொழிபேசும் மாந்தர், காதலன்பு நிறைந்த இல்லறம், கலைக்கூடங்கள், கலாசாலைகள் பாங்குடன் மிளிரும் பாதைகள், ஊரூராக நெசவு ஆலைகள் இருந்தபோதிலும் வீட்டுக்குவீடு நடைபெற வேண்டிய நெசவுத் தொழில், ஒற்றுமையான வாழ்க்கை இத்தியாதியன எம் நாட்டிடையே வளர்ச்சிபெறவேண்டியனவாகும். வருங்காலத்தில் பெரியவர்களாகப்போகின்ற நாங்கள் பெருமைமிக்க நாட்டில் பிறந்த பெருமை குன்றாது அதன் புகழ் ஓங்க ஆவன புரிவோமாக.

**— திருமதி க. திருச்செல்வம்**

*(கணிதநெறி, இறுதியாண்டு.)*

# ஏனடி இந்த எழில்

வேல் கொண்ட வெற்றிக் கடவுளார்க்கு
மேல் கொண்ட மெத்தக் காதல்காய
சால் கொண்ட சபையோர்க்குச் சாத்துகின்றேன்
சூல் கொண்ட சுவைமிக்க கவியொன்றை

கவியால் சமர் செய்யக் களம் அமைத்துக் — காதல்
தவிப்போடு நடுவர் பணி செய் தலைவர் தனக்கும் — கவிசுமந்து
புவியிலெனக் கருக்கொண்டு அரங்கிலிருக்கும் கவிஞர்க்கும் — தங்கள்
செவியேந்தி மார்பணைக்கும் சபையோக்கும் வணக்கம் பல

வணக்கம் கூறி வழங்கிடும் கவியில்
இணக்கம் காணில் என்பேறு — இன்றேல்
சுணக்கம் காட்டாது சுழற்டி எறிவீர்
மணக்கும் தமிழை மங்காது தடுக்க

எழிலெல்லாம் எழிலாமோ நின்எழில் பார்த்த பின்
மொழியெல்லாம் மொழிந்து முடியினும் முடியாது — நின்
எழிலெல்லாம் பிழிந்துரைக்க முயல்கின்றேன் முயற்சியில்
பழிப்பெல்லாம் பழிப்பல்ல — யானே பிழைக்க எய்தவேல்

கார் கால மேகம் கவிந்தொன்று கூடிக் குவிந்திருக் கென்று
பார்த்திருந்த மயில்களெல்லாம் தோகை விரித்தாடிக் களைத்துவிடும்
யார்சொல்வார் அவைகட்கு இது முகிலல்ல அவள் கூந்தலென்று
யாரும் சொல்வார் — எவருக்கும் ஈதொரு சந்தேகம் தான்

புருவத்தில் வில்லைக் கண்டு மயங்கி
பருவத்தில் கலந்தற் கேற்ற தென் றெண்ணி — மாரன்
கரும்பிலோர் விற்செய்து கவர்ந்தான் உவகை — ஆயினும் அவள்
புருவ விலைவிற்கு அது நிகர் ஆகவில்லை

வேல் அவள் விழியென்றால் வேலுக்குப் பெருமை யோங்கும்
சேல் அவள் விழிபென்றால் சேலுக்கு ஒளியில்லை
மான் கண் விழியென்றால் மருட்சியொன்றும் அங்கில்லை
ஏனடி இந்த எழில் வார்த்தை கட்குள் அடங்கவில்லை.

பூவை நீ நேற்று வந்தாய் பூப்போல் கமழ்ந்து வந்தாய்
தேவை நான் நாடி வந்தேன் தித்திப்பாய் சுவைகள் தந்தாய்
நாவையே ஆண்டு கொண்டாய் நங்கையாய் வீற்றிருந்தாய்
பாவையே உள் எழில் பார்க்கத்தான் தெவிட்டாதோ.

பாட்டினிலே நிறைந்திருப்பாய் பா வலர்க்கு அருள் புரிவாய்
கூட்டினிலே சேர்ந்திருப்பாய் குவலயத்தில் வாழ வைப்பாய்
வீட்டினிலே செறிந்திருப்பாய் வெற்றி மிகத் தந்திடுவாய்
நாட்டினிலே நாயகியாய் நன்மைபல செய்திடுவாய்.

நெஞ்சத்தில் நிறைந்திருந்தாய் நீள் விசும்பில் பரந்திருந்தாய்
மஞ்சத்தில் வீற்றிருந்தாய் மலைமகளாய்க் குடி புகுந்தாய்
பஞ்சணையில் பள்ளிகொண்டாய் பரந்தாமன் உளமிருந்தாய்
தஞ்சமென வந்தோர்க்குத் தரணியிலே கதியானாய்.

துர்க்கையாய் வந்துதித்தாய் துயர்தனையே களைந்து விட்டாய்
கர்ச்சனையால் கலக்கிவிடும் கோளரியின் மீதமர்ந்தாய்
துர்ச்சனரை ஓட்டிவிட்டாய் தொடர்ந்த பகை அழித்து விட்டாய்
அர்ச்சனை செய் பக்தர்களுக் கருள் புரிந்து தேற்றி விட்டாய்.

உழைப்பவர்கள் அகந்தோறும் உத்தமியாய் நிறைந்திருந்தாய்
மழைக்குலத்து அரசியம்மா மறைமலரில் உறைபவளே
அழைப்பர்க்கு இரங்கிவந்து அருள் மழை நீ பொழிவாயே
ஏழையாய்ப் பிறந்தோர்க்கு இன்பவாழ்வு கொடுப்பாயே.

அறிவுச் சுடர் பரப்பி ஆணவத்தின் கறை நீக்கி
நெறியுடன் வாழவைத்து நெஞ்சத்தில் நிறைந்து நின்று
மறைதரும் பொருளிலெல்லாம் மங்களமாய் செறிந்திருந்து
குறைதனைப் போக்கிடுவாய் குலமகளாம் கலைமகளே.

**அ. ஸ்ரீரங்கபாலன்**
*விஞ்ஞானம் (இறுதியாண்டு)*

*(1980ல் கலாசாலையில் இடம்பெற்ற கலைவாணி விழாக் கவியரங்கில் பாடப்பட்ட புதுக்கவிதை)*

# பாலியற் குற்றவாளிகள்

இளம் பிள்ளைகள் சட்டத்தினுல் குற்றவாளிகள் எனத் தீர்மானிக்கப்படும்போது அவர்கள் பாலியற் குற்றவாளிகள் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் நாட்டின் சட்டதிட்டங்களை மீறுபவர்களாகவும், பாடசாலை நிர்வாகத்தினருக்கு சவால் விடுபவர்களாகவும் காணப்படுவர். இவர்கள் தமது சகபாடிகளின் முன்னிலையில் தமது அந்தஸ்தைப் பெறுவதற்காகவும், தம்மைப் பிரபல்யப்படுத்திக்கொள்வதற்காகவும் கொலை, களவு, கற்பழிப்புப் போன்ற தீய செயல்களில் ஈடுபடுகின்றனர். இவர்கள் உளவளர்ச்சி சீரானவர்களாக இருந்தபோதிலும், ஒழுக்கத்தரம் குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். பாலியல் குற்றவாளிகள் உருவாகுவதற்கு வீடு, பாடசாலை, சமூகம் என்பன முக்கிய காரணிகளாக உள்ளன.

வீட்டில் பெற்ருேர்கள் பிள்ளைக்கு வேண்டிய அன்பு, கணிப்பு என்பனவற்றைக் கொடுக்காது மிகவும் கண்டிப்பானவர்களாக இருக்கும்போது, பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அக்கறை ஏதுமின்றி அவர்களைக் கவனிக்காது நடந்துகொள்ளும்போது அல்லது வீட்டில் அளவுக்கதிகமான இயல்பூக்கத் தன்மைகள் (உதாரணமாக போரூக்கம், பாலூக்கம், திரட்டூக்கம்) என்பனவும் கட்டிளைஞர்கள் குற்றவாளிகளாகுவதற்குக் காரணிகளாகின்றன. பெற்ருேர் ஒழுக்கமற்ற நடத்தையைக் கொண்டிருந்தால் பிள்ளையும் அந்நடத்தையைக் கற்றுக்கொள்வான். ஒரு பிள்ளை சிறுவயதில் பெற்ருேரால் புறக்கணிக்கப்பட்டு அல்லது பிரிந்து வாழ நேரிடும் போது அவனிடம் தனிமை உணர்ச்சி மிகுதியாவதால் அவன் நெறிபிறழ் நடத்தையில் ஈடுபடத்தொடங்குகிருன். எதிர்பாராத அதிர்ச்சிகளுக்கு உட்படும் பிள்ளைகளும் நெறிபிறழ்ந்தோரர்க மாறி குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். வறுமையான சூழலில் வாழும் பிள்ளைகள் தமது உணவு, உடை போன்ற தேவைகளைப் பூர்த்தியாக்கிக் கொள்வதற்காக குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

பாடசாலைகளில் குறைந்த நுண்மதியும் கல்வியில் பிற்போக்கும் உள்ள பிள்ளைகள் பள்ளிக்கூடவேலைகளில் தங்கள் திறமைகளைக் காட்டிப் பிறரது கணிப்பையும், மதிப்பையும் பெறமுடியாதபோது சமூக எதிர்ப்பு நடத்தைகளில் ஈடுபட்டுத் தங்களைப் பிரபல்யப்படுத்திக்கொள்ள முயல்கின்றனர். ஆசிரியர் அளவுக்கதிகமாகத் தண்டனை கொடுத்தல், வகுப்பில் கவனிப்பின்மை என்பவைகளாலும் மாணவ்ரிடையே ஏற்படும் போட்டி பொருமைகளினுலும் மனமுறிவடையும் பிள்ளைகள் நெறிபிறழ் நடத்தைகளில் ஈடுபடுவதனுல் குற்றவாளிகள் ஆகின்றனர். துர் அதிர்ஷ்டவசமாக கூடாத நடத்தையுள்ள ஆசிரியரிடம் கற்கநேரிடும் பிள்ளைகள் ஆசிரியரின் நடை, உடை, பாவனைகளைப் பின்பற்றும்போது குற்றவாளிகளாகின்றனர்.

வீடு, பாடசாலை ஆகியவற்றைவிட சுற்ருடலும் பாலியல் குற்றவாளிகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. சுற்ருடலில் உள்ளவர்களது நடத்தையாலும், கூடாத நண்பர்களினுலும் கவரப்படும் இளைஞர்கள், அவர்களைப்போல் தாங்களும் நடக்க முற்படும்போது குற்றம் செய்யத் தொடங்குகின்றனர். பார்க்கத் தகாத சினிமாப் படங்கள், நூல்கள் என்பவற்றைப் பார்க்கநேரிடும்போது தாங்களும் அப்படி நடக்க முற்பட்டு குற்றவாளிகள் ஆகின்றனர். ஒழுக்கச் சீர்கேடு நிறைந்த சனநெருக்கம் கூடிய பகுதிகளில் குற்றச் செயல் புரியும் இளைஞர்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

எல்லாவற்றிலும் மேலாக நிட்சயமாக எதிர்காலமில்லாத மாணவர்கள் சிறிதும் அச்சமின்றி பயங்கரக் குற்றச்செயல்களில் ஈடுபட்டு பாலியற் குற்றவாளிகள் ஆகின்றனர்.

இத்தகைய பாலியற் குற்றவாளிகள் உருவாகும்போது பாடசாலைகளில் அவர்களை இலகுவில் இனங்காணலாம். வித்தியாசமான நடத்தையுடைய பிள்ளைகள், போருக்கம் அதிகமுடைய பிள்ளைகள் ஆகியோர் இத்தகையவராவர். இத்தகைய பிள்ளைகளைச் சீர்படுத்துவதற்கு ஆசிரியர் நல்ல பயிற்சியும் அனுபவ முதிர்ச்சியும் உடையவராகவும், நற்குண, நற்செய்கைகள் உடையவராகவும் இருத்தல் அவசியம்.

ஆசிரியர் இத்தகைய மாணவர்களை இனங்கண்டு அவர்களிடம் நல்ல சமூக ஒழுக்க விழுமியங்களையும், சுய ஒழுக்கக் கட்டுப்பாடுகளையும் விருத்தியாக்க முயற்சி எடுக்கவேண்டும். சமூகத்தால் ஏற்கப்பட்ட விளையாட்டுக்கள், பொழுதுபோக்குகள், குழுச் செயல்கள் ஆகியவற்றில் மாணவர்கள் தமது திறன்களை வெளிக்காட்ட வழி வகுக்கவேண்டும். கல்வியில் பிற்போக்குள்ள மாணவர்களிடம் உள்ள திறன்களைக் கண்டறிந்து அத்திறன்களின்மூலம் அம்மாணவர்களை மற்றவர்களின் கணிப்புக்கும், மதிப்புக்கும் உட்படுத்தலாம். மாணவர்களிடம் விரும்பத்தகாத நடத்தைகள் காணப்படும்போது, ஆசிரியர் அவர்களுடன் நேரடியாகவே கலந்துரையாடி அவற்றின் தீங்குகளை எடுத்துக்கூறவேண்டும். மேலும் அவர்கள் செய்தது குற்றம் என்பதை உணர்த்திக் குற்றத்தை ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும். முடியுமானல் தண்டனை அளிக்கத் தயங்கக்கூடாது.

வீட்டில் அன்பும் ஆதரவும் கிடைக்காத பிள்ளைகளாயின் ஆசிரியர் அவர்களுடன் அன்பாகவும் ஆதரவாகவும் நடந்து கொள்ளவேண்டும். பிள்ளைகள் கூடாத கூட்டத்தினருடன் சேர்வதையும், தேவையில்லாத பொழுபோக்குகளில் ஈடுபடுவதையும் தடைசெய்யவேண்டும். ஒரு பிள்ளை நெறிபிறழ்வான நடத்தையில் ஈடுபட ஆரம்பிக்கின்றுன் எனத் தெரிந்தவுடன், அவனது திறமைக்கேற்ற மேலதிக வேலைகளை ஆசிரியர் அவனுக்குக் கொடுப்பதன்மூலம் அவனது நாட்டத்தையும், சிந்தனையையும் திசைதிருப்பலாம்.

பிள்ளையின் நடத்தை பெற்றோர்மூலம் தீர்த்துவைக்கக் கூடியதாக இருந்தால் பெற்றோரைச் சந்தித்து பிள்ளையின் நிலைபற்றிக் கூறி அதற்காக பெற்றோர் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனைகளைக் கூறலாம். எக்காரணத்தைக்கொண்டும் இத்தகைய பிள்ளைகளை ஆசிரியர் வெறுக்கக் கூடாது.

பிள்ளையின் தன்னம்பிக்கை வளர்வதற்கு சகல வசதிகளையும் ஆசிரியர் செய்து கொடுக்கவேண்டும். வறுமையான குடும்பங்களிலிருந்து வரும் பிள்ளைகளுக்கு சிறு கைத்தொழில்களைப் பழக்கிவிடுவதன்மூலம் அவர்களின் சுயதேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய வருவாயை ஏற்படுத்திக்கொடுக்கலாம். இதற்காகச் சமூக நன்னடத்தை அதிகாரியின் (Probation Officer) உதவியைப் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்விடயத்தில் கோயில், பொழுது போக்கு நிலையங்கள், இளைஞர் மன்றம், நன்னடத்தை நிலையம் போன்ற நிறுவனங்களுடன் ஆசிரியர் தொடர்வைத்துக்கொள்ளல் சிறந்தது.

மாணவர்களின் போருக்கத்தைப் போட்டிகளிலும். பாலூக்கத்தை ஓவியத்திலும், குழுவூக்கத்தை சமூக சேவைகளிலும் நன்நெறிப்படுத்தலாம்.

எனவே வகுப்பறையில் பிள்ளை நெறி பிறழ்ந்தவனென ஆசிரியர் கண்டுகொண்டவுடன் அதற்கான காரணத்தை அறிந்து தக்க நடவடிக்கையை ஆசிரியர் மேற்கொள்வதனல் பாலியற் குற்றவாளிகள் பலர் நாட்டில் உருவாகுவதைத் தடைசெய்யலாம்.

**செல்வி ஸ்ரீதேவி இராஜையா**
விஞ்ஞானநெறி.
(இறுதியாண்டு)

# 9இல் ஒரு விளையாட்டு

$$1=\frac{99-9}{9}-9$$

$$2=\frac{1}{\sqrt{9}}\left(\sqrt{9}+\sqrt{9}\right)$$

$$3=\sqrt{99}\left(9-9\right)+\sqrt{9}$$

$$4=\sqrt{9}+\frac{9}{9}$$

$$5=\sqrt{9}+\frac{9+9}{9}$$

$$6=\sqrt{9}+\sqrt{9}$$

$$7=\frac{99-9}{9}-\sqrt{9}$$

$$8=\frac{99}{9}-\frac{9}{\sqrt{9}}$$

$$9=99-\left(\sqrt{99}-\sqrt{9}\right)\times\left(\sqrt{99}+\sqrt{9}\right)$$

$$10=\frac{999-9}{99}$$

$$11=\frac{999-9}{99-9}$$

$$12=\frac{999}{9}-99$$

$$13=\frac{99-9}{9}+\sqrt{9}$$

$$14=\frac{99}{9}+\sqrt{9}$$

$$15=\frac{99+9}{9}+\sqrt{9}$$

$$16=9\sqrt{9}-\frac{99}{9}$$

$$17=\frac{99}{9}+\sqrt{9}+\sqrt{9}$$

$$18=9\sqrt{9}-9$$

$$19=9+\frac{999-9}{99}$$

$$20=9+\frac{999-9}{9}-99$$

**9 இன் ஒரு விசேட இயல்பு.**

எந்த ஒரு எண்ணையும் 9 ஆல் பெருக்கிப் பெறும் எண்ணின் இலக்கங்களைக் கூட்டினுல் பெறப்படுவதும் 9 ஆகும்.

உ + ம் $12342 \times 9 = 111078$

இலக்கங்களைக் கூட்டினுல் $1+1+1+0+7+8 = 18$

மீண்டும் கூட்டினுல் $1+8 = 9$

இது எல்லா நேர்முழு எண்களுக்கும் பொருந்தும். இதன் மறுதலையாக ஒரு எண் 9 ஆல் வகுபடுமா என்பதை அறிவதற்காக அந்த எண்ணின் இலக்கங்களைக் கூட்டி 9 பெறப்படுகிறதா என்பதிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

இவைகளில் இருந்து 99 இனது பெருக்கங்களை இலகுவாக எழுதலாம். வாசகர்கள் சற்று சிந்தித்து கண்டுபிடியுங்கள்.

**க. சத்தியநாதன்**
**சி. ஜோ. தேவ்ஆனந்**
கணிதம் இறுதியாண்டு.

# சமூகக்கல்வி கற்பித்தலில் ஆசிரியரின் பங்கு

OF SRI LANKA - JAFFNA
RECEIVED
198.-1-20
PERIODICALS

இன்று உலகில் பல்வேறு வகைப்பட்ட பிரச்சினைகள் நாளுக்குநாள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. சிறப்பாக ஆசியாவில் இப்பிரச்சினை வலுப்பெற்றிருப்பதைக்காண முடிகிறது. வன்முறைச் சம்பவங்களும், தனியார் கருத்துவேறுபாடுகளும் தோன்றியே இத்தகைய பிரச்சினைகளுக்கு காரணிகளாக உள்ளன. ஜனநாயக கோட்பாடுகள் சீரழிந்து விசுவாசமற்ற பிரசைகள் தோன்றியும், குணநடைகள் சீரழிந்தும் வருகின்றன. இதன் காரணமாக மனித அடிமைகள் தோன்றி வருகின்றனர். இவை யாவற்றிற்கும், அடிப்படைக் காரணங்கள் யாவை என்று ஆராய்ந்து பார்ப்போமாகில் மனித சமூகம் சமூக அறிவு அற்றும், சமூக மனித மனப்பாங்குகளின்றியும், தனியாள் குணதிசயங்கன் சீரழிந்தும் இருப்பதாலேயாகும். இவற்றை நிவர்த்தி செய்யக்கூடிய ஸ்தாபனமாக பாடசாலை பணியாற்ற வேண்டியுள்ளது. குறிப்பாக சமூகக்கல்வி கற்பிக்கும் ஆசிரியரின் பங்கு மகத்தான தொன்றாகவும் இன்றியமையாததாகவும் இருக்கவேண்டியுள்ளது. இவ் ஆசிரியர்களின் கடமைகள் பலவகைப்பட்டனவாகவும், வேறுபட்டதாகவும் இருக்கவேண்டியுள்ளது. எனவே இவை பற்றி அறிவது சமூகக்கல்வி ஆசிரியரின் தலையாய கடனாகும்.

இவ் ஆசிரியர் குழந்தைகளுக்கு அறிவைத்திரட்ட வழிவகை செய்வதோடு சமூகப் பிரச்சினைகளை விடுவிக்கக்கூடியவராகவும் தகவல்களைத் திரட்டி அதற்கேற்ப வழிமுறைகளைக் கையாள வேண்டியவராகவும் இருக்கின்ற காரணத்தால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள குழந்தைகளின் வழிகாட்டியாகவும் அவர்களுக்கேற்ற வாழ்க்கை வழிகாட்டியாகவும் இருக்கவேண்டியது சமூகக்கல்வி ஆசிரியரின் பொறுப்பாகும். அத்தோடு அவர், அவர்களின் ஆற்றலுக்கேற்ப துறைகளைத் தேர்ந்தெடுக்கச் செய்யவும், சமூகத்தில் பொருத்தப்பாடுடன் வாழ்வதற்கு பயிற்றுவிப்பவராகவும் விளங்க வேண்டியுள்ளார். மகாத்மாகாந்தி அடிகள் கருதியது போல பாடசாலை சமூகத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நிலையமாகவும், புதிய சமூகக் கட்டுப்பாடுகளை வளர்க்கும் நிலையமாகவும் விளங்கவேண்டி இருப்பதால் அதற்கேற்ற பயிற்சியினை அளிப்பது கற்பிப்போரின் கடமையாகும். இத்தகு எதிர்பார்ப்புகளை திறம்பட சாதிக்கக்கூடியவர் சமூகக்கல்வி ஆசிரியரே. இவர் துடிப்புள்ளவராகவும், சமூகத்தின் தலைமைத்துவத்தை ஏற்பவராகவும், வியாக்கியானம் செய்யவேண்டிய இடங்களில் வியாக்கியானம் செய்யக்கூடியவராகவும், சமூகமாற்றத்தை ஏற்படுத்தக்கூடியவராகவும் விளங்க வேண்டியுள்ளார்.

''அரிஸ்டாட்டில்'' கருதியது போல இளம் பிராயத்தினர் அரசியலுக்கு ஏற்றவர்கள் அல்லர். அவர்கள் சிறு பிராயத்தினராக இருப்பதால் எத்தகைய அநுபவங்களையும் பெற்றிருக்கமாட்டார். ஒழுக்கத்தில் நெறிப்படுத்தப்பட்டவர்களுமல்ல. இதன் காரணத்தாலேயே அவர்கள் முதிர்ச்சி பெற முன்னர் அரசியலில் ஈடுபடுவது தவிர்க்கப்படவேண்டும். இதிலிருந்து நாமறிவது என்னவெனில் பிள்ளைகளை காலத்துக்குக் காலம் தேவைக்கேற்ப வழிகாட்டப்பட வேண்டியவர்களேயாவர். இவர்களுக்கு எவ்வாறு நூல்களின் மூலம் அறிவைப் பெறச் செய்வதோடு, மாத்திரம் நின்றுவிடாது அநுபவங்கள் மூலம் அறிவைப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்படவேண்டும்.



250048

சமூகக்கல்வி ஆசிரியர் மேற்கூறிய கருத்துக்களுக்கேற்ப நடைபெறச் செய்வதற்கு முன்னர் தானுகவே, உண்மையான, முழுமையான மனிதனுக இயங்க வேண்டியுள்ளார். பல அநுபவங்களைப் பெற்றும், பல அறிவுகளைப் பெற்றும், பல் திறன்களை வளர்த்தும், புதுப்புது தகவல்களை உடனுக்குடன் அறிந்தும் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. பல துறை வேலைகளையும் செய்பவராக இருப்பதோடு சமூகத்துடன் நட்புறவாக வாழப்பழகுபவராகவும் இருத்தல்வேண்டும். கருத்து வேறுபாடுகளுக்கு இடம் ஏற்படாது அவற்றைச் சுமூகமாகத் தீர்க்கவும், சமூகத்துடன் ஒட்டி வாழக் கூடியவராகவும் சரி எது? பிழை எது? என்பதை அறிந்து கொள்ளக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். இதன் காரணமாகவே ஆசிரிய கலாசாலையிலும் கூட கருத்துக்களை வாரி இறைக்கும் நிலையிலிருந்து இயங்காது அவர்களுக்கேற்ற உண்மையான வழிகாட்டல்களை எடுத்துக்காட்டும் நிலையமாக இயங்கவேண்டியுள்ளது. எனவே சமூகக்கல்வி ஆசிரியன் சமூகப்பிரச்சினைகள் அறியவேண்டி இருக்கிருர். செயல் திட்ட முறைகளும், வெளிக்கள பயிற்சிகளும், குழந்தைகளின் வளர்ச்சியை ஆராய்ந்தறிபவராகவும், சமூகப் பிரச்சினைகளை விடுவிக்கக்கூடிய முறைகளைக் கண்டறிபவராகவும் இருக்க வேண்டியுள்ளது. தற்கால சமூகம் எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாது? செய்யக்கூடாததைச் செய்தால் ஏற்படும் விளைவுகள் யாவை? என்பன பற்றி ஆதாரபூர்வமாக எடுத்து விளக்கி மக்களை வழி நடத்த வேண்டியும் உள்ளார். எனவே காலத்துக்கு ஏற்ப வாழ்வதுடன் வாழ்விக்கவும், வழிகாட்ட வேண்டியவராகவும் இருக்கின்ருர்.

தான் கூறும் கருத்துக்கள் ஒரு பக்கச் சார்பில்லாது, தனது கருத்தேற்றங்களை மக்களுக்குத் திணிக்காது வழிகாட்ட வேண்டியிருப்பதால் தொடர்ந்து அவர் நூல்களையும், சஞ்சிகைகளையும், கற்பதோடு, தகவல் சாதனங்கள் மூலம் அறிவை காலத்துக்குக் காலம் வளர்க்கவேண்டியும் உள்ளார். ஒவ்வொரு தனிமனிதரிலும் மாற்றம் ஏற்பட்டாலேயே அது சமுதாய மாற்றத்திற்கு வழிகாட்ட முடியும். இத்தகைய தனியாள் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடியவர் சமூகக்கல்வி ஆசிரியரே யாவார்.

கருத்து மாறுபாடுகள் ஏற்படும்போது அம்மாறுபாடுகள் சரியானவையா? பிழையானவையா? என்பதை தீர்க்கமாக ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டியுள்ளார். இதற்காக அவர் கலந்துரையாடல்களையும், கருத்து மோதல்களையும், விவாத மேடைகளையும் உருவாக்கி உண்மைத்தகவல்களைப் பெறவேண்டியுள்ளார். தான் கூறும் கருத்துக்களையே மற்றவர்களும் ஏற்கவேண்டும் என்ற சர்வாதிகார நிலையில் இருந்து சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முடிவுகளை மாணவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டியுள்ளது. இதற்காக அவர் தேவைப்படும் இடங்கள் எல்லாவற்றிலும் இருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளப் பின் நிற்கக்கூடாது.

மேலும் பல்வேறு கருவிகளைப் பாவிக்கும் முறைகளையும், சமூகக்கல்வி அறையை உருவாக்கவும், படங்களை வாசிக்கவும், வியாக்கியானம் செய்யவும், பாடங்களை வரையும் திறன்களை வளர்க்க வேண்டியவராகவும், தகவல்களைத் திரட்டும், அறிவு பெற்றவராகவும் தலைமை தாங்கும் பண்பினைக் கொண்டவராகவும், விளங்க வேண்டியுள்ளார்.

எனவே சமூகக்கல்வி ஆசிரியரின் பணி மகத்தானதாகும். இவர் சமுதாயத்தை ஆக்கவும், அழிக்கவும், முடிந்தவராக இருக்கின்ருர். இன்றைய யுகத்திலே மனித ஒருமைப்பாடுகள் வலியுறுத்தப்படுகின்ற காரணத்தால் அவற்றையறிந்து வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் கருவியாக சமூகக்கல்வி ஆசிரியர் இருக்கின்ற காரணத்தால் அதற்கேற்ப செயல்படுவது தலையாய கடமையாகும்.

**திரு. ஒ. குலேந்திரன்**
சமூகக்கல்வி (இறுதியாண்டு)



250043



வலைப்பந்தாட்டக் குழுவினர்



கரப்பந்தாட்டக் குழுவினர்

# நீங்காத நினைவுகள்

*1980 – 01 – 16 :* கலாசாலைப் பிரவேசம்.

கணிதம் (35) விஞ்ஞானம் (28) சமூகக்கல்வி (09) ஆரம்பக்கல்வி (08) தமிழ் (06) ஆங்கிலம் (08) ஆகிய விசேட பயிற்சி நெறிகளுக்கு கலாசாலையின் இரண்டாவது தொகுதியாக 94 பேர் அனுமதிக்கப்பட்டனர்.

*1980 – 02 – 14 :* மகா சிவராத்திரி விழா.

இந்து மாமன்றம் சிறப்பாக நடத்தியது.

*1980 – 03 – 12 :* செயற்திட்டவேலை.

வளிமண்டல ஆராய்ச்சி நிலையம், சிறைச்சாலை, மதுக்குதம், காகித ஆலை, வலையிறவுப் பாலம், வயோதிபர் நிலையம், புகைப்பட நிலையம், இராமகிருஷ்ண சங்க குருகுலம், கரடியனுறு விவசாயப்பண்ணை ஆகிய இடங்களுக்கு மாணவர் குழுக்கள் சென்று அவற்றின் செயற்பாடு, பயன்பாடு என்பவற்றை ஆராய்ந்தனர்.

*1980 – 03 – 31 :* சுற்றுலாக்குழு வருகை.

பலாலி ஆசிரியர் கலாசாலை கணிதநெறிப் பயிற்சி ஆசிரியர்கள் 60 பேர் அகில இலங்கைச் சுற்றுலாவை மேற்கொள்ளும் வழியில் எமது கலாசாலைக்கும் வருகை தந்த பொழுது இராப்போசன விருந்தளித்து கௌரவிக்கப்பட்டனர்.

*1980 – 04 – 01 :* கரப்பந்தாட்டப் போட்டி.

விரிவுரையாளர்களுக்கும் பயிற்சி ஆசிரியர்களுக்குமிடையே சினேகபூர்வமான கரப்பந்தாட்டப்போட்டி நடைபெற்றது.

*1980 – 06 – 26 :* அம்பாறைச் சுற்றுலா.

''கம் உதாவ'' பொருட்காட்சியைப் பார்வையிடும் நோக்கோடு அம்பாறைச் சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது. வழியில் இறக்காமம் ஓட்டுத் தொழிற்சாலை, ஹிங்குரான சீனித் தொழிற்சாலை, தீகவாபி புராதன நகர், இக்கினியாகல அணைக்கட்டு, நீர் மின்சக்தி நிலையம் என்பன பார்வையிடப்பட்டன.

*1980 – 09 – 08/14 :* அகில இலங்கைக் கல்விச்சுற்றுலா.

மட்டக்களப்பு – பொலநறுவை – சிகிரியா – கண்டி – நுவரெலியா – அவிசாவளை – கொழும்பு – காலி – உடவளவை – கதிர்காமம் – அம்பாறை – மட்டக்களப்பு என்னும் வழிகளூடாக ஏழு நாட்கள் சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது. புராதன நகர்கள், பூங்காக்கள், தொழிற்சாலைகள், பொருட்காட்சிச் சாலைகள், நீர்ப்பாசனத் திட்டங்கள் வணக்கத்தலங்கள் என்பன பார்வையிடப்பட்டன. உயன்வத்தை ஆசிரியர் கலாசாலை, அழுத்கமை ஆசிரியர் கலாசாலை என்பன எம்மை வரவேற்று உபசரித்தன. இச்சுற்றுலாவின் வெற்றிக்கு விரிவுரையாளர்கள் திரு. சி. புலந்திரன், ஜனுப் எம். எஸ். ஏ. அசீஸ் ஆகியோர் வழிகாட்டினர்.

**1980 – 10 – 10 :** சரஸ்வதி பூசை.

10ம் திகதி கும்பம் வைத்தலுடன் ஆரம்பித்து 18ம் திகதிவரை நவராத்திரி விழா கொண்டாடப்பட்டது. திருமகள், மலைமகள், கலைமகள், ஆகிய மூன்று இல்லங்களும் மூன்றுமூன்று நாட்களாக விழாவெடுத்தன. மண்டபம் அலங்கரிக்கப்பட்டு கோலம் இடப்பட்டது. சமயப் பெரியார்களின் சொற்பொழிவுகள் இடம்பெற்றன. கலாநிதி ஆ. கந்தையா, 'செம்பியன் செல்வன்.' பொலிசு அத்தியட்சகர் திரு. ச. அம்பிகாபதி, உதவி அரசாங்க அதிபர் திரு. வி. சாம்பசிவ ஐயர், பண்டிதர் எஸ். விசுவலிங்கம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். பத்தாம் நாள் விஜயதசமி அன்று ''ஏனடி இந்த எழில்'' என்ற தலைப்பில் விரிவுரையாளர் கவிஞர் 'திமிலைத்துமிலன்' தலைமையில் கவியரங்கு இடம்பெற்றது. ஆசிரிய மாணவர் பங்குபற்றி கவித்திறமையை வெளிக்காட்டினர்.

**1980 – 11 – 10 :** சிறப்புரை.

''கல்வியியல் ஓர் அறிமுகம்'', ''கல்வி உளவியல்'' ஆகிய நூல்களின் ஆசிரியரும், கொழும்பு பல்கலைக்கழக கல்விப்பீடத்தைச் சேர்ந்தவருமான பேராசிரியர் ச. முத்துலிங்கம் அவர்கள் கலாசாலைக்கு வருகைதந்து சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

**1980 – 11 – 10** நத்தார் சோபன ஆராதனை.

கிறிஸ்தவ மாணவர் மன்றம் நத்தார் சோபன ஆராதனையை சிறப்பாக நடத்தியது.

**1980 – 12 – 02 :** வருட இறுதி விருந்து.

ஒருவருட உள்ளகப் பயிற்சியை முடித்து வெளியேறும் ஆசிரிய மாணவர்கள் அதிபர், விரிவுரையாளருக்கு இராப்போசன விருந்தளித்துச் சென்றனர். பிரதம விருந்தினராக கிழக்குப்பிராந்திய கல்விப்பணிப்பாளர் ஜனாப் எஸ். எம். ஏ. கபூர் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

**1982 – 07 – 06 :** மீண்டும் கலாசாலைப் பிரவேசம்.

ஒன்றரை வருட வெளிக்களப்பயிற்சியை நிறைவுசெய்து மீண்டும் உள்ளகப் பயிற்சிக்காக கலாசாலைக்கு ஆசிரிய மாணவர் வந்தனர்.

**1982 – 07 – 29 :** கல்விச் சுற்றுலா.

ஒருநாள் கல்விச்சுற்றுலாவை மேற்கொண்டு வாழைச்சேனை காகித ஆலைக்கு ஆசிரிய மாணவர் விஜயம் செய்தனர். திரும்பும்வழியில் பாசிக்குடா சென்று கடற்குளிப்பில் ஈடுபட்டனர்.

**1982 – 09 – 06/09 :** சிறப்புச் சொற்பொழிவுகள் :

வித்துவான் F. X. C. நடராசா, செல்வி N. நடராசா (விவசாய போதனாசிரியை) வைத்திய கலாநிதி K. தங்கவடிவேல், திரு. பீ. சரவணபவான் (திட்டமிடற் பகுதி கச்சேரி) வித்துவான் சா. இ. கமலநாதன் ஆகியோர் பயனுள்ள கருத்துக்கள் வழங்கினர்.

**1982 – 10 – 24/27 :** சரஸ்வதி பூசை.

மூன்று நாள்கள் சரஸ்வதிக்கு விழா எடுக்கப்பட்டது. இறுதிநாள் விஜயதசமி அன்று ''காணலாம் கலைவாணியை'' என்ற தலைப்பில் கவியரங்கும், கலை நிகழ்ச்சிகளும் சிறப்பாக இடம்பெற்றன.

1982 – 11 – 02/05 : கற்பித்தற் பயிற்சி.

கற்பித்தற் பயிற்சிக்காக ஆசிரிய மாணவர்கள் அண்மையிலுள்ள பாடசாலைகளுக்குச் சென்று தமது திறமையை வெளிப்படுத்தினர்.

1982 – 11 – 08 : ''கலைச்செல்வி'' மலர் வெளியீட்டுக்குழு.

இன்று மலர் வெளியீட்டுக்குழு அமைக்கப்பட்டது. குறுகிய காலத்துள் பல இடர்களின் மத்தியில் செயற்படும் பணி குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

1982 – 11 – 23 : நத்தார் சோபன ஆராதனை.

கிறிஸ்தவ மாணவர் மன்றம் வெகு விமரிசையாக நத்தார் சோபன பாட்டாராதனையை நடத்தியது.

1982 – 11 – 24 : பிரிவுபசாரம்.

முதலாம் வருட ஆசிரிய மாணவர்கள், இறுதியாண்டு மாணவர்கள் பயிற்சியைப் பூர்த்திசெய்து வெளியேறுவதை முன்னிட்டு மதியபோசனத்துடன் பிரியாவிடை அளித்தனர்.

1982 – 11 – 25 : வருட இறுதி விருந்து.

பயிற்சியை முடித்து வெளியேறும் ஆசிரிய மாணவர்கள், அதிபர், விரிவுரையாளர்களைக் கௌரவிக்குமுகமாக மதியபோசனமளித்தனர். தொடர்ந்து புகைப்படப்பிடிப்பு நடைபெற்றது.

1982 – 12 – 04 : பிரிவுபசாரம்.

மூன்று வருட ஆசிரியர் பயிற்சியை முற்றாக முடித்து வெளியேறும் பயிற்சி ஆசிரியர்கள் தேனீர் விருந்தளித்து பிரியாவிடைகூறி வெளியேறினர். இடையீடிட்ட நிறுவன வெளிக்களப் பயிற்சித் திட்டத்தின் (Afit) இறுதித் தொகுதியினர் இவர்களாவர். பிரியாவிடை உருக்கமாக அமைந்தது.

---

**வசைக்குச் செவி கொடாதே**

இழித்துரைப்பதைப் பொருட்படுத்தாதவனிடம் எந்தத் துன்பமும் வந்து சேராது.

— எபிரேமிய மதம்



250043

## ஆசிரிய மாணவர் மன்றம்

### 1980 முதலாண்டு

முதலாம் பருவம்:

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. ஓ. குலேந்திரன். |
| | | திருமதி. க. கனகரெத்தினம் |
| செயலாளர் | : | திரு. மு. வசந்தகுமார். |
| | | செல்வி பி. இராசையா. |
| விளையாட்டுச் செயலாளர் | : | திரு. சீ. ஜோ. தேவ்ஆனந். |
| | | செல்வி ஸ்ரீ. இராசையா. |

இரண்டாம் பருவம்:

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. மா. லோகநாதன் |
| | | செல்வி வி. செல்வநாயகம். |
| செயலாளர் | : | திரு. செ. ஸ்ரீகிருஷ்ணராசா. |
| | | திருமதி யோ. பரசுராமபிள்ளை. |
| விளையாட்டுச் செயலாளர் | : | செல்வி அ. பு. கபிரியல் |
| | | திரு. பே. இராசேஸ்வரன் |

மூன்றாம் பருவம்:

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. க. கந்தசாமி |
| | | செல்வி பி. சோமசுந்தரம் |
| செயலாளர் | : | திரு. மா. நடராசா |
| | | திருமதி. சா. சூசைதாசன் |
| விளையாட்டுச் செயலாளர் | : | திரு. சி. வேலுப்பிள்ளை |
| | | செல்வி வ. தங்கராசா |

LIBRARY UNIVERSITY OF JAFFNA

### 1982 இறுதியாண்டு

இரண்டாம் பருவம்:

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. மா. லோகநாதன் |
| | | செல்வி ஸ்ரீ. இராசையா |
| செயலாளர் | : | திரு. அ. ஸ்ரீரங்கபாலன் |
| | | செல்வி ம. சண்முகம்பிள்ளை |
| விளையாட்டுச் செயலாளர் | : | திரு. சீ. ஜோ. தேவ்ஆனந் |
| | | செல்வி உ. முத்தையா |

மூன்றாம் பருவம்:

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. ஓ. குலேந்திரன் |
| | | செல்வி ஸ்ரீ. இராசையா |
| செயலாளர் | : | திரு. சீ. ஜோ. தேவ்ஆனந் |
| | | செல்வி வி. செல்வநாயகம். |
| விளையாட்டுச் செயலாளர் | : | திரு. மா. அருளம்பலம் |
| | | செல்வி உ. முத்தையா |



250048

# 1982 ல் பயிற்சி முடித்து வெளியேறும் ஆசிரியர்கள்

**கணித நெறி:**

1. திரு. சி. அருமைப்பிள்ளை - புதுக்குடியிருப்பு, தம்பலகாமம்.
2. திரு. கு. அமிர்தநாதன் - மார்க்கட் ஒழுங்கை, கல்லாறு.
3. திரு. சி. அருளம்பலம் - வீரமுனை, சம்மாந்துறை.
4. திரு. பே. இராஜேஸ்பரன் - தம்பிலுவில் - 2.
5. திரு. பூ. கணேசமூர்த்தி - ஆரையம்பதி, காத்தான்குடி.
6. திரு. த. கிருஷ்ணமூர்த்தி - ஆரையம்பதி - 1, காத்தான்குடி.
7. திரு. ப. கோவிந்தசாமி - களுவாஞ்சிக்குடி.
8. திரு. அ. சக்கரவர்த்தி - சித்தாண்டி, முறக்கொட்டான்சேனை.
9. திரு. செ. சந்திரமோகன் - வீரமுனை, சம்மாந்துறை.
10. திரு. க. சத்தியநாதன் - சித்தாண்டி, முறக்கொட்டான்சேனை.
11. திரு. கி. ஸ்ரீஸ்கந்தராசா - தம்பிலுவில் - 2.
12. திரு. அ. சுந்தரலிங்கம் - ஆனந்த பவனம், ஆரையம்பதி - 1, காத்தான்குடி.
13. திரு. மா. தங்கவடிவேல் - ஆரையம்பதி, காத்தான்குடி.
14. திரு. க. தயாநிதி - கல்குடா வீதி, வாழைச்சேனை.
15. திரு. சீ. ஜோ. தேவ்ஆனந் - 322, துறைநீலாவணை - 6.
16. திரு. மா. நடராசா - கன்னன்குடா (கி. மா.)
17. திரு. க. நவரெத்தினராசா - வீரமுனை, சம்மாந்துறை.
18. திரு. கு. மாணிக்கவாசகர் - 6, தண்ணீர்த்தாங்கி வீதி, மட்டக்களப்பு.
19. திரு. அ. மகாலிங்கசிவம் - அமரசிங்கம் வீதி, பெரிய போரதீவு.
20. திரு. மு. வசந்தகுமார் - 19/3, எல்லை வீதி, மட்டக்களப்பு.
21. திரு. மா. லோகநாதன் - அக்கரைப்பற்று - 7.
22. திரு. சி. ரவீந்திரன் - 45, பாடசாலை ஒழுங்கை, திருகோணமலை.
23. செல்வி. மா. இராசமாணிக்கம் - பிரதான வீதி, களுவாஞ்சிக்குடி.
24. திருமதி. வ. கருணாநிதி - பிரதான வீதி, கல்லடி, மட்டக்களப்பு.
25. செல்வி. பூ. கந்தையா - புதுக்குடியிருப்பு, தம்பலகாமம்.
26. திருமதி. நி. குகமூர்த்தி - 3, ஞானசூரியம் சதுக்கம், மட்டக்களப்பு,
27. திருமதி. கோ. இலிங்கரெட்ணம் - 240/2, சிவன்தேர்முட்டி ஒழுங்கை, திருகோணமலை.
28. திருமதி. ஹ. ம. வ. சாமுவேல் - 13 26, ஹெலகம வீதி, பதுளை.
29. திருமதி. வ. சுந்தரமூர்த்தி - சித்தாண்டி, முறக்கொட்டான்சேனை.
30. செல்வி. வி. செல்வநாயகம் - 4, தாமரைக்கேணி குறுக்கு வீதி, மட்டக்களப்பு.
31. செல்வி. இ. செல்வநாயகம் - 37, அதிகார் வீதி, மட்டக்களப்பு.
32. திருமதி. அ. பரமேஸ்வரன் - ''தயாபதி'', சரவண வீதி, கல்லடி, மட்டக்களப்பு.
33. திருமதி. க. திருச்செல்வம் - பிரதான வீதி, பெரிய போரதீவு.
34. செல்வி. இ. ஆரோக்கியம் - சந்தணத்தறை, உடுப்பிட்டி.
35. திருமதி. பி. சின்னையா - 10, கோவிந்தன் வீதி, மட்டக்களப்பு.

**விஞ்ஞான நெறி:**

1. திரு. இ. வேலுப்பிள்ளை - ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று.
2. திரு. இ. தட்சணாமூர்த்தி - தம்பட்டை, தம்பிலுவில்.
3. திரு. செ. மகாநாதசிவம் - ஆரையம்பதி, காத்தான்குடி.
4. திரு. செ. சண்முகநாதன் - வட்டார இல. 2, சாம்பல்தீவு.
5. திரு. அ. நித்தியானந்தமூர்த்தி - கிளிவெட்டி.
6. திரு. அ. ஸ்ரீரங்கபாலன் - 109, கல்லூரி வீதி, திருகோணமலை.
7. திரு. மா. அருளம்பலம் - விளாவெட்டுவான், கன்னன்குடா.
8. செல்வி. மு. உரோகினிதேவி - 57. சென். மேரீஸ் வீதி, திருகோணமலை.
9. செல்வி. ஸ்ரீ. இராசையா - 324, அன்புவழிபுரம், திருகோணமலை.
10. செல்வி. வ. வயிரமுத்து - ஆலய வீதி, மூதூர்.
11. செல்வி. பெ. அழகம்மாள் - 13, ஞானசூரியம் சதுக்கம், மட்டக்களப்பு.
12. செல்வி. சு. சா. இராசையா - ஏறாவூர் — செங்கலடி.
13. திருமதி. தே. சரவணமுத்து - காரைதீவு - 2 (கி. மா.)
14. திருமதி. ச. சந்திராவதி - மார்க்கட் வீதி, தம்பிலுவில் - 2.
15. செல்வி. ம. சண்முகம்பிள்ளை - 2ம் வட்டாரம், நிலாவெளி, திருகோணமலை.
16. திருமதி. நி. அழகுராசா - 133, பிரதான வீதி, திருகோணமலை.
17. செல்வி. க. கந்தையா - சவளக்கடை, கல்முனை.
18. செல்வி. ப. பொன்னுத்துரை - நடுப்பிரப்பன் திடல், தம்பலகாமம்.
19. திருமதி. சி. மகாலிங்கம் - 155/4, ஏரன்ஸ் லேன், தாண்டவன்வெளி, மட்டக்களப்பு.
20. செல்வி. இ. பிரேமாவதி - ஏறாவூர் - 1, செங்கலடி.
21. திருமதி. ஐ. ரவீந்திரன் - 47, சின்ன உப்போடை வீதி, மட்டக்களப்பு.
22. செல்வி. சு. முருகையா - 94, பார் வீதி, மட்டக்களப்பு.
23. திருமதி. எஸ். மனோகரதாஸ் - இல. 29, சின்ன உப்போடை வீதி, மட்டக்களப்பு.
24. திருமதி. எஸ். ரி. ஏ. வசந்தகுமார் - அமிர்தகழி, மட்டக்களப்பு.
25. திருமதி. கா. சத்தியமூர்த்தி - இல. 16, சூரியா லேன், மட்டக்களப்பு.
26. திருமதி. டி. பி. தேவசகாயம் - ஆதார வேலைத்தலம், உடவளவை.
27. திருமதி. சியாமளா சூரியகுமார் - மஞ்சந்தொடுவாய், காத்தான்குடி.
28. திருமதி. வசுந்தராதேவி செபராசா - மாதர் றோட், நாவற்குடா, காத்தான்குடி.

**சமூகக்கல்வி நெறி:**

1. திரு. வீ. அரசரெத்தினம் - கல்குடா வீதி, வாழைச்சேனை.
2. திரு. ஆ. இராமர் - ஆயித்தியமலை, கரடியனாறு.
3. திரு. ஒ. குலேந்திரன் - "பாக்கியபதி", ஆலய வீதி, மூதூர்.
4. திரு. சா. சீவியராசா - வக்கர் மாவடி வீதி, கல்லடி, மட்டக்களப்பு.
5. திரு. க. தர்மலிங்கம் - சுதர்சன வாசம், குருக்கள்மடம்.
6. திரு. கு. வன்னியசிங்கம் - கிரான்குளம், குருக்கள்மடம்.
7. திருமதி. யோ. பரசுராமபிள்ளை - வாழைச்சேனை.
8. திருமதி. அ. பு. யோகராசா - 'நவயாழ்', வாகரை.
9. திருமதி. பி. இ. ஹன்டி - 45, முதலியார் சின்னலெப்பை வீதி, மட்டக்களப்பு.

**ஆரம்பக்கல்வி நெறி :**

1. திரு. க. இரத்தினசிங்கம் - வித்தியாலய றோட், மன்னம்பிட்டி.
2. திரு. கோ. திரவியராசா - சம்பூர்-3, மூதூர்.
3. திரு. க. விஜயகுமார் - கஸ்கிகன் வீதி, திருகோணமலை.
4. திரு. க. கந்தசாமி - 69, இராஜவரோதயம் வீதி, திருகோணமலை.
5. திருமதி. இ. அருளானந்தம் - "ராஜகிரி" 2ம் குறிச்சி, காரைதீவு.
6. செல்வி. த. வரதநாயகி - 25/8, கல்லூரி வீதி, திருகோணமலை.
7. திருமதி. நி. மாணிக்கத்தியாகராஜா - 37, பிரதான வீதி, திருகோணமலை.
8. செல்வி. இ. எலிசபெத் - 37, வெயிலி வீதி, சின்ன உப்போடை, மட்டக்களப்பு.

**தமிழ் நெறி :**

1. திரு. பொன். இரத்தினசிங்கம் - நளாயினிவாசா, பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர்.
2. திரு. க. கனகராசா - ஆஸ்பத்திரி வீதி, மன்னம்பிட்டி.
3. திரு. செ. ஸ்ரீகிருஷ்ணராசா - சேனையூர், கட்டைபறிச்சான்.
4. திரு. சா. வி. ஜெயசுந்தரம் - ஆரையம்பதி-1, ஆரையம்பதி.
5. செல்வி. க. பூபாலபிள்ளை - முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை.
6. செல்வி. ஞா. ஸ்ரீமதிதேவி - மகிழவெட்டுவான், ஆயித்தியமலை.

**ஆங்கில நெறி :**

1. திரு. எம். பரமானந்தம் - அன்பீல் தோட்டம், டிக்கோயா.
2. திரு. இ. எம். ஜே. குரூஸ் - மூதூர் - 7.
3. திருமதி. இ. எஸ். அருட்பிரகாசம் - "ஜெபவாசா", ஏறாவூர் - 5.
4. திருமதி. சி. இராமசாமி - 68/9 பிறிட்ஜ் வீதி, கொழும்பு - 2.
5. திருமதி. கே. கனகரெத்தினம் - திருஞானசம்பந்தர் வீதி, சிவன்கோயிலடி, திருகோணமலை.
6. திருமதி. எஸ். சூசைதாசன் - 22, முதலியார் வீதி, மட்டக்களப்பு.
7. திருமதி. ரீ. மகாலிங்கசிவம் - ஆரையம்பதி - 1, காத்தான்குடி.
8. திருமதி. வீ. யோகேந்திரநாதன் - "பரணி" ஆரையம்பதி - 3, காத்தான்குடி.

ARCHIVES



1982ல் மூன்ருண்டுப் பயிற்சி முடித்து வெ



ப் பயிற்சி முடித்து வெளியேறும் ஆசிரியர்கள்

# கலாசாலை வாழ்த்துப்பா

### பல்லவி

ஒருதனி முதல்தரு மாதமிழ் வாழ்க
ஓதும் நல் மாணவர் வாழ்க.

### சரணங்கள்

ஸ்ரீலங்கா தேவிதரு மட்டுமா நகரில்
மாபெரும் ஆசிரியர் மன்றம்
ஆனநல் ஞான ஒளியினை உதவும்
அரசினர் நீடூழி வாழ்க
அறிவினை யாமறிவோமே
அறிவதும் பிறர்க்காமே
அழகுறப் பயின்றிடு வோமே — ஜெயமே
ஜெயமே, ஜெயமே, ஜெய ஜெய ஜெய ஜெயமே
ஓதும் நல் மாணவர் வாழ்க.

உண்மையும் நன்மையழகாகிய நோக்கமும்
உள்ளதோர் நல்லவராவோம்
திடகாத்திர தேகமும் காத்திர மனமும்
காணும் நல் வீரர்களாவோம்
கல்வியின் மூலமும் நாமே
கடவுளை அடைந்திடுவோமே
களங்கமில் தொண்டு செய்வோமே — ஜெயமே
ஜெயமே, ஜெயமே, ஜெய ஜெய ஜெய ஜெயமே
ஓதும் நல் மாணவர் வாழ்க.

நம் மாணவ மாணவி பரிசுத்த தன்மை
மதித்து நல் அறநெறி புகழ்வோம்
சாதனை போதனை யாவிலும் சுத்த சன்
மார்க்க நல் ஆசிரியராவோம்
ஆதியில் மானிடர் ஒன்றே
ஆண்டவன் என்பதும் ஒன்றே
ஒருயிர் போலினி வாழ்வோம் — ஜெயமே
ஜெயமே, ஜெயமே, ஜெய ஜெய ஜெய ஜெயமே
ஓதும் நல் மாணவர் வாழ்க.

With Best Compliments

from

Catholic Press

18, Central Road,

Batticaloa.

PRINTING AND BOOK BINDING

Telephone : 065 - 2364.

CATHOLIC PRESS, BATTICALOA.